கோகுலம்

GOKULAM

அக்டோபர்'86 ரூ 2.





நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை

தோற்றம்: 19-10-1888 மறைவு: 24-8-1972

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும்
— தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
— பாரதியார்.

1986 அக்டோபர் இதழ்
மலர் 4 இதழ் 9
தனிப்பிரதி ரூ 5/—
ஆண்டுச் சந்தா ரூ 24/—
கௌரவ ஆசிரியர் :
-அழ. வள்ளியப்பா.



புகைப்படம்: எம். நடராஜன்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

ஒரு சிறுவன் தெரு ஓரத்திலிருக்கும் மாமரத்திலுள்ள பழத்தைக் குறிபார்த்துக் கல் எறிகிறான். அவன் எறிந்த கல், மரக் கிளையிலே பட்டுத் தெருவிலே நடந்து செல்லுகிற ஒருவரின் காலுக்குச் சிறிது தூரத்திலே வந்து விழுகிறது. உடனே அவருக்கு அபாரமான கோபம் வந்துவிடுகிறது. ''அட பாவி, நீ எறிந்த கல், என் காலில் பட்டிருந்தால், இந்நேரம் என்ன ஆகியிருக்கும்? எலும்பு முறிந்து இரத்தம் ஒழுகி ஆபத்தாக முடிந்திருக்குமே!'' என்று சீறுகிறார்.

காலிலே கல் படவில்லை. சற்று தள்ளித்தான் விழுந்தது. அதற்கே அவருக்கு அவ்வளவு கோபம்! ஆனால், துப்பாக்கியால் குறிபார்த்துச் சுட்டு குண்டுகளால் மார்பைத் துளைத்தான் ஒரு கயவன். உயிர்போகும் நிலையிலும் அவனை ஒன்றும் சொல்லவில்லை. 'ஹே ராம், ஹே ராம்' என்று கூறியபடியே மண்ணிலே சாய்ந்தார் மகாத்மா காந்தி.

இத்தகைய நம் தேசத் தந்தை, உலகம் போற்றும் உத்தமர் படம் நம் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டியது அவசியம். 1983 அக்டோபரில் காந்திஜியின் படத்தை வெளியிட்டு, அதுவரை அவரது படம் இல்லாத வீடுகளில் அந்தப் படத்தையாவது தனியாக எடுத்து ஓர் அட்டையில் ஒட்டிச் சுவரிலே மாட்டி வைக்கும்படி கேட்டுக் கொண்டோம். இன்னும்கூட சில வீடுகளில் அவர் படம் இல்லாதிருக்கலாம். அவர்களுக்காக மீண்டும் ஒருமுறை காந்திஜியின் திரு உருவப் படத்தை இந்த இதழில் வெளியிட்டிருக்கிறோம்.


அவரது உருவப் படத்தைப் பார்க்கும்போதெல்லாம், தெய்வ பக்தி, தேச பக்தி, சத்தியம், அன்பு, அகிம்சை, கடமை உணர்வு, காலந்தவறாமை, தூய்மை, எளிமை போன்ற பல நல்ல பண்புகளை நாமும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றும். நாள் ஆக ஆக அந்த உணர்வே நம்மை மேன்மேலும் உயர்த்தும். இதில் ஐயமில்லை.

சென்ற 'மே' இதழில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியவர்கள் அறிவித்த போட்டி முடிவுகளை இந்த இதழில் காணலாம். பரிசு பெற்றவர்களில் சிலருடைய புகைப்படங்கள் இன்னும் வந்து சேராததால் அடுத்த இதழில் அனைவரது படங்களையும் ஒன்றாக வெளியிடவிருக்கிறோம்.

—அழ. வள்ளியப்பா

இந்த இதழ் எழுத்தாளர்கள்


வேதம்


இளந்தாரகை


பிருந்தாவனக் கதாசிரியர்கள்



ஆர். சுரேஷ்


எஸ். கோபிநாதன்

பிருந்தாவனக் கவிஞர்கள்


ந. முத்து இராம பட்டவராயன்


கே. பிரபு


ஏ. ரசீத்


க. கோகிலவாணி

அட்டை வண்ணப்படம்: சரஸ்வதி சத்தியமூர்த்தி



சார் தபால்!

கோகுலத்திற்கு கின்னஸில் இடம்!

* 'என் குழந்தைப் பருவம்' வரிசையில் ஆசிரியர்களின் நல்லெண்ணத்தாலும், ஆலோசனைகளாலும் பெரும்பயன் அடைந்த டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் கூறிய கருத்துக்கள் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தன.

— என். சந்திரசேகரன், கோட்டாத்தூர்.

* இன்றும் கரூர் சென்றால், மறவாமல் தமது ஆசிரியரைப் பார்க்கும் டாக்டர் குழந்தைசாமி அவர்களின் பண்பு நலன்களை அறிந்து வியந்தேன். அவர் எழுதிய சிறப்பான அந்தச் செய்யுள் மிக இனிமை!

— பாலா. அசோக், திருச்சி — 1.

* 'பாரதியார் வாழ்விலே' — நிகழ்ந்த சம்பவங்களையும் செய்திகளையும் அருமையாகத் தொகுத்து வழங்கிய கோகுலத்தை எப்படிப் பாராட்டுவது என்றுதான் தெரியவில்லை.

— பா. கிருஷ்ணதாஸ், கும்பகோணம் —1.

* எங்களது ஸ்கூலில் தேசத் தலைவர்களின், பெயர்களை மட்டுமே கேட்கிறோம். கோகுலத்தில் அவர்களைப் படங்களிலே பார்க்கிறோம். நீங்கள் வெளியிடும் பல தேசத்துப் பெருந்தலைவர்களின் படங்களை நான் கத்தரித்து, பிரேம் போட்டு வைத்துள்ளேன்.

—எம். எச். சாதிக்பாட்சா, நீடூர் நெய்வாசல்.

* ஆனந்தியின் கதை வசனம் அபாரம். விநுவின் காமிரா கண்ணைக் கவர்ந்தது. கோகுலம் புரொடக்ஷனில் வெளியான 'அபிமன்யு' படத்தைப் பார்த்து அகமகிழ்ந்தோம்.

— ஜி. கௌசல்யா (6165), ஸ்ரீரங்கம்.

* இரண்டு ரூபாய்க்குள் பல நன்னெறிக் கதைகளை வெளியிட்டு என் போன்ற குழந்தைகளின் உலகத்துக்கு நல்லறிவூட்டும் கோகுலத்தின் சாதனை 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெற வேண்டியதாகும்.

— டி. சாவித்திரி (554), பழனி — 1.

* நாகூர் ரோஜா அவர்களின் பறவைகளைப் பற்றிய ஆய்வு நல்லதொரு பொழுது போக்கு. பாராட்டுக்கள். சென்னை — 17 ல் அமைந்திருக்கும் மணிமேகலைப் பிரசுரம்,' 'உலகத்துப் பறவையினங்கள்' என்ற நூலை வெளியிட்டுள்ளது. அதை வாங்கிப் படித்தால் மேலும் பயன் பெறலாம்.

— சிவ. அய்யப்பன் (12,088), இராஜக்க மங்கலம்

* திப்பிலி ராஜாவும் காணாமற் போன நெடுஞ்சாலையும் மனம் விட்டுச் சிரிக்கச் செய்தன.

— கு. திருஞானசம்பந்தம், காரைக்குடி.

* 'ஆபத்தோடு ஒரு விளையாட்டு' — குறும்புக்காரர்களுக்கு நல்லதொரு பாடம்.

— ஆர். பிரபுராமச்சந்திரன், பெங்களூர் — 50.

* சத்துணவுக் கூடங்களை மாலை வேளையில் குழந்தைகள் நூலகமாகப் பயன்படுத்தும் யோசனை அருமையான யோசனை. உடனடியாக அமுல்படுத்தலாம்.

— கு., வைகுண்டராமன், குளேஸ்வரன்பட்டி.

* 'பேச்சிலே வெற்றி பெற' என்ற தலைப்பில் கொடுக்கப்பட்ட குறிப்புகளைப் படித்தேன். அதன்படி ஆடிப் பண்டிகையன்று எங்கள் பள்ளியில் நடந்த பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு இரண்டாவது பரிசாக 'விவேகானந்தரின் அறிவுரைகள்' என்ற புத்தகத்தைப் பெற்றேன். பரிசு பெற வழி காட்டிய திரு. ஆர். நாச்சியப்பனுக்கு நன்றி.

— என். எஸ். ஆனந்தன் (13,713), நரசிபுரம்.

* நான் இலங்கையின் தலைநகராகிய கொழும்பிலுள்ள சென்தோமஸ் புனித கல்லூரியில் 7 ஆம் வகுப்பில் கல்வி பயில்கிறேன். கோகுலத்தில் வரும் மின்மினிக் கதைகள், உருவகக் கதைகள், பிருந்தாவனம், வண்ணப் படக்கதை போன்றவற்றை ஆர்வமுடன் படிப்பேன். மற்றும் இதிலுள்ள சிறுசிறு அறிவியல்சிந்தனைகளையும்விரும்பிப் படிப்பேன். மொத்தத்தில் கோகுலம் என் போன்ற நேயர்களின் அபிமானப் புத்தகம்.

— இ. செந்தில்குமார், கொழும்பு — 6.

* பிருந்தாவனம் பகுதியில் 'சென்னைக்கு முதல் இடம்' என்று குறிப்பிட்டு, 600 001 முதல் 600 098 வரை உள்ளதாக இருக்கிறது. ஆனால், தற்போது 600 114 வரை சென்னையில் பின்கோடு உள்ளது.


— எம். இராதாகிருஷ்ணன், வளையாம்பட்டு.

* ரோகிணி ராக்கெட்டைச் செலுத்திய ஆண்டு 1987 என்றிருக்கிறது இது அச்சுப் பிழைதானே?

— சி. சுப்பிரமணியன் (7653), நெய்வேலி — 1

(ஆம், 1967 என்று இருக்க வேண்டும். — ஆசிரியர்)





நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

நம் நாடு அடிமைப்பட்டுக் கிடந்த போது மகாத்மாவின் கொள்கைகளை இனிய தமிழ்க் கவிதைகள் மூலம் எடுத்துக் கூறி, மக்களுக்குத் தேச பக்தியையும் தெய்வ பக்தியையும் ஊட்டியவர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளையவர்கள்.

கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தம் ஒன்று வருகுது!

என்று தொடங்கும் பாடலை அக்காலத்தில் அகிம்சை வழியில் விடுதலைப் போரில் ஈடுபட்ட தேச பக்தர்கள் அனைவரும் பாடுவார்கள். காந்திஜியின் முக்கிய கொள்கைகளான கதர் பற்றியும், மது விலக்குப் பற்றியும், தீண்டாமை ஒழிப்புப் பற்றியும் இவர் ஏராளமான பாடல்களைப் பாடியிருக்கிறார். இதனால்தான் 'காந்தி யுகக் கவிஞர்' என்று இவர் போற்றப் பட்டார்.

தமிழ்நாட்டின் முதல் அரசவைக் கவிஞராக இருந்த பெருமையும் இவருக்கு உண்டு.

இவர் தம்முடைய வாழ்க்கை வரலாற்றை சுவை மிகுந்த ஒரு நாவலைப் போல் எழுதி இருக்கிறார். 'என் கதை' என்பது அதன் பெயர்.

'தமிழன் இதயம்', 'சங்கொலி', 'அவனும் அவளும்', 'மலைக் கள்ளன்' முதலிய பல புத்தகங்கள் எழுதியிருக்கிறார். இவற்றில் 'மலைக் கள்ளன்' திரைப்படமாக வந்து பலரது பாராட்டைப் பெற்றது.

பண்டிதமணி கதிரேசச் செட்டியார்


ஏழாவது வயதில் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஏழு மாதங்கள்கூடப் படிக்காத இவர், பன்னிரண்டு ஆண்டுகள் ஒரு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து பெரும் புகழ் பெற்றார்!

சிறு வயதிலேயே இவர் இளம் பிள்ளை வாதத்தால் பீடிக்கப்பட்டார். அந்நோய் இவரது இடக் கையையும் இடக் காலையும் பயன்படுத்த முடியாத படி செய்துவிட்டது. ஊன்றுகோல் இல்லாமல் இவரால் எங்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையிலும் இவர் தமிழில் மிகுந்த ஆர்வம் கொண்டு, தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் தாமாகவே கற்றார். தமிழுடன் சமஸ்கிருதத்தையும் கற்க விரும்பினார். ஓர் ஆசிரியரிடம் ஐந்து ஆண்டுகள் சமஸ்கிருதம் பயின்றார். சமஸ்கிருதத்தில் உள்ள சில புகழ் பெற்ற நூல்களை மொழி பெயர்த்தார்.

செட்டி நாட்டரசர் அண்ணாமலை செட்டியார் இவரது புலமையை அறிந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவரைப் பேராசிரியராக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். அப்பல்கலைக் கழகத்தில் இவரிடம் படித்தவர்களில் பலர் பெரும் அறிஞர்களெனப் பெயர் பெற்றனர். அரசாங்கம் 'மகாமகோபாத்தியாய' எனும் பட்டத்தை இவருக்கு வழங்கிச் சிறப்பித்தது.

மின்மினிக் கதைகள்



கிண்டல் கவிதை

காந்திஜி லண்டனுக்குக் கப்பலில் சென்றுகொண்டிருந்தார். அதே கப்பலில் ஒரு வெள்ளைக்காரனும் பயணம் செய்தான். அவன் காந்திஜியைப் பார்க்கும்போதெல்லாம் அவரைக் கிண்டல் செய்வான்.

ஒருநாள் அவன் காந்திஜியைக் கேலி செய்து ஒரு நீண்ட கவிதை எழுதினான். ஐந்தாறு தாட்களில் எழுதிய அந்தக் கவிதையை ஒரு குண்டூசியால் ஒன்று சேர்த்து காந்திஜியிடம் அவன் கொடுத்தான்.

"மிஸ்டர் காந்தி, இதோ ஒரு கவிதை; உம்மைப் பற்றி எழுதியிருக்கிறேன். படித்துப் பாரும். எப்படி இருக்கிறது என்று பிறகு கூறும்" என்றான்.

காந்திஜி அந்தக் கவிதையை வாங்கிக் கொண்டார்.

இரண்டு மூன்று நாட்கள் சென்றபிறகு அந்த வெள்ளைக்காரன் காந்திஜியிடம் வந்து, "கவிதை எப்படி? அதில் ஏதாவது சாரம் இருந்ததா?" என்று கேட்டான்.


"ஓ! சாரம் இருந்ததே! அதைத்தான் தனியாக எடுத்து இதோ இந்த டப்பாவில் போட்டுவிட்டேனே!" என்று கூறினார் காந்திஜி.

வெள்ளைக்காரன் டப்பாவைப் பார்த்தான். அதில் குண்டூசி இருந்தது. குண்டூசியை எடுத்தபின் தனித் தனியாக இருந்த தாட்களை அவனிடம் திருப்பிக் கொடுத்தார் காந்திஜி.

வெள்ளைக்காரன் வெட்கத்தால் தலைகுனிந்தான்.

எத்தனை அர்ச்சுனர்கள்?

சபர்மதி ஆசிரமத்தில் இருந்தபோது, காந்திஜி குழந்தைகளுக்குத் தினந்தோறும் கதை சொல்லுவார். வாரத்தில் ஒருநாள் 'கேள்வி நேரம்' நடக்கும். அப்போது குழந்தைகள் கேட்கும் பலவிதமான கேள்விகளுக்கும்



காந்திஜி பதில் சொல்லுவார்.' அந்த நேரம் ஒரே குதூகலமாயிருக்கும்.

ஒருநாள் கேள்வி நேரத்தில் ஒரு சிறுவன் காந்திஜியிடம், ''பாபுஜி, கண்ணனுடைய கதையை நீங்கள் எங்களுக்குப் பல தடவை சொல்லி யிருக்கிறீர்கள். அந்தக் கதையில் வரும் அர்ச்சுனர் கண்ணனை ஒரே ஒரு கேள்விதான் கேட்டார். அதற்குக் கண்ணன் நீளமாகச் சொன்ன பதில் 'பகவத் கீதை' என்ற புத்தகமாகவே வந்துவிட்டது! ஆனால், நாங்கள் உங்களை எவ்வளவு பெரிய கேள்வி கேட்டாலும், மிகவும் சுருக்கமாகப் பதில் கூறி விடுகிறீர்களே, இது ஏன்?'' என்று கேட்டான்.


அந்தச் சிறுவனின் புத்திசாலித்தனத்தைக் கண்டு காந்திஜி மகிழ்ச்சி அடைந்தார். சிரித்துக் கொண்டே அவனுக்குப் பதில் கூறினார்:

''உண்மைதான். அந்தக் கதையில் ஒரே ஒரு அர்ச்சுனன்தான் வந்தான். அவன் கேட்ட ஒரே ஒரு கேள்விக்கு கண்ணன் நீண்ட பதிலைத் தந்தான். ஆனால் இங்கே ஒன்று, இரண்டா! நிறைய அர்ச்சுனர்கள் இருக்கிறீர்களே, ஒவ்வொருவருடைய கேள்விக்கும் நீளமாகப் பதில் சொன்னால் விடிந்து போய்விடுமே! அதனால்தான் சுருக்கமாகப் பதில் கூறுகிறேன்.''

காந்திஜியின் பதிலைக் கேட்டதும் குழந்தைகள் கைதட்டி ஆமோதித் தார்கள்.

இதுவா பக்தி?

தில்லியில் அப்போது காந்திஜி தங்கியிருந்தார். அவரைக் காண, அங்கே ஓர் ஏழைக் குடியானவரும் அவருடைய மனைவியும் வந்திருந்தார்கள். அவர்களின் ஆடைகள் அழுக்காக இருந்தன. அவர்களின் முழங்கால்வரை புழுதி படிந்திருந்தது. பல மைல்களுக்கு அப்பாலுள்ள கிராமத்திலிருந்து



அவர்கள் வருவதாகச் சொன்னார்கள்.


காந்திஜியைக் கண்டதும் ''பாபுஜி, எங்களுடைய ஒரே குழந்தை சாகக் கிடக்கிறது. நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள்.

காந்திஜி அவர்களின் நிலைமையை அறிந்து மிகவும் இரக்கப்பட்டார். ''சரி, உங்கள் குழந்தை பிழைக்க நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்.

''மகாத்மா, உங்கள் பாதங்களைக் கழுவிய நீரைக் கொடுத்தால், எங்கள் குழந்தை நிச்சயம் பிழைத்துவிடும். உங்கள் பாதங்களைக் கழுவ அனுமதி கொடுங்கள்.''

காந்திஜி அவர்களின் அருகிலே சென்று, ''என்னை ஏன் மகாத்மா என்று நினைக்கிறீர்கள்? கடவுளிடம் உங்களுக்கு உண்மையான பக்தி இருக்கு மானால், என்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதனிடம் பக்தி செலுத்த மாட்டீர்கள். அது கடவுளை அவமதிப்பதாகும். என் பாதங்களைக் கழுவும் நீர் எப்படி மருந்தாகும்? அசுத்தமான நீரைப் புனிதமாக எண்ணலாமா? சாதாரண சுகாதார விதியைக்கூட மறந்துவிட்டீர்களே! ஆண்டவனைப் பிரார்த்தியுங்கள். அவர் அருளால் குழந்தை பிழைத்துவிடும்'' என்று கூறி அனுப்பி வைத்தார்.

செருப்பு—ஒரு பொக்கிஷம்




காந்திஜி தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களின் உரிமைக்காகப் போராடியதில், அவருக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. சிறையிலே இருந்தபோது அவர் ஒரு நிமிஷம் சும்மா இருக்கமாட்டார். ஏதேனும் வேலை செய்து கொண்டிருப்பார்; அல்லது புத்தகம் படித்துக் கொண்டிருப்பார்.

காந்திஜிக்குச் செருப்புத் தைக்கத் தெரியும். ஏற்கெனவே கற்றுக் கொண்டிருந்தார். அதனால் சிறையில் இருந்தபோது அவர் செருப்புத் தைக்கும் தொழிலையும் செய்து வந்தார்.

அப்போது தென் ஆப்பிரிக்காவில் ஜெனரல் ஸ்மட்ஸ் என்பவர் பிரதம மந்திரியாக இருந்தார். அவருக்கு காந்திஜியிடம் அரசியல் விவகாரங் களில் விரோதம் இருந்தாலும், தனிப்பட்ட முறையில் மதிப்பும் மரியாதையும் உண்டு. காந்திஜியின் சத்தியமும், அஹிம்சையும் அவருடைய உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன. ஆகையால், அவர் காந்திஜிக்கு வாராவாரம் புத்தகங்கள் அனுப்புவாராம்.

காந்திஜி விடுதலை பெற்றதும் ஜெனரல் ஸ்மட்ஸைப் பார்க்கச் சென்றார். அவருக்கு, தாம் சிறையில் தைத்த ஒரு ஜோடிசெருப்பை அன்பளிப் பாகக் கொடுத்தார் காந்திஜி.

''நான் சிறையில் தள்ளிய அந்த மனிதர் எவ்வளவு தூய்மையானவர், எத்தகைய பெருந்தன்மை உடையவர் என்பதை முதல்முதலாகத் தெரிந்து கொண்டவன் நான்தான்! நான் காலில் போட்டு நடப்பதற்காகவே அவர் இந்தப் பாதரட்சைகளைக் கொடுத்தார். ஆனாலும் அவற்றில் கால் வைக்க என் மனம் கூசுகிறது. சத்தியத்தில் நம்பிக்கையும் எதிரியிடம் அன்பும் கொண்ட ஒரு வீரனால் உருவாக்கப்பட்ட இதை நான் ஓர் உயர்ந்த ஞாபகச் சின்னமாகவே போற்றி வருவேன்'' என்று ஜெனரல் ஸ்மட்ஸ், அவருடைய நண்பர் ஒருவரிடம் கூறினாராம். அவ்வாறே சாகும் வரை அதைப் பெரிய பொக்கிஷமாகவே அவர் போற்றி வந்தார்!







சின்ன அரும்புகளின் சிந்தனை மேடை

"இது என்ன புதுமையாக இருக்கிறதே!" என்று நினைக்கிறீர்களா? ஆம், பல தேசத்துப் பறவைகள் வந்து கூடுகின்ற வேடந்தாங்கலில் உள்ள 'இலக்கிய வீதி' என்ற அமைப்பு, இரு கழுகுகள் தினமும் இரை எடுக்க வருகின்ற திருக்கழுகுன்றத்தில் 17.8.86ல் ஒரு விழா நடத்தியது.

அந்த விழாவில் எழுத்தாளர் கல்பனா குழந்தைகளுக்குச் சில கதைகளைக் கூறினார்! அவர் கூறிய ஒவ்வொரு கதையும் மிகச் சுவையாக இருந்ததோடு, அவர் சொன்ன முறையும் குழந்தைகள் உள்ளத்தைக் கவரும்படியாக இருந்தது. இப்படி நாடெங்கும் குழந்தைகளைக் கூட்டி வைத்துக் கதை சொல்லுகின்ற நிகழ்ச்சிகள் நடந்தால், குழந்தைகள் எவ்வளவு குதூகலம் அடைவார்கள்!

இவ்விழாவில் ஒரு பாட்டுப் புத்தகத்தை விமர்சனம் செய்தார்கள். மு. மாலா, ஜி. குமரவேல், எஸ். சேகர், த. அருள் சிவபாலன் ஆகிய நால்வரும். அவர்கள், அந்தப் புத்தகத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து, ஆளுக்கு ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு, அதிலுள்ள சில பாடல்களை விமர்சனம் செய்தார்கள். அவர்கள் விமர்சனம் செய்தமுறை கூடியிருந்த குழந்தைகளும் பெரியவர்களும் பாராட்டி மகிழும் வகையில் இருந்தது. 'இந்தச் சின்ன வயதிலே எவ்வளவு சிறப்பாக விமர்சிக்கிறார்கள்!' என்று அனைவரும் – அந்தப் புத்தகத்தை எழுதிய ஆசிரியர் உட்பட ஆச்சரியப்பட்டனர்.

'அதெல்லாம் சரிதான். அந்தப் புத்தகத்தின் பெயர் என்ன? அதை எழுதியவர் யார்? என்பதையெல்லாம் கூறாமல் இப்படியே சொல்லிக் கொண்டு போனால்....?' என்றுதானே கேட்கிறீர்கள்? புத்தகத்தின் பெயர்: 'சிரிக்கும் பூக்கள்'. எழுதியவர்: 'கோகுலம்' கௌரவ ஆசிரியரான குழந்தைக் கவிஞர்.

குழந்தைகளைக் கொண்டே ஒரு குழந்தைப் புத்தகத்தை விமர்சனம் செய்கின்ற இந்தப் புதுமையைச் செய்தவர்கள் இலக்கிய வீதி அமைப்பாளர் இனியவன், கவிஞர் பல்லவன், கவிஞர் தாரா பாரதி ஆகியோராவார்.



என் குழந்தைப் பருவம்

நீதிபதி
எம்.எம். இஸ்மாயில்

நீதிபதி மு.மு. இஸ்மாயில் அவர்கள், படிப்பிலே மிகவும் கெட்டிக்காரராக இருந்த தோடு, மாணவராயிருந்தபோதே மேடை ஏறிப் பேசுவதிலும் வல்லவராக விளங்கினார். தாய்மொழியாகிய தமிழில் மட்டுமல்ல; அந்நிய மொழியாகிய ஆங்கிலத்திலும் அழகாகப் பேசக் கூடியவர். தாய்நாட்டையும் தமிழ் மொழியையும் இவர், இரு கண்களாகக் கருது பவர். ஒளிவுமறைவு இன்றி, எது நேர்மை என்று தமக்குத் தோன்றுகிறதோ, அதை அஞ்சாமல் எடுத்துக் கூறுபவர்.

நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்ட இவர், தமிழக உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாகத் திகழ்ந்ததோடு, சில காலம் தமிழக கவர்னர் பொறுப்பையும் ஏற்றிருந்தார்.


கம்ப இராமாயணத்தில் இவருக்குப் பெரும் ஈடுபாடு உண்டு. சென்னைக் கம்பன் கழகத்தின் தலைவராயிருந்து, அக்கழகம் பலவகையிலும் சிறப்பாகப் பணியாற்ற உதவி வருபவர். சமீபத்தில் நடந்த கம்பன் விழாவில் பேசிய நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழி யன் அவர்கள் "மு.மு. இஸ்மாயில் என்றால் என்ன பொருள்? சென்னைக் கம்பன் கழகத்திற்கு முழுமுதலாக இருப்பவர் இஸ்மாயில்தாம்" என்று குறிப்பிட்டார். கம்பன் கழகம் கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி எனப் பல போட்டிகளை நடத்தி மாணவர், மாணவியருக்கு ஆண்டுதோறும் நிறையப் பரிசுகள் வழங்கி வருகின்றது.

இவர் பல பட்டிமண்டபங்களுக்குத் தலைமை தாங்கியிருக்கிறார். இவருடைய தீர்ப்பு மிகச் சிறப்பானதாக இருக்கும்.

'கம்பன் கண்ட இராமன்', 'தாயினும்....', 'மூன்று வினாக்கள்' முதலிய பதினைந்துக்கு மேற்பட்ட புத்தகங்களை இவர் எழுதி இருக்கிறார்.

தஞ்சை மாவட்டத்தில் நாகூர் என்னும்பிரபலமான ஊர் இருக்கிறது. அந்த ஊரில் முஸ்லீம் பெரியார் ஒருவருடைய அடக்கஸ்தலம் இருக்கிறது. அந்தப் பெரியார் அவர்களை 'நாகூர் ஆண்டவர்' என்றும் அந்த அடக்கஸ்தலத்தை 'நாகூர் ஆண்டவர் தர்கா' என்றும் எல்லோரும் குறிப்பிடுவார்கள். அந்த ஊர்தான் நான் பிறந்த ஊர்.

இப்பொழுது பாண்டிச்சேரி என்னும் யூனியன் டெரிடரியில் அடங்கியிருக்கும் காரைக்கால் நாகூர்க்கு வடக்கே இருக்கிறது.



நாகைப்பட்டினம் நாகூர்க்குத் தெற்கே இருக்கிறது. காரைக்காலுக்கும் நாகைப்பட்டினத்திற்கும் உள்ள தூரத்தை 'நாகைக்கும் காரைக்கும் காதம்' என்று சொல்வார்கள். அதாவது நாகூரிலிருந்து சுமார் 6½ மைல் வடக்கில் காரைக்காலும் 3½ மைல் தெற்கில் நாகைப்பட்டினமும் இருக்கின்றன. இந்த மூன்று ஊர்களுமே கடற்கரைப் பிரதேசங்கள்.

நாகூர் ஒரு கிராமமும் அன்று, அதே சமயத்தில் அது ஒரு பெரிய பட்டினம் என்று சொல்வதற்கும் இல்லை. எனினும் பல காரணங்களால் அது ஒரு பெரும்பட்டினம் போலவே இருந்தது.

நாகூர் தர்காவில் ஆண்டு தோறும் நடைபெறும் பதினான்கு நாளைய 'கந்தூரி' உற்சவத்தோடு, ஒவ்வொரு வியாழக்கிழமை இரவும் பெருந்திரளாகக் கூட்டம் வரும். முஸ்லீம்களுக்குச் சந்திரமானம் ஆகையால் வெள்ளிக்கிழமை என்று குறிப்பிடுவர்.

இது ஒரு காரணம். இன்னொரு காரணம் நாகூரில் வாழ்ந்த முஸ்லீம் ஆண்களில் பெரும்பாலோர், வியாபாரத்திற்காக சிங்கப்பூர், மலேயா, இந்தோனேஷியா (இப்போது தாய்லாந்து) எனப்படும் சயாம் ஆகிய நாடுகளுக்குச் சென்று, சில ஆண்டுகள் அங்கு பணிபுரிந்துவிட்டு, ஊருக்கு வந்து சில மாதங்கள் தங்கி மீண்டும் செல்வர். ஒவ்வொரு முறையும் அவர்கள் திரும்ப வரும்பொழுது தங்களுடைய சம்பாத்தியத்திலிருந்து விலை உயர்ந்த வெளிநாட்டுப் பொருள்களைக் கொண்டு வருவார்கள்.

நாகூர் தர்காவிற்கு வருகிறவர்களோ தென்னிந்தியாவில் இருந்து மட்டும் அல்லாமல், இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்தும் இலங்கை போன்ற அந்நிய நாடுகளிலிருந்தும் வருவார்கள்.

இக்காரணங்களால், நாகூர் எப்பொழுதும் உயிருடனும், ஒளியுடனும் துலங்கிக் கொண்டிருக்கும்.

இன்னொரு உண்மையையும் சொல்ல வேண்டும். தர்காவிற்கு வருபவர்கள் முஸ்லீம்கள் மாத்திரம் அல்லர். சொல்லப் போனால் முஸ்லீம்களைவிட இந்துக்களே அதிகமாக வருவார்கள். இந்தக் காரணத்தினால் நாகூர்க்கு இன்னொரு சிறப்பும் உண்டு. அதுதான் எல்லாச் சமயத்தினரும் சேர்ந்து ஒற்றுமையாக வாழ்கின்ற தன்மை!

என்னுடைய தகப்பனார் பெயர் முகம்மது காசிம் மரக்காயர் என்பது. என்னுடைய தாயார் என்னுடைய ஒன்பதாவது வயதிலேயே காலமாகிவிட்டார். பிறகு அப்துல் அஜீஜ் என்ற என்னுடைய தாய் மாமனால் நான் வளர்க்கப் பெற்றேன். என்னுடைய 13 ஆம் வயதில் என் தந்தையாரும் காலமாகிவிட்டார். இந்த 13 ஆண்டுகளிலும்கூட அவரோடு நான் நெருங்கி வாழ்ந்தேன் என்று சொல்வதற்கு இல்லை. மற்றவர்களைப் போலவே அவரும் வியாபாரத்திற்காக சிங்கப்பூர் முதலிய இடங்களுக்குச் சென்றுவிடுவார். ' அப்பொழுதெல்லாம் விமான வசதி இல்லாததால் கப்பலில் தான் போவார்கள். கப்பலில்தான் திரும்பி வருவார்கள்.

ரோனா, ரெஜுலா என்ற இரண்டு கப்பல்கள் மாதத்திற்கு ஒருமுறையோ அன்றி இருமுறையோ நாகைப்பட்டினம், சென்னை முதலிய துறைமுகங்களுக்குப் பினாங்கு சிங்கப்பூரிலிருந்து வரும். அவற்றில்தான் போவார்கள்; வருவார்கள்.

ஒருமுறை போனால் பல ஆண்டுகள் அங்கே தங்கிவிட்டு ஊருக்குத் திரும்பி வந்து, சில மாதங்கள் இருந்து, மீண்டும் அங்கே செல்வது வழக்கமாக இருந்ததனால், ஆண்கள் ஊரில் உள்ள தம் மனைவி மக்களோடு சேர்ந்து வாழும் காலம் மிகக் குறுகிய காலமாகவே இருக்கும்.

ஆண் பிள்ளைகள், நான்காவது

ஐந்தாவது வகுப்பு படித்துவிட்ட உடனேயே இம்மாதிரி தம் தந்தையருடன் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுவார்கள். இந்தப் படிப்பும்கூட சொந்த ஊரில் உள்ள தாய் மற்றும் உறவினரோடு கடிதத் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற தேவைக்காகத்தான். எனவே, அவர்களுக்கு நன்றாகப் படிக்க வேண்டும் என்ற ஆவலோ, ஆர்வமோ பெரிதாக இருந்தது இல்லை.

எங்கள் பக்கத்தில் குழந்தைகள் மூன்று அல்லது நான்கு வயது அடையும் பொழுது (ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும்) குர்ஆன் ஓதுவதற்காக மதரஸா எனப்படும் பள்ளிகளுக்கு அனுப்பப்படுவார்கள். அங்கு அரபியில் இருக்கும் குர்ஆனை ஓதக் கற்றுக் கொடுப்பார்கள். ஆனால் குர்ஆனில் கூறி இருப்பதை அக்குழந்தைகளுக்குத் தாய்மொழியான தமிழில் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இருப்பது இல்லை. அரபியில் இருப்பதை அப்படியே ஓதுவதற்குத்தான் கற்றுக் கொள்வார்கள். அதே சமயத்தில் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகள், அநுஷ்டானங்கள் பற்றியும் அங்கே கற்றுக் கொடுப்பார்கள்.

இவை எல்லாம் முடிய சுமார் 4, 5 ஆண்டுகள் ஆகிவிடும்.

இதற்குப் பிறகுதான் ஆண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போவார்கள். பெரும்பாலும் பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் போவதில்லை. வீட்டில் ஓர் ஆசிரியையை வரவழைத்து எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வார்கள்.

நவீனக் கல்வி ஆர்வமில்லாதிருந்தாலும் சமயக் கல்வியில் ஆர்வமுள்ளவர்களும், அறிஞர்களும் பலர் இருந்தார்கள்.

இந்த முறையிலேயே நான் குர்ஆனை ஓதி முடித்துவிட்டுப் பள்ளிக்கூடத்திற்குச் சென்றேன். நான் படித்த பள்ளிக்கூடத்திற்கு, 'நாகூர் முனிசிபல் முகம்மடன் பாய்ஸ் ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்' என்று பெயர். இந்தப் பள்ளிக்கூடம் எங்கள் வீடு இருந்த 'மீயாத் தெரு'விலேயே இருந்தது. எங்கள் வீட்டிற்கும், அந்தப் பள்ளிக்



கூடத்திற்கும் சில கெஜதூரங்கள்தான் இருக்கும். நான், பள்ளிக்கூடத்தில் சேரும்பொழுது என் வகுப்பில் உள்ள மாணவர்களில் வயதில் பெரியவனாகவும், மற்ற ஹிந்துப் பிள்ளைகள் வயதில் சிறியவர்களாகவும் இருப்பதைக் காண எனக்கு வெட்கமாக இருந்தது.

இந்த வயது வித்தியாசம், எல்லா முஸ்லீம் பிள்ளைகளுக்கும் பொருந்தும். ஏனெனில் அனைவருமே குர்ஆன் ஓத மதரஸாவிற்குச் சென்றுவிட்டுத்தான் பள்ளிக்கூடத்துக்கு வருகிறார்கள்.

இந்த வெட்கத்தின் காரணமாக நன்றாகப் படித்து விரைவாக மேல் வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவல் எனக்கு உண்டாயிற்று. என்னுடைய வீட்டிலோ படித்தவர் யாரும் இல்லை. இருந்த பெரியவர்கள் அனைவரும் ஆண்களில் ஐந்து ஆறுவகுப்புவரை படித்துவிட்டுவெளிநாடு சென்றவர்கள். பெண்களிலோ வெளிநாடு சென்றிருக்கும் ஆண்மக்களான உறவினர்களோடு, கடிதத் தொடர்பு வைத்துக் கொள்வதற்காக, வீட்டில் தமிழைக் கற்றுக் கொண்டவர்களே. இத்தகையவர்களும் மிகச் சிலரே.

இந்த நிலையில் நன்றாகப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு என்னவோ இயற்கையாகவே வந்துவிட்டது.

பள்ளிக்கூடத்து ஆசிரியர்கள் அனைவருமே என்னிடத்தில் அளவு கடந்த அன்பைச் செலுத்தினார்கள். உருது மொழி கற்றுக் கொடுப்பதற்காக இருந்த ஒருவரைத் தவிர பிற ஆசிரியர்கள் அனைவரும் ஹிந்துக்கள்; குறிப்

பாகப் பிராம்மணர்கள்.

அவர்களுடைய அன்பும் என்னுடைய ஆர்வமும் சேர்ந்து, முதல் வகுப்பிலிருந்தே என்னை முதல் மாணவனாக ஆக்கிவிட்டிருந்தது.

அப்பொழுதெல்லாம் நன்றாகப் படிப்பவர்களுக்கு Double Promotion என்ற ஒரு சலுகையைக் காண்பிப்பார்கள். அதாவது அடுத்த வகுப்பிற்குச் செல்லாமல் அதற்கு மேற்பட்ட வகுப்பிற்குச் செல்வது. எனக்கு ஒன்றாவது வகுப்பிலிருந்து மூன்றாவது வகுப்பிற்கும், மூன்றாவது வகுப்பிலிருந்து ஐந்தாவது வகுப்பிற்கும் Double Promotion கொடுத்தார்கள். ஐந்தாவது வகுப்பிலிருந்து ஏழாவது வகுப்பிற்கும் Double Promotion கொடுக்கத் தயாராக இருந்தார்கள்.

ஆனால் உடன் படித்த மாணவர்கள் ஆறாவது வகுப்பில் படிக்காமல் ஏழாவது வகுப்பிற்குப் போனால் மிகவும் கஷ்டப்பட வேண்டி வரும் என்று பயமுறுத்தினார்கள். எனவே நான் Double Promotion வேண்டாம் என்று சொல்லிவிட்டு ஆறும் வகுப்பில் சேர்ந்து கொண்டேன்.

எல்லா வகையிலும், ஆசிரியர்களின் செல்லப் பிள்ளையாக நான் இருந்தேன். இது எனக்குச் சில நன்மைகள் அளித்ததோடு சில இடைஞ்சல்களையும் உண்டாக்கிற்று.

ஆசிரியர்கள் என்னிடம் அன்பு காட்டுவது, அவ்வளவு நன்றாகப் படிக்காத சக முஸ்லீம் மாணவர்களுக்கு என்மேல் பொறாமையை உண்டாக்கிற்று. அதன் காரணமாக என்னிடத்தில் ஏதாவது விஷமம் செய்வதற்கு அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். இதிலிருந்து தப்புவதற்கு நான் ஒருவழியைக் கையாண்டேன்.



பள்ளிக்கூடம் வீட்டிற்கு மிக அருகில் இருந்ததால், முதல் மணி அடித்த பிறகுதான் வீட்டை விட்டுப் புறப்படுவேன். நான் பள்ளிக்கூடத்தைச் சேரும்பொழுது ஆசிரியர்கள் வந்திருப்பார்கள். ஆகையால் பிற மாணவர்கள் விஷமம் செய்ய வழி இல்லாமல் போய்விடும். அதுபோலவே பள்ளிக்கூடம் விடுவதற்காக மணி அடித்த உடன், ஓட்டமாக ஓடி, வீடு வந்து சேர்ந்துவிடுவேன்.

இந்தச் சூழ்நிலையில்தான் சக மாணவர்களோடு நெருங்கிப் பழகுவதற்கு வாய்ப்பில்லாமற் போனதோடு, பள்ளிக் கூடத்தில் எந்த உடற்பயிற்சியிலும், விளையாட்டுக்களிலும் பங்கு கொள்ள வாய்ப்பும் இல்லாமற் போயிற்று.

இதன் காரணமாகவே, பழகுவது பேசுவது எல்லாம் வீட்டில் உள்ள பெரியவர்களோடும், வீட்டிற்கு வரும் பெரியவர்களோடும், பள்ளிக்கூட ஆசிரியர்களோடும்தான்.

என்னுடைய பள்ளி ஆசிரியர்கள் என்னிடத்தில் பேரன்பு காட்டிய தோடல்லமல் நான் மிகப்பெரியவனாக வருவேன் என்றும் எதிர்பார்த்தார்கள்.

அதற்கு ஒரே ஓர் உதாரணத்தைச் சொல்லலாம். அப்பொழுதெல்லாம் நம் நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி. மாகாண கவர்னர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களே. அவர்கள் தங்கள் நியமன காலம் முடிந்து தங்கள் தாய் நாடு திரும்புவதற்குமுன் மாகாணம் முழுமையும் சுற்றி, பிரிவுபசாரம் பெற்றுக் கொண்டு செல்வார்கள்.

நான் ஐந்தாம் வகுப்பில் படித்ததாக ஞாபகம். அப்பொழுது அன்றைய சென்னை ராஜதானி கவர்னராக இருந்தவர் தமது இத்தகைய சுற்றுப் பயணத்தின்பொழுது எங்கள் 'மியா' தெருவழியாகப் போகப் போகிறார் என்பதை அறிந்த எங்கள் ஆசிரியர்கள், எங்கள் பள்ளிப் பிள்ளைகள் அனைவரையும் அவர் (கவர்னர்) அப்படிச் செல்வதைப் பார்ப்பதற்காக தெருவின் எதிர்ப்புறத்துள்ள

வீட்டுத் திண்ணைகளில் கொண்டு வந்து நிறுத்தினர்.

நானும் அவர்களில் ஒருவனாக இருந்தேன். அப்படி எங்களைக் கடந்து கவர்னர் கார் போகும்பொழுது என் அருகில் நின்று கொண்டிருந்த என் வகுப்பு ஆசிரியர் (அவர் பெயர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்று நினைக்கிறேன்) 'இப்படித்தான் நம்ம இஸ்மாயீலும் ஒருநாள் கவர்னராகிப் பெரும் புகழ் அடைவான்' என்று சொன்னார்.

அப்பொழுது கவர்னருடைய அந்தஸ்து, அதிகாரம் ஆகியவை பற்றி மாணவர்களுக்கு அதிகமாகத் தெரியாததாகையால் அதைப் பற்றி எவரும் பெரிதாக நினைக்கவில்லை.

ஆனால் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் மாதக் கடைசியில் தற்காலிக கவர்னராகப் பதவி ஏற்ற நான் அதே ''மீயா'' தெருவில், பள்ளிக்கூடத்தைத் தாண்டி, எங்கள் வீட்டிற்குக் காரில் சென்றபொழுது அன்று எங்கள் ஆசிரியர் சொன்னதை நன்றிப் பெருக்குடனும் இறைவனுடைய அருளை எண்ணி தாழ்மையுடனும் நினைத்துக் கொண்டேன்.

நான் படித்த இந்தப் பள்ளிக் கூடத்தில் ஏழாவது வகுப்பு வரையில்தான் இருந்தது. அந்த ஸ்கூல் முனிசிபல் ஸ்கூல் என்று முன்னரே குறிப்பிட்டுள்ளேன்.

எங்கள் ஊரை, காரைக்கால் நாகைப்பட்டினம் நெடுஞ்சாலை இரண்டாகப் பிரிப்பது போலிருக்கும்.

சாலைக்கு மேற்கே பெரும்பாலும் இந்துக்கள் வீடுகளும், கிழக்கே முஸ்லீம்கள் வீடுகளும் இருந்தன.

இந்த மேற்குப் பகுதியில் 'செட்டியார் ஸ்கூல்' என்ற தனியார்ப் பள்ளிக்கூடம் இருந்தது. அதில் 8 ஆம் வகுப்பு வரை உண்டு. 8 ஆவது வகுப்பிற்கு மேல், 9 வது வகுப்பு படிப்பதாயின் நாகைப்பட்டினத்தில் இருந்த 'நேஷனல் ஹைஸ்கூல்', 'மிஷன் ஹைஸ்கூல்' என்ற இரு பள்ளிக்கூடங்களில் ஒன்றிற்குச் செல்ல வேண்டும்.

நாகூரில் இருந்த 'செட்டியார் ஸ்கூல்' நாகைப்பட்டினத்து, 'நேஷனல் ஹைஸ்கூலின் கிளையே ஆகும்.

அப்பொழுது நான் படித்த பள்ளிக்



கூடத்தின் தலைமை ஆசிரியராக இருந்தவர் மணி ஐயர் என்பவர். என்னைப் பற்றி மிகப் பெருமையான எண்ணம் கொண்டிருந்த அவர், நான் 8 ஆம் வகுப்பிற்காக, 'செட்டியார் ஸ்கூல்' போக வேண்டாம் என்றும், நேரிடையாகவே நாகைப்பட்டினத்தில் உள்ள 'நேஷனல் ஹைஸ்கூல்' சென்று 8 ஆவது படிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

பெரும்பாலோர் உள்ளூரில் இருக்கிற பள்ளிக்கூடத்தை விட்டு விட்டு, மேலும் ஒரு வருஷத்தை நாகைப்பட்டினத்தில் ஏன் செலவழிக்க வேண்டும் என்பதற்காக 'செட்டியார் ஸ்கூலில்' சேர்ந்து படிப்பர்.

நானோ என் தலைமை ஆசிரியர் வற்புறுத்தலினால் எட்டாவது வகுப்பிற்காக நாகைப்பட்டினத்திற்கே சென்றேன்.

நாகூரில் ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்பொழுதே மேடை ஏறிப் பேசுகின்ற பழக்கம் வந்துவிட்டது. ஆரம்பத்தில் பள்ளிக்கூட மாணாக்கர்களிடையே நடக்கும் விவாத மேடை, பேச்சு மேடைகளே இதற்கு வாய்ப்பளித்தன. பின்னர் வெளியில் சென்று பேசும் வாய்ப்பும் உண்டாயிற்று.

நாகூரில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல வேண்டும். அக்காலத்திலெல்லாம் ஆண்டுக்கு ஒருமுறை அன்றி அதற்குமேலோ Deputy Inspector of Schools அவர்கள் பள்ளிக்கூடங்களை வந்து பார்வை இடுவது வழக்கம். அவர் வரும் தேதி



முன்னதாகவே குறிப்பிட்டு விடப் பெறும். ஆதலால் ஒவ்வொரு வகுப்பு ஆசிரியரும் தம் வகுப்பில் நன்ருகப் படிக்கும் பையனை முன்கூட்டியே நிர்ணயித்து ஆய்வாளர் வரும் பொழுது அவர் முன்னுல் அந்தப் பையனை கேள்வி கேட்டு, பதில் சொல்லத் தயார்ப்படுத்தி வைத்துக் கொள்வது வழக்கம்.

ஐந்தாவது வகுப்பில் படிக்கும் பொழுது என்று நினைக்கிறேன். அப்போதெல்லாம் ஓரிரண்டு திறமைகள் என்னிடம் இயற்கையாகவே அமைந்திருந்தன.

ஒன்று: எதனையும் ஒருமுறை படித்தாலும் அது எத்தனை பக்கமாக இருந்தாலும் அப்படியே மனப்பாடமாக்கி ஒப்பித்துவிடும் திறன்.

(இந்தத் திறன் கல்லூரிக்கு வந்த பிறகு முற்றிலும் மாறுபட்டு விட்டது. எதனையும் அப்படியே ஒப்பிக்கும் திறமை போய்விட்டது. மாருக எதனைப் படித்தாலும், பார்த்தாலும் அதனுடைய சாரத்தைச் சற்றும் குறையாமல் எடுத்துக் காட்டிவிடும் திறனுக மாறிவிட்டது.)

பள்ளிச் சோதனைக்கு ஆய்வாளர் வரும் நாள் நிச்சயமாகிவிட்டது. நான் நாகூரில் படித்துக் கொண்டிருக்கும் வரையில் ஆய்வாளர் முன்னிலையில் என்னையே கேள்வி கேட்பார்கள். நானும் பதில் சொல்லிவிடுவேன்.

இந்தக் குறிப்பிட்ட சமயத்தில் என் கைவிரல்களில் ஒன்றில் நகச்சுற்று உண்டாகி வலி அதிகமாக இருந்ததோடல்லாமல் காய்ச்சலும் வந்துவிட்டது. தலை தூக்கி எழுந்து நிற்கக் கூட முடியாதநிலையில்பள்ளிக்கூடம்போக முடியவில்லை. பள்ளிக்கூடம் வீட்டிற்கு மிகவும் அருகில் இருந்தபடியால் நான் பள்ளிக்குப் போக முடியாத காரணத்தை அறிந்த பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரும், பிற ஆசிரியர்களும், என் வீட்டிற்கு வந்து, "எப்படியாவது கொஞ்சம் பள்ளிக்கு அனுப்புங்கள். ஆய்வாளர் வந்து சென்ற உடனேயே வீட்டில் கொண்டு வந்து ஜாக்கிரதையாக விட்டு விடுகிறோம்" என்று என் மாமாவிடம் கூறி அழைத்துச் சென்ருர்கள்.

வீட்டிலிருந்தும் துணைக்கு ஒருவர் அனுப்பப் பெற்ருர். இத்தகைய நிகழ்ச்சிகள் எல்லாம் என்னை மேற்படிக்கு என் மாமா அனுப்புவதற்குப் பெரிதும் துணையாக நின்றன.

ஐந்தாம்வகுப்பில்படித்துக்கொண்டிருந்தபொழுது என்னுடைய தமிழ்ப் பாட பரீட்சை விடைத் தாள்களை திரு T.S. இராஜகோபாலய்யர் என்ற ஆசிரியர் திருத்தினர். என்னைப் பற்றி எல்லா ஆசிரியர்களுக்குமே ஒரு நல்ல எண்ணம் இருந்ததால் பிறரது விடைத் தாள்களைக்கூட என்னை அருகில் வைத்துக்கொண்டே திருத்துவார்கள்.

ஒருமுறை தேர்வு விடைத் தாளில் அவர் எனக்கு ஐம்பதிற்கு நாற்பத்தொன்பது என்று மார்க் போட்டார்.

"ஏன் ஒரு மார்க்கைக் குறைத்து விட்டீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"எல்லாம் சரியாகத்தான் எழுதியிருக்கிருய். நூற்றுக்கு நூறு என்று போட்டுவிட்டால் உனக்கு அகம்பாவம் வந்துவிடும். தலைக் கிறுக்கு அதிகமாகிவிடும். அதற்காகத்தான்" என்ருர் ஆசிரியர்.

"எல்லாம் சரியாக எழுதி இருக்கும்பொழுது எப்படி நீங்கள் குறைக்க முடியும்?" என்று கேட்டேன்.

"போயேன்! உன் கையெழுத்து நன்ருக இல்லை. அதற்காக ஒரு மார்க்கைக் குறைத்துவிட்டேன்" என்ருர் அவர் சிரித்துக் கொண்டே.

பள்ளியில் கொடுத்த Progress Report ஐ என் மாமாவிடம் அவர் கையெழுத்துக்காகக் கொடுத்தேன். மார்க்குகள் அனைத்தையும்அவர் பார்த்தார்.

"ஏண்டா! தமிழ் நம்ம வீட்டிலேயும் வெளியிலேயும் பேசுவது. அதுல

போய் ஒரு மார்க் குறைச்சு வாங்கி யிருக்கிறியே! வேறெந்தப் பாடமாக இருந்தாலும் போனாப் போவுதுங் கலாம்...'' என்று கேட்டார்.

நான், ''எல்லாவற்றையும் சரி யாகத்தான் எழுதியிருந்தேன்'' என்று சொல்லி ஆசிரியர் கூறியதையும் அவரிடம் கூறிவிட்டேன்.

அந்தக் காலத்தில் வாழ்ந்த முஸ் லீம்களிடையே எந்தவிதமான மேல் ஜாதி, கீழ் ஜாதி என்ற பிரச்னையும் கிடையாது. பெண்கள் பெரும்பாலும் கோஷாக்களாக இருந்ததால், மிகச் சிறு வயதினர் மிகப் பெரு வயதினர் ஆகியவர் தவிர மற்றையோர் வெளியே போகமாட்டார்கள். அப்படி வெளி வேலை செய்வதற்காக வும், வீட்டிலே பெண்களுக்கு வீட்டு வேலைகளுக்கு உதவுவதற்காகவும் ஹரிஜனப் பெண்கள் அமர்த்தப்படு வர்.

அக்காலத்தில் குடிநீருக்காக வீட் டுக்குள்ளே குழாய் இணைப்பு வசதி இல்லை. ஒவ்வொரு தெருவின் இரு முனைகளிலும் குழாய்கள் இருக்கும். இந்த ஹரிஜனப் பெண்களே அந்தக் குழாயடிக்குக் குடம் கொண்டு சென்று குடிநீர் கொண்டு வருவார்கள்.

அவர்களே, வீட்டிலிருக்கும் பெண் கள் சமையல் செய்வதற்கும் உதவு வார்கள். கைக்குழந்தைகளை அவர் களே எடுத்து வைத்துக் கொள்வர். வெளியிலே பொழுதுபோக்குக்காகத் தூக்கிக் கொண்டு போவார்கள். வீட் டிலும்கூட சோற்றைப் பிசைந்து சிறு குழந்தைகளுக்கு ஊட்டுவதும் அவர் களே.

இது மாதிரியே, ஒவ்வொரு வீட்டிற் கும் அவர்கள் வீட்டுத் நச்சன் கொத் தன், வண்ணான் (அன்றி) வண்ணாத்தி என்பவர் உண்டு. தீபாவளி முதலிய நாட்களில் அவர்கள் வீட்டில் செய்த பலகாரங்களை எடுத்துக் கொண்டு எங்களைப் போன்றவர் வீடுகட்கு வந்து கொடுப்பார்கள். வீட்டிலிருப்பவர் கள் அவர்களுக்குப் புது வேட்டி, புடைவை முதலியன வாங்கிக் கொடுப் பார்கள்.

அது போலவே முஸ்லீம்களுடைய ரம்ஜான் (நோன்புப் பெருநாள் என்று குறிப்பிடப் பெறுவது) பக்ரீத் (இது ஹஜ்ஜுப் பெருநாள் என்று குறிப் பிடப் பெறும்) என்ற நாட்களில் எங் கள் வீடுகளுக்கு வருவார்கள். அப் பொழுது எங்கள் வீடுகளில் செய்த பலகாரங்களை அவர்களுக்குக் கொடுத்து, வேறு சன்மானங்களும் கொடுப்பார்கள். இம்மாதிரியான சமூக நிலையில் மத, ஜாதி வேற்றுமை கள் எவையும் நாங்கள் அறியாதவை.

இன்னும் இரண்டு செய்திகளை இந்த நாகூர்ப் பள்ளி வாழ்க்கையின் காலகட்டத்தில் நிகழ்ந்தவற்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

ஒன்று பொதுவானது, மற்றது என்னைப் பற்றியது.


நாகூர்க்கு வடக்கே வெட்டாறு என்ற ஆறு மேற்கு கிழக்காக ஓடி வங்கக் கடலில் கலக்கிறது.

இந்த ஆற்றின் பாலம்தான் வடக்கே காரைக்கால் பிரதேசங்களையும் தெற்கே நாகைப்பட்டினம் பிரதேசங் களையும் இணைக்கும் போக்குவரத் துக்கு வசதியாக அமைந்திருப்பது.

எனக்குத் தெரிந்து சென்ற அறுபது ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பாலம் மிக்க வலுவாக இருக்கிறது. நாகூர்க்கு வடக்கே சுமார் ஒரு மைல் தூரத்திலேயே வாஞ்சூர் என்ற பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலிருந்து வடக்கே காரைக்காலுக்கும் அப்பால் அந்தக் காலத்தில் பிரெஞ்சுக்காரர் ஆட்சியாக இருந்தது.

பிரெஞ்சுப் பிரதேசத்தில் 'சுங்க வரி' இல்லை. ஆகையால் இந்தப் பிரெஞ்சுப் பிரதேசத்தில் வெளிநாட் டுப் பொருள்கள் மிக மலிவான விலைக் குக் கிடைக்கும்.

இப்பொருள்கள் பிரிட்டிஷ் ஆதிக்



கத்திலிருந்த நாகூர்க்குள் வரும் பொழுது இடையில் உள்ள சுங்க இலாகாவினுடைய பரிசோதனைக்கு ஆளாகி ஏற்ற சுங்க வரி விதிக்கப் பெறும்.

ஆனால், சொந்த உபயோகத்திற்காக சிறு அளவில் கொண்டு வரப் பெறும் பொருள்களுக்கு வரி இல்லை. இந்த சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு நாகூர், நாகைப்பட்டினத்தைச் சேர்ந்தவர்கள் பஸ்ஸிலோ, குதிரை வண்டியிலோ,நடந்தோ, இந்த வாஞ்சூருக்குச் சென்று பொருள்களைச் சொந்த உபயோகத்திற்காக என்று வாங்கிக் கொண்டு வந்து வீட்டிலே பயன் கொள்வதும் உண்டு; மற்றவர்க்கு விற்பதும் உண்டு.

இதற்குச் சௌகர்யமாகவே இந்தச் சுங்க இலாகா சோதனை நிலையத்திற்குச் சில கெஜ தூரத்திலேயே, பிரெஞ்சு இந்தியப் பிரதேசத்தில் கடைகளை வைத்திருப்பார்கள். சிறு வயதினரான என் போன்றவர்களை வீட்டில் உள்ள பெரியவர்கள் இந்த வாஞ்சூருக்குப் போய் ஒரு ராத்தல் (அதாவது ஒரு பவுண்டு) சீனி, பாக்கு, போன்றவற்றை வாங்கி வரச் செய்வார்கள்.

ஒரே ஆள் ஒரே நாளில் பலமுறை இப்படிச் செய்வதும் உண்டு. இதுவும் அல்லாமல் பெருத்த அளவில் கள்ளக் கடத்தலும் நடந்து வருவது உண்டு.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, பிரெஞ்சு இந்தியப் பகுதிகளும் இந்நாட்டின் ஒருபகுதியாக ஆனபிறகு இந்த நிலைமை மாறியது.

அடுத்தது என்னைப் பற்றியது.

என்னுடைய சிறு வயதில் எங்கள் வீட்டில் வேலை ஆட்கள் இல்லை. நானும் என்னுடைய அண்ணன் முறையினரான என்னைவிட நான்கைந்து வயது பெரியவரான முகம்மது கௌஸ் என்பவரும்தான் (நாங்கள் இருவர்) வெளியில் போய்வர, மற்ற வேலைகளைச் செய்வதற்காக இருந்த ஆண் பிள்ளைகள்.

காலையில் எழுந்து, வீட்டு வாயில், திண்ணை கூட்டுவதிலிருந்து வீட்டில் வளர்த்து வந்த பசுமாட்டிற்கு ஆக வேண்டிய செயல்கள் அனைத்தையும் நாங்கள் இருவருமே செய்வோம்.

காலையில் மாட்டைக் கொட்டிலிலிருந்து அவிழ்த்து பிறிதொரு இடத்தில் கட்டி கொட்டிலைச் சுத்தப் படுத்துவது; கிணற்றடியில் உள்ள தென்னை மரத்தில் கட்டப்பட்ட மாட்டை, கிணற்றிலிருந்து நீர் இறைத்து, தேய்த்துக் குளிப்பாட்டுவது, காலை மாலை இரு வேளைகளிலும் ஊற வைத்த பருத்திக் கொட்டையை உரலில் இட்டு இடித்து அதனை ஊற வைத்த பிண்ணாக்குடன் நீர் விட்டுக் கரைத்து மாட்டிற்குத் தீனி வைப்பது ஆகிய அனைத்துக் காரியங்களையும் நாங்கள் இருவரும்தான் செய்து வருவோம்.

ஐந்தாம் வகுப்பு படித்து முடித்த உடனேயே அவரை (முகம்மது கௌஸ்) பாங்காக் (தாய்லாந்தின் தலைநகர்) நகரில் அவர் தகப்பனாரால் ஏற்படுத்தப்பட்ட வியாபார நிறுவனத்தில் பணிபுரிய அனுப்பிவிட்டார்கள். நான் மாத்திரம் படிப்பிற்காக ஊரிலேயே இருந்துவிட்டேன்.

இத்தகைய வேலைகள் அந்தக்காலத்தில் எங்கள் இருவருக்குமே கசப்பாகவும், கஷ்டமாகவும் இருந்தன. நான் பெற்றோரை இழந்தவன். அவரது தகப்பனார் காலமாகிவிட்டார். தாயார் பாங்காக்கைச் சேர்ந்தவர். நான்கைந்து வயதுக்குள்ளாகவே அவர் அவரது தந்தையாரால் இந்தியாவிற்குக் கொண்டு வரப் பெற்றவர்.

இந்த நிலையில் அநாதைகளாக இருப்பதனால்தானே இப்படிக் கஷ்டப் பட வேண்டி இருக்கிறது என்ற எண்ணம் அப்பொழுது இருந்தது. ஆனால், இந்த அனுபவமே பிற்கால வாழ்க்கையில் எங்கள் இருவர்க்குமே பெறற்கரிய பேறாக அமைந்துவிட்டது.

நமக்குத் தேவையான எந்தக் காரியத்தையும் நாமே செய்து கொள்வதே கௌரவம் என்று எண்ணியதால் பிறரைச் சார்ந்து நிற்கும் பழக்கம் எங்களுக்கு அறவே இல்லாமல் போய் விட்டது.

அவர் பாங்காக் சென்ற பிறகு எனக்கு நேர்ந்த சிறு அனுபவம் இன்றும் மனத்திலேயே இருக்கிறது.

(அடுத்த இதழில் முடியும்)


இன்சுவைக்கு ரஷ், களிப்பூட்டுவதற்கு ரஷ்,
மனமகிழ்வுக்கு ரஷ், சேர்ந்திடுவீர் ரஷ் அணியில்
Rush
Rush
Rush
சுவையும் மணமும்மிக்க
ஆரஞ்சு பானம்
From McDowell
Artificially flavoured. Contains no fruit juice or fruit pulp.
everest/d86/MDR/295 Tam



காந்தி மகான் வாழ்விலே

* காபா காந்தியின் நாலாவது மனைவியாகிய புத்லிபாயின் நாலாவது குழந்தையாகப் பிறந்தவர்தான் மோகனதாஸ் காந்தி.

* பெற்றோருக்குக் கடைக்குட்டியாக இருந்ததால், இவரை எல்லாரும், 'மோனியா' என்றே அழைத்தார்கள்.

* இவருக்குச் சிறு வயதிலே ராமநாம உபதேசம் செய்தவர் இவர்கள் வீட்டு வேலைக்காரியான 'ரம்பா'தான்!

* இவருக்கும் கஸ்தூரிபாவுக்கும் திருமணம் நடந்தபோது இருவருக்குமே வயது 13. அந்தக் காலத்தில் திருமணம் நடத்துவது மிகவும் சிரமமாம். ஆதலால், இவருக்கும் இவர் தமையனுக்கும், இன்னொரு சித்தப்பாவின் மகனுக்கும் சேர்த்து ஒரே முகூர்த்தத்தில் மூன்று கலியாணங்களையும் ஒன்றாக நடத்தினார்கள்.

* 14 தடவைகள் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிறார்.

* 1921ல் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்தபோது, விவசாயிகள் ஒரே ஆடையுடன் வயலில் வேலை செய்வதைக் கண்டார். ஆடைக்கு மேல் ஆடை அணிந்திருந்த இவர், 'இனி ஒரே ஓர் ஆடைதான் அணிவேன்' என்று மதுரையில் விரதம் எடுத்துக் கொண்டார்.

* வட்டமேஜை மாநாட்டுக்காக லண்டன் சென்றபோதும், பிரிட்டிஷ் மன்னரைச் சந்தித்தபோதும், இவர் உடையை மாற்றிக் கொள்ளவில்லை. எப்போதும்போல் எளிய உடையையே அணிந்திருந்தார். இதற்காக, இவரை, 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று சிலர் கேலி செய்தார்கள்.

* இவரிடம் கையெழுத்துப் பெற வேண்டுமானால், இவர் சும்மா போட மாட்டார். 5 ரூபாய் கொடுத்தால்தான் போடுவார். தமிழில் கையெழுத்திட 10 ரூபாய் கேட்பார். இப்படி அவர் பெற்ற பணத்தையெல்லாம் ஹரிஜனங்களின் நன்மைக்கே பயன்படுத்தினர்.

* 1922ல் ஈரோட்டிலே இவர் பெரியார் ஈ.வே.ரா. வீட்டிலே தங்கியிருந்தார். அப்போதுதான் கள்ளுக் கடைகளின் முன் மறியல் செய்வது என்ற முடிவு எடுக்கப்பட்டது. இந்த மறியலை முதல் முதலாகத் தொடங்கியவர்கள் பெரியாரின் மனைவி நாகம்மை அம்மையாரும் அவருடைய சகோதரி கண்ணம்மாவும்தான்!

* ஹரிஜனப் பெண்ணாகிய லட்சுமியை, இவர் தமது வளர்ப்பு மகளாக ஏற்றார். இவரும் கஸ்தூரிபாவும் லட்சுமியைச் சொந்த மகள் போலவே வளர்த்து வந்தார்கள்.

* துப்புரவு விஷயத்தில் இவர் மிகவும் அக்கறை செலுத்துவார். எந்த வேலையும் இழிவானதல்ல என்பதை உணர்ந்த இவர், தோட்டி வேலையும் செய்தார். நான் ஒரு 'பங்கி' என்று இவர் தன்னையே அழைத்துக் கொள்வார்.

* இவருக்கு எத்தனையோ வேலைகள்; தொல்லைகள்; பிரச்னைகள்; கடமைகள். ஆனாலும் புத்தகங்கள் படிப்பதிலே மிகுந்த ஆர்வம் உடையவராக இருந்தார். இவர் படித்த புத்தகங்களின் எண்ணிக்கை 253. இவருடைய எழுத்துக்களிலிருந்தும், இவருடைய செயலாளராயிருந்த மகாதேவ தேசாயின் நாட்குறிப்பிலிருந்தும் அந்தப் புத்தகங்களின் பெயர்களை அறிய முடிகிறது.

* இவர் சிறையில் இருந்த நாட்கள் 2338. (தென் ஆப்பிரிக்கச் சிறைகளில் 249 நாட்களும், இந்தியச் சிறைகளில் 2089 நாட்களும்.)

* இவர் நடத்திய பத்திரிகைகள் —

தென் ஆப்பிரிக்காவில்—இந்தியன் ஒபினியன் (ஆங்கிலம்), இந்தியாவில்- யங் இந்தியா (ஆங்கிலம்), நவஜீவன் (குஜராத்தி) ஹரிஜன் (ஆங்கிலம், இந்தி, குஜராத்தி, மராத்தி, உருது, வங்காளி, தமிழ் ஆகிய மொழிகளில் வெளி வந்தது.)

* இவர் தமது சுயசரிதையான 'சத்திய சோதனை'யை 1920 ஆம் ஆண்டு வரைதான் எழுதியிருக்கிறார். நம் நாடு சுதந்திரம் பெற்ற வரையிலாவது எழுதியிருந்தால், எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்!



பிருந்தாவனக் கதையரங்கம்

நாட்டைக்காத்த சிறுவன்



ஆர். சுரேஷ் (12674)

மகேந்திரபுரி என்ற நாட்டை மகேந்திரன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் ஒரு சோம்பேறி. அதனால், அவன் நாட்டைச் சரியாக கவனிப்பதில்லை. அமைச்சர்களும், வீரர்களும் தங்கள் இஷ்டப்படி, நடந்தனர். வரிப் பணத்தை வாங்கித் தாங்களே வைத்துக் கொண்டனர். மக்களுக்கு உதவும் திட்டங்கள் ஏதும் தீட்டப்படவில்லை. மக்கள் பெரிதும் துன்பமடைந்தனர்.

இதற்கிடையில் மன்னனுக்கு, அவனுடைய சோம்பேறித்தனத்தினால் நோய் ஒன்று உண்டாகியது. அதனால், அவன் மிகவும் துன்பப்பட்டான். வைத்தியர்களை வரவழைத்தான். வைத்தியர்கள் மன்னனைப் பரிசோதித்துவிட்டு, மன்னனின் சோம்பேறித்தனத்தினால் அந்த நோய் வந்தது என்று கூறினர். அதனால் கோபம் கொண்ட மன்னன் அவர்களைச் சிறையிலடைத்தான்.

மன்னன் தன் நோயைத் தீர்ப்பவர்களுக்கு அவர்கள் கேட்கும் பரிசைக் கொடுப்பதாக அறிவித்தான். ஒருவராலும் மன்னனின் நோயைக் குணப்படுத்த முடியவில்லை.

மகேந்திரபுரியில் சங்கரன் என்னும் புத்திசாலிச் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் மன்னனால் மக்கள் அடையும் துன்பங்களைக் கண்டு வருந்தினான். மன்னனுக்குச் சோம்பேறித்தனத்தினால் நோய் உண்டானதைப் பற்றி அவன் கேள்விப்பட்டான். சங்கரன் மனத்தில் ஒரு திட்டம் உருவாகியது.

அதன்படி அவன் அரண்மனைக்குச் சென்றான். வாயிற்காவலர்களிடம் தான் மன்னனின் நோயைக் குணப்படுத்த வந்திருப்பதாகக் கூறினான். காவலர்கள் சங்கரனை அரசனிடம் அழைத்துச் சென்றனர். அரசனிடம் சங்கரன், தான் நோயைக் குணப்படுத்த வந்திருப்பதாகக் கூறினான்.

சங்கரன் அரசனைப் பரிசோதிப்பது போல் நடித்தான். பிறகு, அரசனிடம், ''அரசே! இந்த நோய்க்கு மருந்து என்னிடம் உள்ளது. அந்த மருந்தைக் குடித்துவிட்டு உங்கள் குல தெய்வத்தின் கோவிலைச் சுற்றி நூறு முறை ஓடினால் நோய் குணமாகும். நோய் குணமான பிறகும் தினமும் கோவிலைச் சுற்றி நூறு முறை ஓட வேண்டும். அப்போதுதான் நோய் மீண்டும் வராமலிருக்கும்'' என்றான்.

அரசனும் அதற்குச் சம்மதித்தான். பிறகு சங்கரன் வீடு திரும்பினான். மறு நாள் ஒரு புட்டியில் தேனை எடுத்துக் கொண்டு அரசனிடம் சென்றான். அரசனிடம், ''அரசே! இந்தத் தேனில் மருந்தைக் கலந்திருக்கிறேன்'' என்று கூறி அதை அரசனிடம் நீட்டினான். அரசன் அதைக் குடித்துவிட்டு கோவிலைச் சுற்றி நூறு தடவை ஓடினான். அவ்வாறு ஒரு மாதம் கோவிலைச் சுற்றி ஓடியதும் அரசனை விட்டுச் சோம்பல் அகன்றது. எனவே அவன் நோயும் தீர்ந்தது.

அரசன் மிகவும் மகிழ்ந்தான். சங்கரனுக்கு என்ன பரிசு வேண்டுமென்று கேட்டான். சங்கரன், ''அரசே! நீங்கள் ஆட்சியைச் சரியாக கவனிக்காததனுல் நீர்ப்பாசனம் நடைபெறவில்லை. வயல்கள் வறண்டுவிட்டன. மக்கள் உணவில்லாது தவிக்கின்றனர். எனவே நீங்கள் ஆட்சியைச் சரியாக கவனிக்கவேண்டும். அதுதான் நீங்கள் எனக்கு அளிக்கும் பரிசு'' என்று கூறினுன்.

இதைக் கேட்ட அரசன் தன் தவறை உணர்ந்து வெட்கமும் வேதனையும் அடைந்தான். அன்று முதல் தன் நாட்டைச் சிறப்பாக ஆண்டு வந்தான்.

நல்ல உள்ளம்



எஸ். கோபிநாதன் (9284)

வாசலில் நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தான் ரகு. 'டேய் ரகு' என்ற அம்மாவின் குரலைக் கேட்டு வேண்டா வெறுப்பாக வீட்டுக்குள் வந்து, ''என்னம்மா?'' என்ருன். உடனே அவன் அம்மா, இரண்டு ரூபாய் நோட்டை நீட்டி, ''இந்தா ரேகாவுக்கு பிரெட் வாங்கி வா!'' என்ருள். உடனே ரகு, ''போம்மா, நான் விளையாடிக் கொண்டிருக்கும்போது கடைக்குப் போகச் சொல்கிருயே!'' என்று கடிந்தான்.

அதற்கு அம்மாவோ, ''பாரு, ரேகாவுக்கு காய்ச்சல் வந்து மூனு நாட்கள் ஆகிறது. டாக்டர் பிரெட்டும் பாலும் கொடுக்கச் சொல்லியிருக்காரு! நீ வாங்கிட்டு வந்தேன்னு காய்ச்சல் சரியாப் போயிடும். யாருக்கு நீ வாங்கப் போறே? உன் தங்கைக்குத் தானே! போடா! கண்ணு, போய் வாங்கிட்டு வா'' என்று கெஞ்சியதும் ''சரி, கொடு. போய் வாங்கிட்டு வரேன்'' எனச் சொல்லி ரூபாயை வாங்கிக் கொண்டான். நண்பர்களிடம் சென்று, ''நண்பர்களே, ஐந்து நிமிடம் பொறுங்கள். அவசர வேலையாய்க் கடைக்குப் போய் வருகிறேன்'' எனக் கூறிவிட்டு வேகமாக நடந்தான் கடையை நோக்கி.

''என்ன தம்பி என்ன வேணும்?'' இது கடைக்காரர். ''1.25 பிரெட் பாக்கெட் ஒன்று குடுங்க'' என்று இரண்டு ரூபாய் நோட்டை நீட்டினுன் ரகு என்ற ரகுராமன். கடைக்காரர் பிரெட்டை பேக்செய்துமீதிச்சில்லறையும் கொடுத்தார். திரும்பி நடந்தவாறே சில்லறையை எண்ணிப் பார்த்தான். உடனே அவன் முகம் மலர்ந்தது. ஏனெனில் அதில் எழுபத்தைந்து பைசாவிற்குப் பதில் 1.25 இருந்தது. 'கடைக்காரர் சரியான மறதிப் பேர்வழி. அவர் கண்டு கொள்ளும் முன் போய்விட வேண்டும்.' என்று எண்ணிய ரகு வேகமாக நடைபோட்டான்.


சிறிது தூரம்கூடச் சென்றிருக்க மாட்டான். ''தம்பி! தம்பி! இங்கு வாப்பா!'' என்ற கடைக்காரரின் குரலைக் கேட்டு அதிர்ந்தான். ''போச்சு, நன்ருக மாட்டிக் கொண்டு விட்டோம்'' என்று பயந்தவாறே கடையை நோக்கி நடந்து, 'என்னங்க' என்ருன்.

''இந்தா தம்பி, உன்னுடைய கர்ச்சீப். நீ மறந்து இங்கேயே வைத்துவிட்டாய்'' என்று கூறியவாறே அவனுடைய கைக்குட்டையை நீட்டினுர். உடனே ரகு, ''சே! இவர் எவ்வளவு நல்ல உள்ளம் கொண்டவர். இவரைப் போய் ஏமாற்ற நினைத்தோமே'' என எண்ணினுன். ''இந்தாங்க நீங்க எழுபத்தைஞ்சு பைசாவுக்குப் பதில் 1.25 ரூபாய் தந்துவிட்டீர்கள். மீதி ஐம்பது பைசா'' என்று நீட்டினுன் ரகு.

அதை வாங்கிக் கொண்ட கடைக்காரர் மகிழ்ச்சியோடு, ''ரொம்ப நல்ல பையன். இந்தக் காலத்திலே இந்த மாதிரி நல்ல பையன்களும் இருக்கிருர்களே! ரொம்ப நன்றி தம்பி'' எனப் புகழ்ந்தார். மிகுந்த மனநிறைவோடு வீட்டை நோக்கி நடந்தான் ரகு.


விசித்திரச் செய்திகள்

கேக்கிற்குள் திருமணம்!




போர்ச்சுகல் நாட்டில், ஒரு பெரிய ஓட்டலின் சமையல்காரர் 'ஜோஸ்ரிவெஜ்' என்பவர். அவர் 14 மீட்டர் உயரமும், 8 டன் எடையும் உள்ள பெரிய கேக் ஒன்றை ஒரு தேவாலயம் மாதிரி செய்து, அதன் உள்ளே தன் மகளின் திருமணத்தை நடத்தினார்! அந்தக் கேக்கைத் தயாரிக்க 12,000 முட்டைகள், 2150 கிலோ சீனி, 900 கிலோ மாவு, 200 லிட்டர் எலுமிச்சைச் சாறு உபயோகித்தார்! இந்த 'உலகின் மிகப் பெரிய கேக்'கை 4000 துண்டுகளாக வெட்டி, உள்ளூர் மக்களுக்குக் கொடுத்தார்!

யானை தின்ற பணம்!



யார்க் நெப்ரஸ்கா என்னும் ஊரில் 'மிக்கி பொகன்னான்' என்பவர் ஒரு யானை வைத்திருக்கிறார். அவர் தமது சட்டைப் பையில் 17,000 டாலர் நோட்டுக்களை வைத்திருந்தார். அவர் அந்தச் சட்டையை மாட்டி வைத்துவிட்டுச் சென்றிருந்தபோது, அந்த யானை, சட்டையுடன், சட்டைப் பையில் இருந்த அவ்வளவு பணத்தையும், ஒரு சிகரெட் பாக்கெட்டையும் ஒரு சிகரெட் லைட்டரையும் தின்றுவிட்டது!

குட்டைக் குதிரை



உலகிலேயே மிகவும் குள்ளமான குதிரைகள் சினாவில் இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். உயரம் 3 அடிதான்! சுமார் 400 குதிரைகள்தாம் இப்போது உள்ளன!

எலிகளுக்குப் பதில் ரேடியோ!



டாக்காவில்எலிகளின் தொல்லை அதிகம். ஆண்டுக்கு 14 லட்சம் டன் அரிசி எலிகளால் வீணாகிறது. அதனால் எலிகளை அதிகமாகக் கொல்லுகிறவர்களுக்கு அந்த அரசாங்கப் ரேடியோவைப் பரிசாக அளிக்கிறது!

காட்டுச் சிறுவன்



உகாண்டாவில் ஒரு காட்டில் தன்னந்தனியாக ஓர் அனாதைச் சிறுவனைச் சில சிப்பாய்கள் கண்டெடுத்தனர். ஆனால் அவன் விசித்திரமான பழக்கங்களைக் கொண்டிருக்கிறான். புல் தின்கிறான். மரத்தை எலி மாதிரி கடிக்கிறான். மிருகங்களைப் போல ஊளையிடுகிறான். மிருகங்களைப் போல கைகளை ஊன்றி மண்டியிட்டு நடக்கிறான்! அவனுக்கு 'ராபர்ட்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

நெருப்புக் கோழிமுட்டை போட்டி!



தென் ஆப்பிரிக்காவில், கேப்டவுனில் 'ஜோகான் ஹாப்மன்' என்பவர், 1.3 கிலோ எடையுள்ள வேக வைத்த நெருப்புக் கோழி முட்டை ஒன்றை 3 நிமிடம் 6 நொடிகளில் சாப்பிட்டு உலக சாதனை நிகழ்த்தினார். அந்த நெருப்புக் கோழியின் ஒரு முட்டை 24 கோழி முட்டைகளுக்குச் சமம்!

பிள்ளையாருக்கு அழைப்பிதழ்!



ராஜஸ்தானிலுள்ள ரந்தாம்போர் கோட்டைக் கோவிலில் உள்ள பிள்ளையாருக்குத் தினமும் சுமார் 20 கிலோ எடையுள்ள, ஆயிரக்கணக்கான, அழைப்பிதழ்கள், கடிதங்கள் வந்து குவிகின்றன! இந்தப் பிள்ளையாருக்கு அழைப்பிதழ் அனுப்பாமல் எந்தத் திருமணமும் நடைபெறுவதில்லை. கோவில் அர்ச்சகர், தன் உதவியாளருடன், ஒவ்வொரு அழைப்பிதழையும், கடிதத்தையும் பக்தி சிரத்தையுடன் பிள்ளையாருக்கு வாசித்துச் சமர்ப்பிக்கிறார்!

கோடை விடுமுறைக்கான பரிசுப் போட்டி முடிவுகள்



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அறிவித்த போட்டி முடிவுகள்.

கீழ்க்கண்ட ஒவ்வொரு விஷயத்திற்கும்,

முதற் பரிசு — ஒரு தங்க டாலருடன். ரூ 500/—
இரண்டாவது பரிசு — ரூ 250/—
மூன்றாவது பரிசு — ரூ 100/—

I ஸ்ரீ இராமாயணம், ஸ்ரீ மஹாபாரதம் இவைகளுள் வரும் ஒரு கதாபாத்திரத்தைப் பற்றிய கதை:

முதற் பரிசு — பார்வைகள்

ஆ. மகேஸ்வரி,
த/பெ. அ. ஆதிமூலம்,
தெற்குப்பட்டி அஞ்சல்,
திருநெல்வேலி தாலுகா—627201

2 வது பரிசு — ராமநாம மகிமை

ஆர். சித்ரா,
1, ஆறாவது குறுக்குத் தெரு,
லட்சுமிபுரம்,
திருநின்றவூர்—602 024.

3 வது பரிசு — ராமனை மறக்கலாமா?

கொ.மா.கோ. இளங்கோ,
22, இராமசாமி கோவில் தெரு,
இராஜபாளையம்—626 117.

II ஆழ்வார்கள், நாயன்மார்கள் — இவர்கள் மூலமாகத் தமிழ் வளர்ந்ததைப் பற்றி ஒரு சிறு நாடகம்.

முதற்பரிசு — தென்னாடுடைய சிவனே போற்றி

கா. சிவசுப்பிரமணியன்,
திருவள்ளுவர் நகர், ஏம்பலம்,
நல்லாத்தூர் அஞ்சல்,
பாண்டிச்சேரி—605 121.

2 வது பரிசு — மெய்ப்பொருள் நாயனார்

பா. கிரிஜா,
1830, மேலவீதி, தஞ்சாவூர்—9.

3 வது பரிசு — ஆழ்வார்கள்

ஏ. சுமதி,
31, சின்னம்மாள் தெரு,
சாய்பாபா காலனி,
கோயமுத்தூர்—641 038.

III நமது தேச சுதந்திரத்திற்காகத் தியாகம் செய்தவர்களைப் பற்றி ஒரு கவிதை

முதற் பரிசு — சுதந்திர வேள்வியில் தியாகிகள்

வெ. புகழொளி,
2, செட்டித் தெரு, திருவிழந்தூர்,
மயிலாடுதுறை.

2 வது பரிசு — வ.உ.சி. செம்மல் வாழ்க

பி. சரவணக்குமார்,
43, இராமச்சந்திரன் தெரு,
விருதுநகர்.

3 வது பரிசு — மறுபடி வருவாயா நீ?

மை. பிரேமா,
17/3, பேராலி தெரு, விருதுநகர்

IV பாரத நாட்டில் உள்ள க்ஷேத்திரங்களைத் தரிசிப்பதன் மூலம் ஏற்படக் கூடிய ஒருமைப்பாட்டைப் பற்றிய ஒரு கட்டுரை.

முதற் பரிசு

ஆ. மணிமாறன்,
107/B—1, அக்ரஹாரம்,
அ. கலையம்புதூர்—624 615.
பழனி வட்டம்.

2 வது பரிசு


க. லெட்சுமி,
10, ஆண்டாள் சந்நிதித் தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர்—626 125.

3 வது பரிசு

ஆர். பார்வதி,
25A, இராமசுந்தரம் தெரு,
அம்மாப்பேட்டைமெயின்ரோடு,
சேலம்—636 001.

நடுவர்கள்: இப்போட்டிகளுக்கு நடுவர்களாக இருந்து உதவியவர்கள்: திருவாளர்கள் சுப்ரபாலன், இலக்கிய வீதி இனியவன், எச். கிருஷ்ணமூர்த்தி (பொதுச் செயலாளர், குழந்தை எழுத்தாளர் சங்கம்), பி.எஸ். மணி, (துணை ஆசிரியர், 'கல்கி'.)

சுப்ர. பாலன்




இனியவன்





எச். கிருஷ்ணமூர்த்தி



பி. எஸ். மணி







பிருந்தாவனக் கவியரங்கம்

கன்றுக் குட்டி

எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டி
எனக்கு இனிய செல்லக்குட்டி
வள்ளி என்று நான் அழைத்தால்
துள்ளி வருவாள் அருகினிலே



தாயின் குரலைக் கேட்டதுமே
தாவித் தாவி ஓடிவருவாள்
மடியில் முட்டிப் பாலையுமே
மகிழ் வுடனே குடித்திடுவாள்

காலை நேரம் அவிழ்த்துவிட்டால்
கத்தரிக் காய்ச் செடி அதனை
மெல்லக் கடித்துப் பற்களாலே
மென்று சுவைத்துத் தின்றிடுவாள்.

— ந. முத்து இராம பட்டவராயன்
(13,480), வீரவநல்லூர்.

பிறந்த நாள்

தேசத் தந்தை பிறந்தநாள்
தியாக சீலர் பிறந்தநாள்.
பாசத் தோடு என்றுமே
பழகும் தாத்தா பிறந்தநாள்.



உண்மை தன்னைக் கடவுளாய்
உணர்ந்த தாத்தா பிறந்தநாள்.
சொன்ன படியே வாழ்ந்தநம்
தூய தாத்தா பிறந்தநாள்.

அகிம்சை வழியைக் காட்டிய
அன்புத் தெய்வம் பிறந்தநாள்
அகிலம் போற்றும் தலைவராம்
அண்ணல் காந்தி பிறந்தநாள்.

— ஏ. ஆர். ஆனந்த் (421), காரைக்குடி.

நல்ல வீடு

வீடு நல்ல வீடு — இது
கூரை வேய்ந்த வீடு.
குறைந்த விலை வீடு — நல்ல
குளிர்ச்சி தரும் வீடு.



தென்னை சூழ்ந்த வீடு — இளந்
　தென்றல் வீசும் வீடு.
பூமணக்கும் வீடு — எழில்
　பூத்துக் குலுங்கும் வீடு.

ஏழைக் கேற்ற வீடு — இது
எவரும் கட்டும் வீடு. .
— சே. பிரபு (9,458), சோத்துப்பாக்கம்

உருகிக் குறையும்

இரண்ட இரண்ட வீட்டிலே
மிரண்டு மிரண்டு விழிக்குது.
அசைந்து அசைந்து ஆடுது
ஆஹா! இருளை விரட்டுது.

வெண்மை யாக இருக்குது.
மெல்ல மெல்ல உருகுது.
வெள்ளைப் பனியைப் போலவே
மேலே யிருந்து விழுகுது.



உயர மாக இருந்தது
உருகி, உருகிக் குறையுது.
அருமை மெழுகு வர்த்தியாம்.
அனைவ ருக்கும் உதவுமாம்.
— ஸ்நேகலதா செல்லப்பன் (12,723),
கோவை — 45.

படித்து முடித்ததும்


படித்து முடித்து ராணுவப்
　படையில் சேர்வேன் நானுமே.
வெடிக்கும் குண்டு, பீரங்கி
　வித்தை கற்பேன், சேனுமே.

எல்லைப் படையின் அணியிலே
　ஏந்தி நிற்பேன் துப்பாக்கி.
தொல்லை கொடுக்கும் பகைவரைத்
　துரத்தி அடிப்பேன் நானுமே.




இமய மலையின் உச்சியில்
　இரவும் பகலும் பனியிலே
நமது அன்புப் பாரத
　நாட்டைக் காக்க ஆசையே!
— ஏ. ரசீத் (13,402), கோத்தகிரி.

முப்பெருந்தாயே



கலைமகள் தாயே, கலைமகள் தாயே,
கலைகள் செழிக்க அருள்வாயே!
மலைமகள் தாயே, மலைமகள் தாயே,
வலிமை பெருக அருள்வாயே!

திருமகள் தாயே, திருமகள் தாயே,
செல்வம் கொழிக்க அருள்வாயே!
பெருமைக் குரிய முப்பெருந்தாயே!
பெரிதாய்க் காத்திட வேண்டுவமே!
— க. கோகிலவாணி (3,789),
பழையனூர்.



கேளுங்கள்; சொல்லுகிறோம்


*** எனக்கு இராமாயணப் புத்தகம் வேண்டும். (விரிவான முறையில்). இதை எந்தப் பதிப்பகம் வெளியிட்டுள்ளது?**
— தி. பிரேம் ஆனந்த், மேட்டூர் அணை.

ராஜாஜி எழுதிய இராமாயணம் விரிவானது. சுவையானது. தெளிவானது. எளிமையானது. வெளியிட்டோர்: வானதி பதிப்பகம், தீனதயாளு தெரு, தியாகராய நகர், சென்னை — 17.

*** சுப்பிரமணிய பாரதியாருக்கு எத்தனை குழந்தைகள்? அவர்களின் பெயர்கள் என்ன? அவர்கள் எங்கு இருக்கிறார்கள்?**
— ஏ. பரிமளநாதன், திருப்பூர்.

பாரதியாருக்கு. ஆண் குழந்தைகள் இல்லை. தங்கம்மாள் பாரதி, சகுந்தலா பாரதி என்ற இரு பெண்கள் இருந்தார்கள். அவர்களும் காலமாகிவிட்டார்கள்.

*** "எனக்கு எல்லாப் பறவைகளைப் பற்றியும் நல்லாத் தெரியும்" என்று ஜம்பம் அடித்துக் கொள்கிறான் என் கிளாஸ் பையன் ஒருத்தன். "குயிலிலே ஆண் குயில் கூவுற மாதிரி பெண் குயில் கூவாது; பெண் குயில் கூவுற மாதிரி ஆண் குயில் கூவாது. இரண்டும் வேறு வேறு மாதிரிதான் கூவும்" என்கிறான், அவன். இது உண்மையா?**
— என். பஞ்சாட்சரம், திருநெல்வேலி.



அவன் சொல்வதை ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். ஆண் குயில், 'கியூ கியூ' என்று கூவும். பெண் குயில் 'குவிக் குவிக்' என்றுகூவும். சிலர் வீட்டுக்குள் இருந்தபடியே கூவுவது ஆண் குயிலா, பெண் குயிலா என்று கண்டுபிடித்துவிடுவார்கள்.

*** எல்லாப் பாம்புகளுக்கும் விஷம் இருக்காது. சில வகைப் பாம்புகளுக்குத்தான் விஷம் இருக்கும் என்று சொல்லுகிறார்கள். நம் தேசத்தில் எத்தனை வகைப் பாம்புகள் இருக்கின்றன? அவற்றில், விஷம் உடைய பாம்புகள் எத்தனை?**
— ஆர். கீதா, பேரையூர்.

இந்தியாவில் கிட்டத்தட்ட 300 வகைப் பாம்புகள் இருப்பதாகவும், அவற்றில் 70 வகைகள்தான் விஷம் உடையவை என்றும் சொல்லுகிறார்கள். இந்த 70 வகைகளிலும் 30 வகைகள் கடற்பாம்புகளாம். மீதமுள்ள 40 வகைகளிலே மிகக் கொடிய விஷம் உள்ளவை நான்கு. நாகப் பாம்பு, கண்ணாடி விரியன், கட்டு விரியன், சுருட்டைப் பாம்பு.

*** ரோட்டரி கிளப் எங்கு முதலில் தொடங்கப்பட்டது? அதன் பணிகள் என்ன என்ன?**
— இரா. வீரராஜ், சங்கர்நகர்.

1905 ஆம் ஆண்டு சிகாகோவில் பால் பி. ஹாரிஸ் என்பவரால் நிறுவப்பட்டது.

ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வது, தங்களின் வியாபாரத்தில் அல்லது தொழிலில் நேர்மையாக இருந்து அந்த வியாபாரம் அல்லது தொழிலுக்குப் பெருமைசேர்ப்பது, தனிப்பட்ட முறையிலும், தொழில் துறையிலும் சமூக வாழ்க்கையிலும் லட்சிய நோக்குடன் தொண்டு புரிவது, உலகப் போக்கைப் புரிந்து கொண்டு நல்ல எண்ணத்துடன் உலக அமைதிக்குப் பாடுபடுவது — இவைதான் முக்கிய நோக்கங்கள்.

*** தமிழில் முதல் முதலாக நாவல் எழுதியவர் யார்? அந்த நாவலின் பெயர்?**
— இரா. இராமசாமி, கரிவலம் வந்தநல்லூர்

'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற முதல் தமிழ் நாவலை எழுதியவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

* திரிகடுகம் என்று ஒரு பழங்காலப் புத்தகம் இருக்கிறதாமே. அது என்ன சொல்லுகிறது? அதை எழுதியவர் யார்?

— சே. குருநாதன், திருவள்ளூர்.

சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றும் உடல் நோயைப் போக்க உதவுவதுபோல், திரிகடுகத்திலுள்ள ஒவ்வொரு செய்யுளும் மூன்று மூன்று அறிவுரைகளைக் கூறுகிறது. இதை இயற்றியவர்: நல்லாதனார்.

* காந்தியடிகள் பிறந்த ஊர் போர்பந்தர் அல்ல; சுதாமாபுரிதான் என்கிறார்களே, உண்மையா?

— ஈஸ்வரி கங்காதரன், வில்லாபுரம்.



போர்பந்தரின் பழைய பெயர்தான் சுதாமாபுரி. சுதாமா என்பது கண்ணபிரானின் நண்பராகிய குசேலரின் மறு பெயர்.

* பல்லியின் வாலைப் பிடித்தால், அது வாலை அறுத்துக் கொண்டு ஓடி விடுகிறதே. அதற்கு அப்போது வலிக்காதா?

— கே. மாதவன், திருச்சூர்.

வலிக்கும்தான். ஆனாலும் 'வாலு போச்சு, உயிர் பிழைச்சுது, டும் டும் டும்' என்று அது ஒருபக்கம் ஆறுதல் அடையலாம். வாலை அது இழந்தாலும் அதற்குப் பதிலாகப் புதிய வால் விரைவிலே வளர்ந்துவிடும்!

* மகாத்மா காந்தி சுதந்திரம் பற்றிக் கூறிய பொன்மொழியில் உங்களுக்குப் பிடித்தமானது எது?


— கே. கனிய பெருமாள், போத்தனூர்.

'ஒருவேளை உணவுக்கும் வழியில்லாது தவிக்கும் ஏழைக் குடும்பத்திற்கு என்றைக்கு மூன்று வேளையும் உணவு கிடைக்கிறதோ, அன்றுதான் உண்மையான சுதந்திர நாள்.'

— இதுதான் மிகவும் பிடித்தமான பொன்மொழி.

* வாழைப்பழத்திற்கு 'Plantain' என்பதுதான் சரியான ஆங்கிலச் சொல் என்று நான் சொல்கிறேன். என் நண்பன், Banana என்பதுதான் சரி என்கிறான். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

— கே. முரளி, சென்னை—17.



பொதுவாக இரண்டு பெயர்களிலுமே வாழைப் பழத்தைக் குறிப்பிடுகிறோம். ஆனாலும், வாழைப் பழத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்று, தோலை உரித்துவிட்டு நேராக உண்ணக் கூடிய பழம். அதை **Plantain** என்று சொல்லவேண்டும். மற்றொரு வகை வாழைப் பழம் வேக வைத்தோ, சுட்டோ சாப்பிடக் கூடியது. அதை **Banana** என்று கூற வேண்டும். ஆயினும், **Plantain** தான் அதிகமாகக் கிடைக்கக் கூடியது.

* ஆகஸ்ட் இதழில் வெளிவந்த 'கவியரசன் காளிதாசன்' கதையில் வித்யாரத்னம் என்ற பெண் 'வியாகரணம்' கற்றுத் தேர்ச்சி அடைந்தாள் என்று வருகிறது. 'வியாகரணம்' என்றால் என்ன?

— வெ. சேதுராமன், சிங்கம்புணரி.

சொற்களைப் பகுதி, விகுதி என்று பல கூறுகளாகப் பாகுபாடு செய்து ஆராயும் நூலுக்கு 'வியாகரணம்' என்று பெயர்.

* நம் நாட்டின் தேசிய மொழிகள் எத்தனை?

— பி. லாவண்யா, செங்கல்பட்டு.

பதினாறு

* நம் தமிழகத்திலுள்ள காவலூர் வானியல் ஆராய்ச்சி நிலையம் மிகப் பெரியது என்கிறார்களே, உண்மையாகவா?

— ஜி. பானு, திருப்பூர்.


ஆம். ஆசியாவிலேயே பெரியது இதுதான்.





காந்திஜி படித்த இரு பள்ளிகள்

காந்திஜி படித்த இராஜ கோட்டையிலுள்ள ஆரம்பப் பள்ளியும், அதே நகரிலுள்ள ஆல்பிரட் ஹைஸ்கூல் என்ற உயர்நிலைப் பள்ளியும்





ஆந்திர நாட்டில் தெனலி என்று ஒரு கிராமம். அங்கே விளையாட்டிலேயே பொழுதைக் கழித்து வந்தான் ராமன்.
அவனிருக்கும் இடத்தில் சிரிப்பொலி எப்போதும் கேட்டுக் கொண்டிருக்கும்.
அகட விகட சக்கரவர்த்தி!
கதை: ஆனந்தி
படம்: வினு
ஒரு நாள் ராமனின் தாய்...
எலி உபத்திரவம் தாங்கலியே! இருக்கிற இரண்டு புடவையும் கூளமாயிட்டுதே!
அம்மா! கவலைப்படாதே! ஒரு பூனை வளர்ப்போம்!
ராமன் ஒரு பூனைக்குட்டியை ஆசையோடு வளர்த்தான்...
செல்லக் கண்ணு!
எலி உபத்திரவமும் குறைந்தது...
பலே! விடாதே பிடி! உனக்கு 'எலி சம்ஹார சூரன்' பட்டம் கொடுக்கிறேன்!


அடுத்த வீட்டுக் காரர் ஒரு கிளியை அன்புடன் வளர்த்து வந்தார்...
ரங்கா! ரங்கா!
ஒரு நாள்...
ஐயோ! என் கிளி போச்சே!
ராமனிடம் சண்டைக்கு வந்தார் பக்கத்து வீட்டுக் காரர்.
ராமா! உன் பூனை என் அருமைக் கிளியைக் கொன்று விட்டதே...
பின்னே பூனை கிளியைக் கொஞ்சிக் கொண்டா இருக்கும்?
உங்க கிளிக்குத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியலை. உங்களுக்குக் கிளியைப் பாதுகாக்கத் தெரியலை. அதுக்கு நான் என்ன செய்ய?
கோபமடைந்த அடுத்த வீட்டுக் காரர் பூனை அந்தப் பக்கம் வந்த போது...




பூனை இறந்து ஒரு மாதமாகி யிருக்கும்... ஒரு நாள்...
என்னடா அது?
அப்பா என்ன கனம்!
இந்தப் பெட்டியை ராமன் வீட்டில் கொடுக்கச் சொல்லி ஜமீன்தார் கொடுத்தார். ஆனால் அவன் வீடு பூட்டிக் கிடக்குதே!
என் வீட்டில் வைச்சுட்டுப் போங்க: ராமன் வந்ததும் கொடுத்துடறேன்.
பக்கத்து வீட்டுக் காரருக்கு ஆவல் குறுகுறுப்பை அடக்க முடிய வில்லை.
ஜமீன்தார் அனுப்பினாராமே? என்னவா யிருக்கும்?
பெட்டியைத் திறக்கவும்...
ஆ! ஐயோ!
அன்று மாலை ராமனின் தாயாரிடம் பக்கத்து வீட்டுக்காரர் கோபமாக வந்து...
என் வீடு பூரா எலி மயம்! இப்படியா செய்வது? பிள்ளையைக் கண்டித்து வளர்க்க வேண்டாமா?
ஜமீன்தார் பெட்டியை எனக்குத் தானே அனுப்பினார்? நீங்க ஏன் திறந்தீங்க?





ராமனுடைய புத்திசாலித்தனத்தில் மகிழ்ந்த சந்நியாசி அவனுக்கு மந்திரம் உபதேசித்தார்.


ஆயிரத்தெட்டு தடவை மந்திரம் சொல்லி, காளியைப் பிரார்த்தனை செய்தான் ராமன்.
காளி பிரத்யட்சமாக, முதலில் பயந்தே போனான்!
என்ன வேண்டும்? எதற்கு அழைத்தாய்?
ராமன் சமாளித்துக் கொண்டு சிரிக்கத் தொடங்கினான்! கோபத்தில் காளியின் முகம் மேலும் பயங்கரமாயிற்று...
என்னடா சிரிக்கிறாய்!
ராமன் துணிந்து பேசினான்...
அம்மா! எனக்கு இருக்கும் ஒரு மூக்கில் ஜலதோஷம் பிடித்தாலே ஒரே அவஸ்தை. உனக்கோ ஆயிரத்தெட்டு முகங்கள். ஜலதோஷம் வந்தால் இரண்டு கைகளால் எப்படி சமாளிக்கிறீர்கள்?
காளியும் சிரித்துவிட்டாள்.
பொல்லாத பயல்! வேடிக்கையாகப் பேசுகிறாயே...



காளிமாதா பக்தனுக்கு வர மருள எண்ணி, பிரசாதங்கள் அடங்கிய கிண்ணங்களை அவன் பக்கம் நீட்டினாள்.
இதில் கல்வி, இதில் செல்வம் இரண்டில் ஒன்று எடுத்துக் கொள்!
ராமன் இரண்டு கைகளாலும் வெடுக்கென்று இரண்டு கிண்ணங்களிலிருந்தும் பிரசாதங்களை அள்ளி வாயில் போட்டுக்கொண்டு விட்டான்.
அடேய்! நீ என்னையே ஏமாற்றப் பார்க்கிறாயே!
தாயே! எனக்குக் கல்வி, செல்வம் இரண்டையும் நீங்கள் தந்து தானே ஆக வேண்டும்!
தந்தேன்! ஆனால் நீ பேராசைப் பட்டதால் விகட கவியாகவே இருப்பாய். கவிஞனாக மாட்டாய்!
சிலகாலம் சென்று ராமனுக்கு அவன் தாயார் கல்யாணம் செய்து வைத்தாள்.



ஓராண்டுக்குப் பின்... ஒரு நாள்...
அம்மா! எனக்குக் கல்யாணமாகி, குழந்தையும் பிறந்து விட்டது. உங்களை யெல்லாம் வைத்துக் காப்பாற்ற நான் கை நிறையச் சம் பாதிக்க வேண்டாமா?
நம் அரசர் கிருஷ்ண தேவராயரிடம் போய் அரண்மனையில் வேலை கேட்கி றேன்.
சௌக்கியமாகப் போய் வா!
உத்தியோகம் கிடைத்ததும் உங்களை யெல்லாம் தலைநகருக்கே அழைத்துக் கொண்டு விடுவேன். வரட்டுமா?
தென்னாட்டில் கிருஷ்ண தேவராயர் அரசு புரிந்து வந்த காலம். நாட்டில் சுபிட்சம் தழைத்திருந்தது. தலைநகர் விஜய நகரம் செல்வச் செழிப்பில் மிதந்தது!
சந்தனப் பொட்டும், தலைப் பாகையும் ஜரிகை துப்பட்டாவும் அணிந்து, ராமனும் கவிகளோடு சேர்ந்து அரண்மனைக்குள் நுழைந்துவிட்டான்!



அரச சபையின் கவிஞர்களுடைய வாதம்....
மாயா வாதமே சிறந்தது. இந்த உலகம் மாயை, நாம் செய்யும் தொழில் மாயை, இன்பமும் துன்பமும் மாயை...
ராமன் தைரியமாகக் குறுக்கிட்டு...
அதெப்படி? நாம் பார்ப்பதும் கேட்பதும் மாயையா? உண்பதும் சுவைப்பதும் மாயையா?
ஆம், சந்தேகமில்லை!
அரசே! ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். நாமெல்லாம் சாப்பிடுவோம். இவர் மட்டும் பார்த்துக்கொண்டிருக்கட்டும். இவர் வாதப்படி சாப்பிடுவது மாயைதானே!
நீ வேடிக்கையாகப் பேசுகிறாய்! நமது அரண்மனையில் விகட கவியாக இரு!
என் பாக்கியமே தாங்கள் விருப்பம்!
தெனாலியிலிருந்து வந்திருந்ததால் தெனாலி ராமன் என்று அழைக்கப்பட்டான் ராமன். ஒரு நாள்......
பெத்தண்ணா! வடக்கேயிருந்து ஒரு மகா பண்டிதர் நாளை வருகிறார். அரசவைக் கவிஞரான நீர் அவரை வென்று நம் சபையின் பெருமையைக் காக்க வேண்டும்.




மன்னவா! அவர் சாஸ்திரங்களைக் கரைத்துக் குடித்தவராமே, எனக்குக் கவலையாக இருக்கிறது!
அரசே! யாரும் கவலைப்பட வேண்டாம். நான் அந்தப் பண்டிதருடன் வாதிட்டு வெல்வேன்!
மறுநாள் அரசவையில்...
வரவேணும் லக்ஷ்மீதரரே! வரவேணும்! அமருங்கள்!
நாம் காஷ்மீரம் முதல் காஞ்சிவரை திக்விஜயம் செய்திருக்கிறோம். இன்று விஜயநகரக் கவிகளை வெல்ல வந்திருக்கிறோம்!
தெனாலிராமன் அரசவைப் பண்டிதராகவும் பெத்தண்ணா அவனுக்குச் சுவடி தூக்கும் ஆளாகவும் வேஷமிட...
வாதத்துக்கு நான் தயார்... எங்கே உங்களுக்குத் தெரிந்த நூல்களைக் கூறுங்கள் பார்க்கலாம்!
தாம் கற்ற, இயற்றிய நூல்களின் பெயர்களையெல்லாம் அடுக்கினார் லக்ஷ்மீதர கவி.
ஹூ, இவ்வளவுதானா? நீர் திலகாஷ்ட மகிஷ பந்தனம் படித்ததில்லை போலிருக்கிறதே, அதைத்தான் நான் வாதத்துக்கு எடுத்துக் கொள்ள நினைத்தேன்...



லக்ஷ்மீதர கவி கவலையில் ஆழ்ந்தார். நல்ல வேளையாக....
நேரமாகிவிட்டது, விருந்துண்டு இளைப்பாறுங்கள், நாளைக் காலை வாதம் செய்யலாம்.
மறு நாள் காலை லக்ஷ்மீதர கவி சபைக்கு வரவில்லை.
அரசே! எங்கு தேடியும் லக்ஷ்மீதர கவியைக் காணவில்லை!
தெனாலிராமா! வெற்றி உனக்குத்தான்! லக்ஷ்மீதர கவி ஓடிப் போய் விட்டான்!
எல்லாம் திலகாஷ்ட மகிஷ பந்தனத்தின் மகிமை!
அது என்ன நாமம்? பிரித்துக் காட்டு பார்க்கலாம்!
தெனாலிராமா! என்ன இது? அரசசபையில் பொய் சொன்னாயே!
மன்னவா! நானா பொய் சொல்வேன்? திலகாஷ்ட மகிஷ பந்தனம்...... அதாவது.......
...எள்ளுச் செடி சுள்ளிகள் எருமை கட்டும் கயிற்றால் கட்டப்பட்டிருப்பதாகத்தானே சொன்னேன்.
ஹஹஹா! அதைக்கேட்டு லக்ஷ்மீதர கவி பயந்து ஓடிப்போனார். அது உன் தவறில்லைதான்!


அரசனின் அன்பைப் பெற்ற தெனாலி ராமன், சிலகாலம் சென்று வட்டிக் கடை சின்னய்யா பற்றி கேள்விப் பட்டான்.
சின்னய்யா கடைக்குப் போனான் தெனாலிராமன். ... அப்போது...
சாமி! மழை இல்லே, விளைச்சலும் இல்லே, கொஞ்சம் வட்டி குறைச்சுக்க...
மகா கஞ்சன்... ஏழைகளிடம் கூட இரக்கமில்லாமல் அநியாய வட்டி வாங்குவான்.
டேய்! ஆடு வாங்கினா குட்டி போடு மில்லே? என் பணமும் குட்டி போடும்! அதை எப்படி வேண்டாமென்று தள்ள முடியும்? பணத்தை வட்டியோடு எண்ணி வை!
முழுப் பணத்தையும் கட்டிவிட்டு வருத்தத்துடன் வந்த குடியானவனிடம் தெனாலிராமன்...
இதோ பார்! சின்னய்யாவுக்கு புத்தி புகட்டணும். நான் சொல்கிறபடி செய்!
தெனாலிராமன் யோசனைப்படி தன் பெண் கல்யாணத்துக்கு என்று கூறி சின்னய்யாவிடம் பாத்திரங்கள் கடன் வாங்கிப் போனான் குடியானவன். திருப்பித் தரும்போது...
பெரிய பாத்திரங்கள் பத்து. சரி, இதென்ன பத்து குட்டிப் பாத்திரங்கள்?




எல்லாம் கல்யாணத்தன்று ராத்திரி குட்டி போட்டுச்சு சாமி!
ஆ! ஆமாம்! எல்லாம் சினையாயிருந்தன; நான் மறந்தே விட்டேன். சரி, நீ போ!
சில காலம் சென்று குடியானவன் சில வெள்ளிப் பாத்திரங்கள் கடன் கேட்டான்.
சரி, கொண்டுபோ. திருப்பித் தரும்போது குட்டிகளையும் ஞாபகமாக் கொண்டு வா!
வெள்ளிப் பாத்திரங்களைத் தெனாலிராமனிடம் ஒப்படைத்தான் குடியானவன். சில நாட்கள் சென்று....
என்னப்பா ஒருமாசமாச்சு ஏன் பாத்திரங்களைத் திருப்பித் தரலே?
ஐயோ! அதை ஏன் கேட்கறீங்க! அத்தனை பாத்திரமும் செத்துப் போச்சு!
கடும் கோபத்துடன் சின்னய்யா அரசனிடம் முறையிட்டான்.
இதென்ன மோசடி? பாத்திரம் சாகுமா? அடேய்! நிஜத்தைச் சொல்லு!
தெனாலி ராமன் இடையில் புகுந்து....
மன்னவா! சின்னய்யா இரவல் தரும் பாத்திரங்கள் குட்டி போடும் என்பது உண்மையானால் அவை சாகும் என்பதும் நிஜமாகத்தானே இருக்க வேண்டும்?


நடந்ததை விவரமாக அறிந்த மன்னன் சிரிக்க, சின்னய்யாவுக்கு வெட்கமாகிவிட்டது.
சின்னய்யா! ஏழைகள் வயிற்றில் அடிக்கலாமா?
மகாராஜா! மன்னியுங்கள்; இனி நியாய வட்டிக் கடை நடத்துவேன்.
வெள்ளிப் பாத்திரங்களைத் திருப்பித் தந்தான் தெனாலிராமன். சில காலம் சென்று அரசர் ஒரு சித்திர மண்டபம் கட்டினார்...
ஆகா! அற்புதமான சித்திரங்கள்! ஓவியர்களுக்கு நிறைய சன்மானம் அளிக்க வேண்டும்.
இந்தப் பெண்ணின் நீண்ட கண்ணில் என்ன பாவம்!
சித்திர மண்டபத்துக்குத் தெனாலிராமன் வந்தான்.
அரசே! இந்தச் சித்திரங்களின் மறு பக்கத்தை அடுத்த அறையில் பார்க்க வேண்டுமா? ஒரு பக்கம் மட்டும் தானே இங்கு தெரிகிறது?
மடையனாயிருக்கிறாயே! அதையெல்லாம் கற்பனையில் நாம் காண வேண்டும்!
ஓஹோ! அப்படியா!
சில காலம் சென்று...
அரசே! நான் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்று விட்டேன்!
அப்படியா! சந்தோஷம். மகாராணியின் புதிய மாளிகையை உன் கையால் அலங்காரம் செய்!


அவ்வாறே செய்து, பார்வையிட மன்னரை அழைத்தான் தெனாலி ராமன்.
இது என்ன பயங்கரம்?
அரசே! இது புதுமாதிரி ஓவியம். மற்ற பாகங்களைக் கலைக் கண்ணோடு கற்பனை செய்து கொள்ள வேண்டும்!
மன்னருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது...
என்னை அவமானப் படுத்தும் இந்தக் கர்வியை இழுத்துப் போய்ச் சிரச்சேதம் செய்யுங்கள்!
தெனாலிராமனைக் காவலர்கள் கொலைக் களத்துக்கு இழுத்துப் போனார்கள்....
ஆற்றில் இறங்கி காளியைத் தியானிக்கிறான். 'ம்' என்றதும் இரண்டு பேரும் ஒரே சமயத்தில் வாளை வீசி விடுங்கள்!
தெனாலிராமனின் கடைசி விருப்பத்துக்கு காவலர் சம்மதித்தனர்...
காளியை நினைத்துக் கொண்டே பரலோகம் போக விரும்புகிறேன்...
தெனாலிராமா! ரொம்ப நேரம் பண்ணாதே!
'ம்' என்று குரல் கொடுத்த தெனாலி ராமன் அதே சமயம் நீருக்குள் மூழ்கிவிட...
ஆ!
ஐயோ!
வெட்டுப்பட்ட காவலர்கள் வெட்டுக் காயம் பயக்காயம் தலைமறைவானார்கள். மறுநாள்...
ஏதோ வேடிக்கையாகச் சித்திரம் எழுதியவனுக்கு அநியாயமாய் மரண தண்டனை தந்து விட்டேனே.....



கேட்டுக் கொண்டே வந்தான் தெனாலிராமன்.
"மன்னவா! கவலைப் படாதீர்கள்! நீங்கள் தவறு செய்ய நான் அனுமதிப்பேனா?
அடேடே! எப்படி தப்பினாய்?
காளி காப்பாற்றினாள்!
மன்னன் மகிழ்ந்து காவலர்களை மன்னித்தான். தெனாலிக்கு வெகுமதி -கள் தந்தான். ஓர் இரவு தெனாலி ராமன் வீட்டில்...
வேலியோரம் இரண்டு பேர் பதுங்குகிறார்கள். திருடர்களாய் இருக்கும்.
தெனாலி ராமன் யுக்தி செய்தான். மகனை அழைத்து...
கிருஷ்ணா! திருடர் பயம் அதிகமா யிருக்கிறது. நகைகள், வெள்ளிப் பாத்திரங்களை யெல்லாம் பெட்டியில் வைத்துப் பூட்டி கிணற்றில் இறக்கி விடலாம். யாருக்கும் தெரியாது, பத்திர மாய் இருக்கும்.
இதைக் கேட்ட திருடர்கள் மெய் யென்று நம்பி....
கிணறு வற்றி விட்டதும் கயிறு கட்டி பெட்டியை மேலே இழுக்க வேண்டியது தான்!
தூக்க முடியாமல் தூக்கிவந்து நிலவொளியில் திறந்தால்...
அடப்பாவி! அத்தனையும் செங்கல்லா அடுக்கி யிருக்கானே!
மறுநாள் காலை...
அப்பா! தோட்டத்துக்குத் தண்ணி பாய்ஞ்சிருக்கு..
திருடர்கள் உபயம்! நமக்குக் கூலி மிச்சம்!


ஒரு நாள் மன்னர் மகாராணியிடம் அழகிய ஒரு கவிதையின் நயத்தை விளக்கும் போது....
அச்சூ!
சீ! ரசிக்கத் தெரியாத ஜன்மம்.....
அரசி தெனாலி ராமனை அழைத்து....
தும்மல் வந்தது என் தப்பா? கோபித்துக் கொண்டு போனவர் அப்புறம் இந்தப் பக்கமே வரலையே!
கவலைப்படாதீர்கள், நான் இருக்கேன்.
மந்திராலோசனையின் போது....
இந்த ஆண்டு விளைச்சல் ரொம்பக் குறைவு. என்ன செய்யலாம்?
என்னிடம் அருமையான விதை நெல் இருக்கிறது. மூன்று மடங்கு விளையும்!
ஆச்சர்யமாயிருக்கே!
ஆனால் ஒன்று, அதை விதைக்கும் போது தும்மக் கூடாது. தும்மினால் விளையாது!
அசட்டு நிபந்தனை!
அப்படியா! அரசியாரிடம் கூறி விட்டு வருகிறேன்!
மன்னர் புரிந்து கொண்டார். தவறுக்கு வருந்தி ராணியைக் காணச் சென்றார்.
தெனாலிராமா! நான் சாம்ராஜ்ய சக்கரவர்த்தி! நீ அகடவிகட சக்கரவர்த்தி!



1. மிஸ்டர் விஜயமங்கலம்

சுமதிக்குக் கோபம் கோபமாக வந்தது. கோபம் சோகமாக உருமாறியது. யார் மீது அவளுக்குக் கோபம்?

அதையும் அவளால் சரியாகச் சொல்ல முடியவில்லை. சிங்காரச் சென்னையில் எல்லா வசதிகளுடன் வாழ்ந்து கொண்டிருப்பவளைச் சிற்றூரில் போய் இருக்கச் சொன்னால் கோபம் பிறக்காதோ?

சுமதியின் தந்தை இந்தியன் வங்கியில் ஓர் அதிகாரி. அவரை ஒரு கிளை வங்கியின் மேலாளராக உயர்த்தினார்கள். அதே நேரத்தில் ஒரிஸ்ஸாவில் உள்ள கிளை வங்கிக்கு மாற்றினார்கள். அதை அறிந்தபோது சுமதி அவ்வளவாகக் கோபப்படவில்லை; சோகம் கொள்ளவில்லை.

"சுமதி! நீ தமிழ் மீடியத்திலே படிக்கறே. அதனாலே ஒரிஸ்ஸாவிலே உன் படிப்பைத் தொடர முடியாது" என்று தந்தை கூறியபோதுகூட அவள் அவ்வளவு கோபப்படவில்லை. சோகம் கொள்ளவில்லை. அவள் படிக்கும் பள்ளியில் விடுதி உண்டு. அதனால், "அப்பா, என்னை விடுதியில் சேர்த்துட்டு ஒரிஸ்ஸா போகப் போகிறார்" என்று நினைத்தாள்.

ஆனால் அம்மா அப்படி விட்டுவிடவில்லை.

"விடுதிச் சாப்பாடு உடம்புக்குக் கெடுதி. என் தங்கைக்குச் சுமதி என்றால் உயிர். அவள் பலமுறை சுமதியை விடுமுறையில் தன் வீட்டுக்கு அனுப்பச் சொன்னாள். நாம அனுப்பலே. இப்போ சுமதியை அவ வீட்டிலே விட்டுடுவோம். குழந்தையில்லாத என் தங்கை சுமதியைக் கண்ணும் கருத்துமா பார்த்துக்குவா" என்று அம்மா சொன்னதும், அப்பா ஒப்புக் கொண்டாரே, அப்போது வந்தது அந்தக் கோபம்!

ஒரிஸ்ஸா பயண ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது இருந்ததால், அப்பாவுக்குச் சுமதியை சித்தி வீட்டுக்கு அழைத்துப் போய்விட நேரம் இல்லை. அதனால் அவர் விளக்கமாக

எழுதிய கடிதத்தைப் படித்துவிட்டு அன்பும் ஆர்வமுமாக சித்தியும் சித்தப்பாவும் சுமதியை அழைத்துச் செல்ல வந்துவிட்டனர். அப்போது தான் அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது! கோபம் சோகமாக உருமாறியது.

சுமதிக்கு யார் மீது கோபம்?

அழைத்துச் செல்ல வந்த சித்தி — சித்தப்பாவின் மீதா? அனுப்பி வைக்கும் அம்மா — அப்பாவின் மீதா? 'தமிழ்ப் பற்று' என்று பேசித் தமிழ் மீடியத்தில் சேர்த்துவிட்டுச் செத்துப் போன தாத்தாவின் மீதா? அப்பாவை ஒரிஸ்ஸாவுக்கு மாற்றிய மேலதிகாரியின் மீதா?

யார் மீது கோபம் என்று அவளுக்குத் தெரியவில்லை. என்றாலும் கோபம் மட்டும் குறையவில்லை.

சுமதியின் கோபத்தை, ''சித்தியோடு போக மாட்டேன்' என்று அவள் அடம் பிடித்ததை, 'ஒரிஸ்ஸாவுக்கு நானும் வரேன்' என்று அழுததை அப்பாவும் அம்மாவும் பார்த்துச் சங்கடப்பட்டார்கள்; சுமதியைச் சமாதானப்படுத்த முயன்றார்கள். ஆனால் தங்கள் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை.

அதனால் சுமதி சென்னையிலிருந்து சிற்றூருக்கு வந்துவிட்டாள். ஏற்காடு எக்ஸ்பிரஸில் ஏறி, ஈரோட்டில் இறங்கி, பேருந்தில் பயணத்தைத் தொடர்ந்து சித்தியின் ஊருக்கு வந்துவிட்டாள்.

சித்தியைப் பலமுறை அவள் பார்த்திருக்கிறாள். ஆனால் சித்தியின் ஊருக்கு இப்போதுதான் முதல் முறையாக வருகிறாள். அதனால் சித்தி பத்மாவும் சித்தப்பா முத்துசாமியும் சுமதியை ஓர் இளவரசி போல நடத்தினர் என்றாலும் அன்றிரவு முழுதும் சுமதி அழுதாள். இனிமேல் அழுது பயனில்லை என்று விடிவதற்குள் உணர்ந்து கொண்டாள். அதனால் மறுநாள் சுமதி சோகத்தையும் கோபத்தையும் விட்டு விட்டுப் பழைய சுமதியானாள்.

மூன்றாம் நாள் மாலை.

சுமதி. சித்தியின் ஊரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினாள். சிறிய வீடுகள் நிறைந்த வீதிகளையும் வீதிகளில் செலும் மனிதர்களையும் பார்த்துக் கொண்டே சென்றாள்.

அஞ்சல் நிலையம். பேருந்து வசதி, உயர்நிலைப் பள்ளி, புகை வண்டி நிலையம் இவ்வளவும் கொண்ட அந்த ஊர் ஓரளவு வளர்ச்சியுற்றிருப்பதை அவள் உணர்ந்தாள். என்றாலும் பெரும்பாலோர் ஏழைகள் என்று நினைத்தாள். இவ்வாறு நினைத்தபடியே நடந்த சுமதி நெடுஞ்சாலையை அடைந்தாள். அங்கே சாலையின் ஓரத்தில் பெரிய அளவு பெயர்ப் பலகையில், மஞ்சள் பின்னணியில் கறுப்பு எழுத்தில் எழுதியிருந்த பெயரைப் படித்தாள்.

விஜய மங்கலம்

சித்தியின் ஊர்ப் பெயர் இதுதான் என்பது தெரியும்! என்றாலும் அதை மீண்டும் மீண்டும் படித்தாள்!

'விஜய மங்கலம்!'

'விஜய மங்கலம்!'

'விஜய மங்கலம்!'

திடீரென்று கலகலவென்று சிரித்தாள் சுமதி.

சுமதி நின்ற இடத்துக்குச் சிறிது தூரத்தில் சாலை ஓரத்திலிருந்த மரத்தில் சாய்ந்தபடி நின்றிருந்த ஒரு பையன் சுமதியின் செயலைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் முகம் தொட்டாற் சிணுங்கி போலச் சுருங்கியது. அவன் மரத்திலே சாய்ந்த உடம்பை நிமிர்த்தி, நேராக்கினான். பிறகு மெல்ல நடந்து வந்து சுமதியின் முன்னே நின்றான்.

அவன் நின்றதும், சுமதியின் சிரிப்பு நின்றது. அவள் ஓரடி பின் வாங்கி நகர்ந்தாள்.

'விஜய மங்கலம்னு ஊர்ப் பேரைப் படிச்சு ஏன் தாயே சிரிச்சே?''

இப்போது சுமதியின் முகம் சிறுத்தது:

''உங்க ஊர்லே தங்கை மாதிரி இருக்கிறவங்களையும் தாயேன்னு தான் கூப்பிடுவீங்களா?''

''எங்க தாத்தா புள்ளைங்களைத் 'தாயே, தாயே'ன்னுதான் கூப்பிடுவார். சில சமயம் எனக்கு அது வருது தங்கையே!''

''புள்ளைங்களைத் தாயேன்னு கூப்பிடுவாங்களா? புள்ளைங்கன்னா....?'

''பெண்கள்.''

சுமதி கலீர் என்று சிரித்தாள்.

''எங்க ஊரிலே புள்ளைங்கன்னு ஆண்கள்; உங்க ஊரிலே பெண்களா?''

''ஆமாம் தாயே! சேச்சே, தங்கையே! நீ எங்க ஊரின் பேரைப் படிச்சு எதுக்குச் சிரிச்சே?''

''மூணு நாளைக்கு முன்னாலே நான் சென்னையிலே விருகம்பாக்கத்திலே புதிய பங்களாவிலே இருந்தேன். விருகம்பாக்கத்திலே எங்கே பாத்தாலும் புத்தம் புது பங்களாக்கள்தான்! அவ்வளவு முன்னேற்றம்! மூணு நாளுக்குப் பின்னாலே விஜய மங்கலம் என்கிற ஊரிலே இருக்கேன். இங்கே புதுக் கட்டடத்தைப் பாக்க முடியாத படி அவ்வளவு பின்னேற்றம்! என் வாழ்க்கையிலே நடந்த அதிசயம் எனக்கே சிரிப்பைக் கொடுத்திடுச்சு. இது ஒரு காரணம்.''

''இன்னொரு காரணமும் இருக்குதா?''

''உம்.....''

''சொல்லு.''

சுமதி சொல்லவில்லை.

அந்தப் பையன் ''தங்கையே....'' என்று ஆரம்பித்ததும் அவள் குறுக்கிட்டாள்.

''என் பேரு சுமதி. பேரைச் சொல்லியே கூப்பிடு. கொஞ்சம் இயல்பா இருக்கும்.''

''சரி சுமதி! நீ சிரிச்சதுக்கு இன்னொரு காரணம் என்ன?''

''சொல்றேன். ஆனா கோபிக்கக் கூடாது. உன்னைப் பாத்தா, உங்க ஊரைப் பத்தி ஏதாவது தப்பா சொல்லிட்டா சண்டைக்கு வர்றவன் போலத் தெரியுது.''

சுமதி நிறுத்தினாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

சுமதி தொண்டையைக் கனைத்துக் கொண்டாள். ஒருமுறை, இருமுறை, மும்முறை கனைத்துக் கொண்டாள். பிறகு, ''விஜய மங்கலம்! தேனாக இனிக்கும் பெயர்! பாலாக இனிக்கும் பெயர்! அதைச் சொல்லிச் சொல்லிப் பார்த்ததும் தேனையும் பாலையும் குடிச்ச மகிழ்ச்சி! அந்த மகிழ்ச்சியாலேதான் நான் சிரிச்சேன்'' என்றாள்.

''நீ பொய் சொல்றே.''

அவன் சொன்னதை அவள் மறுக்கவில்லை.

''ஆமாம். உங்க ஊரைப் பத்தி சொன்னப்புறம் கோபிக்கக் கூடாதுன்னு சொன்னேன். நீ 'சரி கோபிக்கலை'ன்னு சொல்லலை. எனக்கெதுக்கு வீண் வம்பு? அதனாலே நீ கோபப்படாத மாதிரி சொல்லிட்டேன்.''

அவள் சொன்னதும் அவன் சிரித்தான். ''பட்டணத்துப் புள்ளை.... நல்லா பேசறே. நான் கோபிக்கலே. சொல்லு, ஏன் சிரிச்சே?''

''எங்கேயோ ஒரு ஜோக் படிச்சிருக்கேன். பிச்சை எடுக்கறவனை உன் பேரு என்னன்னு கேட்டா, அவன், 'பிரபு'ன்னு பதில் சொன்னானாம். விஜயம்னா வெற்றின்னு அர்த்தம். மங்கலம் சுபமான சொல். இந்த ஊரிலே வெற்றியும் இல்லே! மங்கலமும் இல்லே! இதுக்கு விஜய மங்கலம்னு பேரு இருக்கிறது, பிச்சைக்காரனுக்குப் பிரபுன்னு பேரு இருக்கிற மாதிரிதானே? இதை நினைச்சதும் சிரிப்பு வந்துடுச்சி!''

சுமதி சொன்னதைக் கேட்டு அவன் கோபப்படவில்லை. ஆனால் சோகமடைந்தான். அதற்குள் மெல்ல இருள் அங்கே பரவத் தொடங்கி விட்டது.

''சுமதி! ஒருத்தன் பிச்சை எடுக்கறதுக்காக, அவன் சொந்தப் பேரு

பிரபுன்னு இருந்தா அதை மாத்தி, 'பிச்சை'ன்னு வைச்சுக்க முடியுமா? ஒரு காலத்திலே இந்த ஊரிலே வெற்றி இருந்தது. மங்கலம் இருந்தது. அந்த நிலை மாறிட்டதுக்காக ஊரின் பேரை, 'தோற்ற அமங்கலம்'னு மாத்த முடியாது. சுமதி! இதோ இந்தப் பெயர்ப் பலகையைப் பார்! நீ படிக்கிறப்போ பளிச்சின்னு இருந்த எழுத்துங்க, இப்போ மங்கலா தெரியுது; கொஞ்ச நேரம் பொறுத்து, கண்ணுக்குத் தெரியாம இருட்டிலே மறைஞ்சிடலாம். ஆனால் இருள் மறையும்! சூரியன் வரும்! வந்தால் விஜயமங்கலம்னு பளிச்சின்னு தெரியும். இந்தப் பேரைப் போல ஊரும் ஒரு நாள் பளிச்சிடும்! விஜயமும் மங்கலமும் அப்போ இந்த ஊரிலே விளையாடும்!"

அவன் சொல்லிவிட்டு ஊரை நோக்கி நடந்தான்.

அப்போதுதான் இருள் கவிழ்ந்து கொண்டதை உணர்ந்த சுமதி அவனுடன் சேர்ந்து ஊருக்குள் போக நினைத்தாள். அவனை அழைக்க விரும்பினாள். அவன் பெயர் என்ன? கேட்க மறந்துவிட்டோமே? என்று எண்ணிய சுமதி ''மிஸ்டர் விஜய மங்கலம்! கொஞ்சம் நில்லு. நானும் வரேன்'' என்று கத்தினாள்.

அவள் குரல் அவன் காதில் விழுந்தது. ஆனாலும் அவன் நிற்காமல் நடந்தான்.

* * * * *

இரண்டு நாட்கள் சென்றன.

அது ஆகஸ்டு மாதமாக இருந்தும் முத்துசாமி தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, விஜய மங்கலம் உயர் நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பில் சுமதியைச் சேர்த்துவிட்டார்.

உயர்நிலைப் பள்ளிக் கூடத்துக் கட்டடமும் வகுப்பறைகளும் சுமதிக்குப் பிடிக்கவில்லை. ஆசிரியர்களும் மாணவர்களும் அணிந்த உடைகளும் நடந்து கொண்ட முறைகளும் அவளுக்குப் பிடிக்கவில்லை. விருகம்பாக்கத்துக்கு நூறு மதிப்பெண் கொடுத்தால், விஜய மங்கலத்துக்குப் பத்து மதிப்பெண் கொடுக்கலாம். அவளது சென்னைப் பள்ளிக்கூடத்துக்கு நூறு மதிப்பெண் கொடுத்தால் இந்தச் சிற்றூர்ப் பள்ளிக்கு ஐந்து மதிப்பெண் தருவதே அதிகம். இதுதான் சுமதியின் மதிப்பீடு.

அவள் பெண்கள் பள்ளியில் படித்தாள். இங்கே சிறுவர் சிறுமியர் இணைந்து படிக்கிறார்கள். பல வகுப்புகளில் மாணவர்கள் தரையில் உட்கார வேண்டும். சுமதி இவற்றைப்பார்த்துச் சென்னைக்குச் செல்ல முடியுமா? ஒரிஸ்ஸாவுக்கு ஓட முடியுமா? அவள் எதையும் தாங்கும் அரிய கலையைக் கற்றுக்கொள்ள முயன்றாள். சித்தப்பாவும் சித்தியும் அவளிடம் கொண்ட அன்பு, பேரன்பு ஒன்றுதான் விஜய மங்கலத்தில் அவளுக்கு ஆறுதல் தந்த ஒரே விஷயம்.

அவள் பள்ளியில் சேர்ந்த அன்று பிற்பகலே, நெடுஞ்சாலையில் தன்னைத் தாயே என்றழைத்த பையனைப் பார்த்தாள். உடனே உற்சாகத்துடன், ''மிஸ்டர் விஜய மங்கலம்!'' என்று கூப்பிட்டாள்.

அந்த மிஸ்டர் விஜய மங்கலம் திரும்பிப் பார்த்தான். அவன் கண்கள் வியப்பை வெளியிட, ''சுமதி, நீ இந்த ஊர் விருந்தாளின்னு நினைச்சேன். இந்தப் பள்ளிக்கூடத்திலே சேர்ந்திருக்கறையா?'' என்று கேட்டான்.

''ஆமாம் மிஸ்டர் விஜய மங்கலம்! குறைஞ்சது ஒரு வருடமாவது இங்கே இருப்பேன். நீ எந்த வகுப்பு? நான் எட்டாம் வகுப்பு!''

''நான் ஒம்பது. அது சரி, எனக்குப் புதுப் பேரை வச்சிக் கூப்பிடறியே. என் பேரு என்னன்னு தெரிஞ்சுக்க வேண்டாமா?''

''வேண்டாம், உன் பேரு என்னன்னு கேட்டா வீர மகா திலகம் விஜயாலயச் சோழன்னு சொல்லுவே. அதைக் கேட்டு நான் சிரிப்பேன். ஏன் சிரிச்சேன்னு நீ சண்டைக்கு வருவே.''

சுமதி சொன்னதும் அவன் சிரித்தான்.

''கலகலன்னு சிரிக்கவும் தெரியுது! கலகலன்னு பிறரைச் சிரிக்க வைக்கவும் தெரியுது. சுமதி என் பேரு செங்கோடன்.''

''பரவாயில்லே! ஓரளவு பொருத்தமாவே பேரு இருக்கு'' என்றாள் சுமதி.

"நான் செவப்பா இருக்கேன் அதைத்தானே சொல்றே?" –பெருமையோடு கேட்டான், செங்கோடன்.

"முதல் சொல்லின் பொருத்தத்தைச் சொல்லலே! ரெண்டாவது சொல் பொருந்தியிருக்குன்னு சொல்றேன்."

"ரெண்டாவது சொல்லா?"

செங்கோடன் புரியாமல் கேட்டான். சுமதி, "ஆமாம், கோடுன்னு மரம்னு அர்த்தம்!" என்று கூறினாள்.

"என்னது? நான் மரமாட்டமா இருக்கேன்?"

செங்கோடன் சீறுவதற்குள் சுமதி சிட்டாய்ப் பறந்தாள்.

சுமதிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக விஜய மங்கலம் பழக்கமானது. பள்ளிக்கூடம் பழகிவிட்டது. செங்கோடன் நட்பு, சிரிப்பும் சண்டையுமாக வளர்ந்தது.


செங்கோடன், பள்ளிக்கூடத்து மாணவர் தலைவன். அவனிடம் மாணவர்களுக்கு மிகுந்த மரியாதை. அவர்கள் அவனை "அண்ணே" என்றுதான் அழைத்தார்கள். ஆசிரியர்களும் அவனிடம் அன்பு கொண்டிருந்தனர். ஊருக்கு வெளியே வெகு தூரத்தில் ஒரு பாழடைந்த பெருமாள் கோயில் உண்டு. அதற்கு அரைகிலோ மீட்டர் தூரத்தில் இருந்த கல் வீட்டில் செங்கோடனின் தாத்தா சோமசுந்தரம் அவர் மகன் மருதப்பன், மருதப்பனின் மனைவி சண்பகம், செங்கோடன் ஆகிய நால்வரும் வசித்தனர். சோமுத் தாத்தாவின் குடும்பந்தான் ஊரின் மிகப் பழைமையான குடும்பமாம்; அதனால் அக்குடும்பத்தாருக்கு ஊராரிடம் மிகுந்த மதிப்பு.

சுமதி இத்தனை செய்திகளையும் பள்ளியில் சேர்ந்த ஒரே வாரத்தில் தெரிந்து கொண்டாள். அதனால் அவளுக்கும்செங்கோடன்மீதுமதிப்பு ஏற்பட்டது.

ஒருநாள் மாலை.

பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்த சுமதி சிற்றுண்டி சாப்பிட்டுத் தேநீர் குடித்தாள். பிறகு இரண்டு சிறுவர் பத்திரிகைகளுடன் வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்தாள். அவளுக்குப் பத்திரிகை படிப்பதுதான் சிறந்த

படிப்பது எங்கே?



"புள்ளேங்களா, நீங்கள்ளாம் எந்த இஸ்கூல்லே படிக்கறீங்க?"

"நேஷனல் நர்சரி ஸ்கூல்லே படிக்கிறோம் தாத்தா!"

"ஓ, நர்சம்மா வேலைக்கு படிக்கிறீங்களா? சரிசரி."

பொழுதுபோக்கு. அதை அறிந்த முத்துசாமி எல்லாச் சிறுவர் பத்திரிகைகளையும் வாங்கிக் கொடுத்திருந்தார். அவற்றை மாலையில் கொஞ்ச நேரம் படிப்பாள். பிறகுதான் பள்ளிப் பாடங்களைத் தொடுவாள். சுமதி படிப்பில் கெட்டிக்காரி.

முத்துசாமியின் வீடு பேருந்து செல்லும் பெரிய தெருவில் இருந்தது. நெடுஞ்சாலையிலிருந்து விலகி சமணக் கோயிலுக்குச் செல்லும் பாதை அது. அந்தத் தெருவில் முத்துசாமியின் வீட்டில்தான் இருபுறமும் மிகப் பெரிய இரண்டு திண்ணைகள் உண்டு. சுமதி அந்தத் திண்ணையில் ஏறினாள். திண்ணையிலிருந்ததூணில்சாய்ந்தபடி திண்ணையின் ஓரத்தில் உட்கார்ந்து பத்திரிகையைப் படிக்கத் தொடங்கினாள். சிறிது நேரத்தில் திடீரென்று இருள் கவிழ்ந்தது.

மணி இன்னும் ஐந்தாகியிருக்காது. வானத்தில் மேகம் திரண்டதால் இருண்டுவிட்டது. இதை உணர்ந்த சுமதி எழுந்துவிளக்கைப்போட்டாள். மறுநிமிடம்மின்விளக்குஒளிதிண்ணையில் பரவியது. சுமதி படிக்கலாம் என்று பத்திரிகையை எடுத்தபோது சடசடவென்று மழை கொட்டத் தொடங்கியது. அந்த மழையில் வீதி வழியே செங்கோடன் ஓடுவதைக் கண்ட சுமதி, "செங்கோடா" என்று

அழைத்தாள்.

செங்கோடன் நின்று திரும்பி, சுமதியைப் பார்த்தான்.

"ஐயையோ! மழையிலே நிக்கறையே. வீட்டுக்குள்ளே வா!"

செங்கோடன் மறுநொடி சுமதி வீட்டின் படியில் ஏறித் திண்ணையை அடைந்தான்.


மழையில் மொத்தம் ஒரு நிமிடம் தான் அவன் நின்றிருப்பான் என்றாலும் அதற்குள் நனைந்துவிட்டிருந்தான்.

"இரு வரேன்" என்றபடி சுமதி வீட்டுக்குள்ளே ஓடினாள். ஒரு டவலுடன் வந்தாள். "இந்தா முதலில் தலையைத் துடைச்சுக்கோ" என்று நீட்டினாள்.

"கொஞ்ச நேரம் மழையிலே நனைஞ்சா ஒன்றும் ஆகிவிடாது."

செங்கோடன் சொன்னாலும், தன் தோளில் தொங்கிய புத்தகப் பையைத் திண்ணையில் வைத்துவிட்டு, அவள் தந்த டவலை வாங்கித் தலையைத் துவட்டினான். முகத்தில் படர்ந்த ஈரத்தைப் போக்கினான்.

அதற்குள் சித்தி பத்மா ஒரு கையில் தட்டும் மறு கையில் தம்ளருமாக



அங்கே வந்தாள். "செங்கோடா, தாத்தா நல்லாயிருக்காரா?" என்று கேட்டபடி தட்டையும் தம்ளரையும் அவன்முன் வைத்தாள்.

"நல்லா இருக்கார். எனக்கெதுக்குங்க இந்தப் பலகாரமெல்லாம்" நாணத்தோடு சொன்னான் செங்கோடன்.

"விற்கிறதுக்கு இல்லே. சாப்பிடறதுக்கு. உட்கார்ந்து சாப்பிடு" உத்தரவிட்டாள் சுமதி.


செங்கோடன் தட்டில் இருந்த முறுக்கை நொறுக்கிச் சாப்பிடத் தொடங்கினான்.

திமீர் மழை வலுத்ததே தவிர குறையவில்லே.

செங்கோடன் முறுக்கைச் சாப்பிட்டுத் தண்ணீர் குடித்ததும், பத்மா ஆவி பறக்கும் சூடான தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். அதை அவன் மறுக்காமல் வாங்கிச் சுவைத்துக் குடித்தான்.

மழை கொட்டிக் கொண்டேயிருந்தது.

"பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்குப் போகாம எங்கே போனே?"



என்று கேட்டாள் சுமதி.

"தலைமை ஆசிரியரைப் பார்க்க ஒரு நண்பர் வந்திருந்தார். அவரை கோயமுத்தூர் பஸ்ஸில் ஏற்றிவிட்டு வரச் சொன்னார். அதான் நேரமாயிடுத்து. இந்த மழை திடீர்னு வந்துட்டது. ஆமா இன்னும் நிக்கலியே. மணி என்ன இருக்கும்?"

செங்கோடன் கேட்டதும் சுமதி திண்ணையிலிருந்து வீட்டுக்குள்ளே போய் ஒரு நொடியில் திரும்பி வந்தாள். "மணி ஏழு" என்றாள்.

"ஐயையோ! மணி ஏழாயிடுச்சா?" அவன் பதறினான்.

"ஆமா என்ன? எங்க வீட்டிலே சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கோ. பொழுது விடிஞ்சதும் எழுந்து போயிடு" என்றாள் சுமதி.

அவன், 'சுமதி சொன்னபடி செய்யலாமா?' என்றுயோசித்துக்கொண்டே இருக்கும்போது 'செங்கோடண்ணா!' என்ற குரல் கேட்டது.

சுமதியும் செங்கோடனும் தெருவைப் பார்த்தனர். ஒரு கையில் தாழம் குடையைப் பிடித்துக் கொண்டு மறு கையில் ஒரு துணிப் பையைப் பிடித்துக் கொண்டு ஒருவன் நின்றான். அவன் யார் என்று சுமதிக்குத் தெரியவில்லை. ஆனால் பள்ளிக்கூடத்தில் படிப்பவனாக இருக்கும் என்று நினைத்தாள்.

செங்கோடன் திண்ணையின் விளிம்புக்கு வந்து நின்றான். "என்ன ராமு!" என்று கேட்டான்.

"அண்ணா! பள்ளிக்கூடம் விடறதுக்குக் கொஞ்சம் முன்னாடி சோமுத்தாத்தா உங்களைப் பாக்கவந்திருந்தார். நீங்க ஹெட்மாஸ்டர் அறையிலே இருப்பதா சொன்னேன். கூப்பிடட்டுமான்னு கேட்டேன். அவர் 'வேண்டாம் ராமு. செங்கோடனிடம் நான் ஈரோட்டுக்குப் போறதா சொல்லு. திரும்பி வர நேரமாகும். ஒருவேளை நாளைக் காலையிலே வந்தாலும் வருவேன்னு சொல்லு'ன்னு சொன்னார். சரின்னேன். அப்புறம் மறந்துட்டேன். உங்க வீட்டுக்கு வந்து சொல்லலாம்னா அதுக்குள்ளே மழை பிடிச்சுட்டுது. நல்லவேளையா இங்கே உங்களைப் பார்த்தேன். சொல்லிட்டேன்."

ராமு சொல்லி முடித்தான்.

உடனே செங்கோடன் திண்ணையிலிருந்து இறங்கினான். "சுமதி, தாத்தா வீட்டிலே இருக்காருன்னு நினைச்சேன். அவர் வெளியூர் போயிருக்கார். அப்போ நான் கண்டிப்பா வீட்டிலே இருக்கணும். நான் புறப்படறேன்" என்றான்.

"இந்தக் கொட்டற மழையிலே வெளியே போறதா? வேண்டாம். மழை நின்ன பிறகு போகலாம்."

சுமதி சொன்னாள்.

"இல்லே சுமதி. நான் எங்க தாத்தா ரெண்டு பேருலே ஒருத்தர் வீட்டிலே இருப்போம். அதுவும் இரவு நேரத்திலே தவறாம இருப்போம். உன் சிற்றுண்டிக்கும் தேநீருக்கும் நன்றி" என்று கூறியபடி செங்கோடன் வீட்டுப் படியில் இறங்கத் தொடங்கினான்.

"செங்கோடா, இரு. நான் குடை கொடுக்கறேன். எடுத்துட்டுப் போ."

சுமதி சொல்வதைக் கேட்காமல் செங்கோடன் வீதியில் இறங்கினான். குற்றாலமாகக் கொட்டும் மழையில் அவன் வீட்டை நோக்கி ஓடுவதை வியப்போடு பார்த்தாள் சுமதி

"தாத்தாவும் பேரனும் மாறி மாறி காவல் காக்கறபடி அந்த வீட்டிலே என்னதான் இருக்கோ?" என்று சுமதி சலிப்போடு கூறிக் கொண்டாள்.

இன்னமும் தாழம் குடையோடு அங்கேயே நின்று கொண்டிருந்த ராமு. "உனக்கு அந்த ரகசியம் தெரியாதா?" என்று கேட்டான்.

"எந்த ரகசியம்?"

சுமதி கேட்டதும், ராமு அவள் வீட்டுப் படியில் ஏறினான். சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான். பிறகு சுமதியின் காதில் மெதுவாக எதையோ சொன்னான்.

அதைக் கேட்ட சுமதி ஆச்சர்யத்தால் சிலையானாள்.

(தொடரும்)

உருவகக் கதைகள்

—மலையமான்



படகுப் பயணம்

ஓர் ஆறு, மலை போல் தோன்றிச் சிறிது தூரம் ஓடி வந்து நீர் வீழ்ச்சியாக மாறிச் சமநிலத்தை அடைகிறது. மலையின் மேல் பலவித பிராணிகள் வாழ்ந்து வந்தன. அவற்றிற்கு ஆற்றின் போக்கு சரிவரத் தெரியாது. அதைப் பற்றி அவற்றிற்கு அக்கறையும் இல்லை.

ஒருநாள், அம்மிருகங்களில் சில அந்த ஆற்றில் கொஞ்ச தூரம் படகில் செல்லத் தீர்மானித்தன. முதல் படகில் ஒரு முயலும், மானும் ஏறிக் கொண்டன. அதற்குப் பின்னால் இருந்த படகில் ஒரு கரடிக் குட்டியும், குரங்கும் உட்கார்ந்து கொண்டன. ஆற்று வெள்ளம் அவைகளை இழுத்துச் சென்றது. இரு பக்கத்திலும் இருந்த காட்சிகளை அவை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டும், பாடிக் கொண்டும், பயணம் செய்தன. நேரம் செல்லச் செல்ல அவற்றின் மகிழ்ச்சி எல்லை கடந்துவிட்டது.

திடீரென்று ஆற்றின் வேகம் அதிகமாயிற்று. முதல் படகு விரைந்தது. அருவி இறக்கத்தை அடையத் தொடங்கியது. வேகத்தாலும், இறக்கத்தில் படகு அடைந்த தடுமாற்றத்தாலும், மானும் முயலும் தவித்தன; கூச்சலிட்டன. அந்தப் படகு கவிழ்வதையும், அதிலிருந்த மானும், முயலும் தவிப்பதையும் கண்ட குரங்கு இடி இடி எனச் சிரித்தது. 'மிகவும் அழகான காட்சி! காணக் கிடைக்காத காட்சி! அவர்களைப் பார்! அவர்கள் திணறுவதைப் பார்'' என்று துள்ளிக் குதித்தது. கரடிக் குட்டியை இழுத்து அந்தக் காட்சியைக் காட்டியது குரங்கு. ''ஐயோ! நமக்கும் இந்நிலை வருமே!'' என்று கரடிக் குட்டி சொன்ன சொற்கள் அதன் காதில் ஏறவில்லை. சிரிப்பதால் வலிக்கும் விலாவைப் பிடித்துக் கொண்டு மேலும் சிரித்தது.

அதனுடைய சிரிப்பு முடிவதற்குள் அதன் படகும் தலைகீழாக அருவியில் கவிழ்ந்தது!



யார் பெரியவர்?

சிறிய வீட்டின் மூலையில் இருந்த ஒரு பெரிய பானை தன்னை மறுமுறையும் பார்த்துக் கொண்டது. 'நாம் எவ்வளவு பெரியவராக இருக்கிறோம்.

நம் அளவு பெரியவர் யார் இருக்க முடியும்?' என்று தனக்குள் எண்ணி மகிழ்ந்தது. தன் அருகில் இருந்த சிறு சட்டிகளிடம், ''உலகத்தில் மிகவும் பெரியவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டது.

பெரும் பானையின் உட்கருத்தைப் புரிந்து கொண்டு ஒன்றும் பேசாமல் இருந்தன சட்டிகள். 'இந்தச் சட்டிகளுக்கு நிறையப் பொறாமை ஏற்பட்டிருக்கிறது' என்று அந்தப் பானை நினைத்துக் கொண்டது. தன் அருகே வந்த ஒரு பூனையிடம் தன் கேள்வியைக் கேட்டது. அதற்கு அந்தப் பூனை 'இதில் ஐயம் என்ன? உன்னை விடப் பெரியவர் யார் இந்த உலகில் இருக்க முடியும்?' என்று சொல்லிவிட்டுப் பால் பாத்திரத்தை நோக்கி ஓடியது.

அற்ப அறிவுள்ள சட்டிகளுக்கு மேலும் பாடம் கற்பிக்க வேண்டும் என்று எண்ணிய பெரும் பானை தன் மேல். ஏறிய சுண்டெலியிடம் அதே கேள்வியைக் கேட்டது. 'உலகில் பெரிய பொருள் — பெருமைக்குரிய பொருள் — நீயேதான். உனக்குள் பூனையும் அடங்கும்; யானையும் அடங்கும்' என்று சொல்லிவிட்டு, பானைக்குள் இருந்த உணவுப் பொருளைத் தின்னத் தொடங்கியது.

இதைக் கேட்ட பிறகாவது, அருகே இருக்கும் சட்டிகள் உண்மை உணர்ந்து தன்னைப் பாராட்டும் என்று பெரும் பானை எதிர்பார்த்தது. ஆனால் சட்டிகள் அமைதியாகவே இருந்தன. அவைகளுக்கு எப்படி அறிவு புகட்டுவது என்று சிந்தித்தது பானை. அப்போது அங்கு சிற்றெறும்புகள் சாரை சாரையாக வந்தன.

அவற்றை நோக்கி, பெரும் பானை அதே கேள்வியைக் கேட்டது. அதற்கு எறும்புகள், ''எங்கள் உலகமே நீதான். உன்னைவிடப் பெரிய பொருளை நாங்கள் கண்டதே இல்லை!'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தன.

'இனிமேலாவது இந்தச் சட்டிகளுக்கு உண்மை விளங்கும்!' என்று நினைத்தது பானை. அப்போது எதையோ நோக்கி அந்த வீட்டுப் பையன் வேகமாய் எறிந்த கல், அந்தப் பானையின் மேல் 'பட்'டென்று மோதியது. அடுத்த விநாடி அந்தப் பெரும் பானை நொறுங்கி விழுந்தது. அப்போதும் சட்டிகள் ஒன்றும் பேசவில்லை!



ஏன் படைத்தாய்?

பசியால் வாடிக் கொண்டிருந்த எறும்பு எங்கிருந்தோ ஒரு நெல்லைக் கௌவி இழுத்துக்கொண்டுசென்றது. அதைஒருகுருவிபிடுங்கிக்கொண்டது! 'என் வாழ்வில் குறுக்கிடும் இந்தக் குருவியை ஏன் படைத்தாய், ஆண்டவனே!' என்று கூறி அந்த எறும்பு மனம் நொந்து வருந்தியது.


ஒருநாள் அந்தக் குருவிக்கு ஒரு முறுக்கு கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு பறப்பதற்கு முன் ஒரு காகம் அதைப் பிடுங்கிச் சென்றது. அந்தக் குருவியின் வாய், 'என்னையும் படைத்து, இந்த காகத்தையும் ஏன் படைத்தாய், ஆண்டவனே?' என்று முணுமுணுத்தது!

அந்தக் காகத்திற்குக் கிடைத்த ஓர் இறைச்சித் துண்டை எடுத்துக் கொண்டு, அது ஒரு மரக்கிளையில் உட்கார்ந்தது. ஒரு பருந்து, அதை ஏமாற்றிவிட்டு, அவ்வுணவைக் கவர்ந்து கொண்டது. காகம், 'இப் பருந்தை ஏன் படைத்தாய், ஆண்டவனே!' என்று முறையிட்டது.

ஒருநாள் அந்தப் பருந்து உணவுடன் தன் கூட்டிற்குத் திரும்பியது. அப்பொழுது கூட்டில் தான் இட்டு வைத்

திருந்த முட்டைகளில் ஒன்று காணாமல் மனம் கலங்கியது. சிறிது தூரத்தில் ஒரு மனிதன், தன் முட்டையுடன் செல்வதைக் கண்டு, 'ஆண்டவனே, இந்த மனிதனை நீ ஏன் படைத்தாய்?' என்று புலம்பியது.

அந்த மனிதன் தான் பயன்படுத்த சர்க்கரையை வாங்கிவைத்திருந்தான். சில நாட்கள் சென்றதும், அதிலிருந்த அவ்வளவு சர்க்கரையையும், எறும்புகள் எடுத்துச் சென்றுவிட்டதைக் கண்டான். 'ஆண்டவனே, இந்த எறும்புகளை ஏன் படைத்தாயோ?' என்று கூறி வருந்தினான்.



மரம் மாதிரி

ஒருவர்: என்னங்க! பையனை மரம் மாதிரி வளர்த்து வைத்திருக்கிறீர்களே...!

மற்றவர்: வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் என்றார்களே! அதனால் நான் இவனையே மரம் மாதிரி வளர்த்துவிட்டேன்.

— தேனி. எஸ். மாரியப்பன்

'கேலண்டர்'


நாட்காட்டியை நாம் 'காலண்டர்' என்று அழைக்கிறோம். இந்தப் பெயர் எப்படி வந்தது, தெரியுமா?

பண்டைக் காலத்தில் ரோம் நகரில், ஒவ்வொரு மாதமும் முதல் தேதியன்று, அரசாங்கப் பணியாளன் ஒருவன், ஒவ்வொரு தெருவாகச் சென்று, மாதப் பிறப்பையும், அம்மாதத்தில் வரும் விசேஷ நாட்களையும், உரக்கக் கூவி மக்களுக்கு அறிவித்து விட்டுச் செல்வான்! அவ்வாறு அறிவிப்பதை ரோம் மொழியில் 'கேலோ' (Calo) என்பார்கள்!



'கேலோ' என்பது 'கேலண்ட்ஸ்' (Calends) என்ற சொல்லின் சுருக்கமாகும். காலத்தை மணிகள், நாட்கள், வாரங்கள், மாதங்கள் என்ற பிரிவுகளாகப் பிரிக்கும் முறைக்கு 'கேலண்ட்ஸ்' என்று பெயர்! இந்த 'கேலண்ட்ஸ்' என்ற சொல்லிலிருந்தே 'கேலண்டர்' என்ற சொல் வந்தது!

—ஜெ. மன்சூராபேகம் (11,531),
மானாமதுரை.



தனிமரம் தோப்பு ஆகுமா?

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

ஆசிரியர்: பத்மா, தனி மனிதனின் கட்மைகள் சிலவற்றைக் கூறு.

பத்மா: காலை எழுந்தது முதல் இரவு படுக்கப் போகும்வரை நாம் செய்யும் அன்றாடச் செயல்கள் எல்லாம் தனி மனிதனின் கடமைகள்தானே?

ஆசிரியர்: விளக்கமாகத்தான் சொல்லேன். பார்க்கலாம்.

பத்மா: அதிகாலையில் எழுவது, பல் துலக்குவது, படிப்பது, முறையாக அளவாக உண்பது, தூய உடை அணிவது, பள்ளி செல்வது, நன்கு பயிலுவது, விளையாடுவது, தமது உடைமைகளைச் சுத்தமாகவும், கருத்துடனும் பாதுகாப்பது, பணிவுடனும் ஒழுக்கமாகவும் பெரியவர்கள், ஆசிரியர்களுடன் பழகுவது....

ஆசிரியர்: அருமை. மிக நன்றாகச் சொல்கிறாயே! இன்னும் பாக்கி இருக்கிறதா? சற்று மூச்சு வாங்கிக் கொள்.

(அனைவரும் சிரிப்பு)

பத்மா: சார், நீங்கள் சென்ற வகுப்புகளில் விளக்கமாகக் கூறியதைக் கேட்டுத்தான் சொல்கிறேன்.

ஆசிரியர்: மிகவும் நல்லது. மீதமுள்ளதை ஸ்ரீராம் சொல்லுவான். எங்கே சொல் ஸ்ரீராம், பாரதி எப்படிக் கூறியிருக்கிறார்?

ஸ்ரீராம்: 'ஓடி விளையாடு பாப்பா' என்று கூறுகிறார் சார். காலை முழுவதும் படிக்க வேண்டும், மாலையில் விளையாட வேண்டும் என்று கூறியுள்ளார். சார்.

ஆசிரியர்: சரி, சமூகக் கடமைகளைப் பார்ப்போம். நமது தேவைகளை நாமே பூர்த்தி செய்து கொள்ள முடியாது. பலதரப்பட்ட மக்களுடைய ஒத்துழைப்பால்தான் நாம் வாழமுடிகிறது. இது எப்படி என்று கூறுங்கள் பார்க்கலாம்.

கண்ணன்: புரியவில்லையே! எப்படி சார்!

முருகன்: எனக்குப் புரிகிறது சார். நான் போட்டிருக்கும் சட்டையை எடுத்துக் கொள்வோம். எங்கோ விளைந்த பருத்தி ஏதோ ஓர் ஆலையில் யாராலோ நெய்யப்பட்டு, இங்கு கடைக்கு வந்தது. என் தந்தையார் உழைத்துச் சம்பாதித்து அதை வாங்கினார். பிறகு தைக்கப்பட்டது. தைத்தவர், தையல் நூல் தயாரித்தவர், பட்டன் தயாரித்தவர் உழைப்புக்கும் இதில் பங்கு உண்டு. நான் போட்டிருக்கும் சட்டைக்கு இப்படிப் பலர் பாடுபட்டிருக்கிறார்கள். இதுபோல் உதாரணங்கள் பல கூறலாம்.

ஆசிரியர்: கண்ணன் இப்பொழுது புரிந்து கொண்டு இருப்பான். அவன் ஒரு சான்று கூறட்டுமே.

கண்ணன்: ஆமாம் ஐயா, எனக்கு இப்பொழுது விளங்குகிறது. தனி மரம் தோப்பாகாது என்று கூறுவீர்கள். அது இப்பொழுது விளங்குகிறது. அது போன்று தனி மனிதன் சமூகமாக

முடியாது. பலருடைய ஒத்துழைப்பால் தான், கூட்டு முயற்சியால்தான் தனி மனிதன் வாழ்கிறான். வளர்கிறான். ஆக்கம் பெறுகிறான். நாம் சாப்பிடும் உணவை எடுத்துக் கொள்வோம். கறி, குழம்பு, இப்படி எத்தனையோ! புளி விளைவது ஓரிடத்தில். அதில் பலர் உழைப்பு. வத்தல் விளைவிப்பது வேறு இடத்தில். உப்பு விளைவிப்பது தனி யிடத்தில். தாளிப்பதற்கு வேண்டிய எண்ணெய், பெருங்காயம், கடுகு, வெந்தயம்....

ஆசிரியர்: போதும், போதும்! இங் கேயே மணக்க ஆரம்பித்துவிட்டது, கண்ணன் சமைத்தசாம்பார். இப்படிச் சமுதாயமாக வாழும் நமக்குச் சில கடமைகள் உண்டல்லவா? வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது போல் பொது இடங்களையும் சுத்தமாக வைத் திருக்க வேண்டும். பள்ளி, இரயில் நிலையம். பஸ் ஸ்டாண்ட், தபால் நிலை யம் இவற்றையும் ஆறு, குளம், குழாய் அடி போன்ற பொது இடங்களையும் துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.

ஸ்ரீராம்: ஆமாம் சார். என் தந்தை யார் அன்று ஒரு நாள் சொன்னார். 'கண்ட இடங்களில் துப்பக் கூடாது. குப்பை கூளங்களைப் போடக்கூடாது. அதற்கான தொட்டியில்தான் போட வேண்டும். இங்கிலாந்து நாட்டில் ரோடுகளிலும் பாதைகளிலும் சிறு தாள்களைக் கூடப் பார்க்க முடியாது' என்று கூறினார் நாமும் இம்மாதிரி நடந்தால்.....

ஆசிரியர்: அருமை! அருமை! நன் றாகச் சொன்னாய். இப்பழக்கம் நம் மிடமிருந்தே தொடங்க வேண்டும். முதலில் நாம் சுத்தமாக இருப்பதோடு வீடு, சுற்றுப்புறம், நாம் பயிலும் பள்ளி, தெரு, ஊர், பின் நாடு என்ற வரிசை யில் தொடங்க வேண்டும். உங்கள் வகுப்பறையில் சிறு கூடை வைக்கப் பட்டுள்ளது. அதில்தான் சிறு தாள் களையும் போட்டுப் பழக வேண்டும். வகுப்பில் வெளியே வராண்டா, மைதானம் இங்கு எங்காவது சிறு குப்பை கூளம் கண்டால், உடனே அதை உரிய இடத்தில் சேர்த்துவிட வேண்டும்.

முருகன்: ஆமாம் சார். நான் சில நாட்களுக்கு முன் செய்தித் தாளில் படித்த நினைவு வருகிறது. முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள் சென்னை பெங்களூர் போன்ற நகரங்களைத் துப் பரவாக வைத்துக் கொள்ளும் செய்தி.

ஆசிரியர்: மிகவும் சரியான செய்தி. நாம் ஒவ்வொருவரும் முனைந்தால் தான் நமது நாட்டைத் தூய்மையான தாக வைத்திருக்க முடியும். அரசோ, சட்டமோ இதைச் சாதிக்க முடியாது. நீங்கள் முதலில் நமது பள்ளியையும், சுற்றுப்புறங்களையும் தூயதாக வைத் திருக்கப் பழகுங்கள். சுத்தம் சுகம் தரும்.

ஸ்ரீராம்: சார், நமது தலைமையாசிரி யர் இதில் மிகவும் கவனம் செலுத்துவ தாகத் தெரிகிறது. வகுப்பில் நுழைந்த வுடன் மேசை, நாற்காலி, பெஞ்சுகள் உரிய இடத்தில் ஒழுங்காக உள்ளனவா என்றுதான் அவர் பார்க்கிறார். கண் ணில் பட்ட சிறு தாளையும் தம் கையால் எடுத்துத் தொட்டியில் போடுவதைப் பலமுறையும் கவனித்து இருக்கிறேன்.

ஆசிரியர்: உண்மையான சார ணன்! அதனால்தான் நீ இவ்வளவு உன்னிப்பாக உன் சுற்றுப்புறங்களில் நடப்பதைக் கவனித்து இருக்கிறாய். சரி பத்மா, இப்பொழுது நீ புகை வண்டி நிலையத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று கூறு; பார்க்கலாம்.

உறுப்பினர் வரைந்த ஓவியம்!



எஸ். கனகராஜ் (1174)


பத்மா: சார், ரயில் நிலையத்தில் தண்ணீர் குடிக்கும் இடத்தில், தண்ணீர் குடிக்கும் டம்ளரை நாயைச் சங்கிலியால் கட்டிப் போடுவது போல் கட்டியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது எனக்குத் துன்பமாக இருக்கும். நம்மிலே யாரோ சிலர் சரியாக நடந்து கொள்ளாததால்தானே இப்படி டம்ளரைக் கட்டி வைத்திருக்கிறார்கள்? இதைக் காணும்போது வெளி நாட்டினர் நம்மைப் பற்றி எவ்வளவு குறைவாக எண்ணுவார்கள்? நாம் பண்புடன் நடந்து கொண்டால்தான் இந்த நிலை நீங்கும். ஸ்டேஷனில் கண்ட இடங்களில் துப்பக் கூடாது. வண்டியிலிருந்து இறங்கும்போதும் சரி; பயணம் செய்யும்போதும் சரி. மிகவும் ஒழுக்கத்துடன் நடக்க வேண்டும். தேவையில்லாத பொழுது மின் விசிறியையோ விளக்கையோ உபயோகிக்க வேண்டாம். வண்டியில் உள்ள பொருள்கள் நாட்டின் பொதுச் சொத்து. அவற்றை ஒரு போதும் நம் சொத்தாக்கத் துணியக் கூடாது. வண்டியில் ஏறியவர்கள் தனக்கே இரயில் சொந்தம் என எண்ணக் கூடாது. இது போன்று.....

ஆசிரியர்: அருமை, நன்றாக விளக்கி விட்டாய். நாம் இதைப் புரிந்த அளவில் நின்றுவிடாது செயல்படுத்தவும் வேண்டும். சொல்வது எளிது. நீங்கள் நடைமுறையில் இந்த நற்பழக்கங்களைக் கடைப்பிடித்து, நாட்டிற்கு ஏற்ற நல்ல குடிமக்களாக விளங்க வேண்டும். இம்முயற்சியில் இறைவன் அருள் பாலிக்கட்டும். நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் அவன் கண்காணித்தே வருகிறான். இந்த எண்ணம் இருந்தால் நாம் நலமடையலாம்.

திருக்குறள்:

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

இவர்களுக்குப் பிடித்த விளையாட்டு!



பூக்கடைக்காரருக்கு	—	பூப்பந்து
ஜவுளிக்கடைக்காரருக்கு	—	மல்யுத்தம்
ஹோட்டல்காரருக்கு	—	மேசைப்பந்து
காய்கறி விற்பவர்களுக்கு	—	கூடைப்பந்து
ராணுவ வீரர்களுக்கு	—	குண்டு எறிதல்
மளிகைக் கடைக்காரருக்கு	—	எடை தூக்குதல்
நகைக் கடைக்காரருக்கு	—	ரிங்பால்
தொடர்கதை எழுத்தாளருக்கு	—	தொடர் ஓட்டம்
கைரேகை பார்ப்பவருக்கு	—	கைப்பந்தாட்டம்
அரசியல்வாதிக்கு	—	இசை நாற்காலி

— எடையூர் சிவமதி.

பிருந்தாவனம்

குரங்குப் பள்ளிக்கூடம்



குரங்குகள் படிப்பதற்கு ஒரு பள்ளிக் கூடம் இருக்கிறது. ஆம், தாய்லாந்தில் உள்ள இந்தப் பள்ளியில் நடைபெறும் முக்கியமான பாடம் என்ன தெரியுமா? தேங்காய் பறிப்பதுதான்! இங்கு கற்றுத் தேர்ந்த ஒரு குரங்கு நிமிடத்திற்கு 18 தேங்காய்கள் பறிக்குமாம்!

— சி. மாயா (12095),
கும்பகோணம்.


வயது என்ன?

அன்று குமரனின் பிறந்த நாள். மலேசியாவிலிருந்து வந்திருந்த மாமா, "குமார் இப்போது உன் வயதென்ன?" என்று கேட்டார். "என் அப்பாவின் வயதில் ஏழில் ஒரு பங்கு" என்றான். குமாரின் மாமா மலேசியா சென்று 20 ஆண்டுகள் கழித்து வந்தார். அப்போது குமாரிடம், "உன் வயது என்ன?" என்று கேட்டார். "என் அப்பாவின் வயதில் பாதி" என்றான் குமார். அப்படியானால், அவர்களின் தற்போதைய வயது என்ன? முன்பிருந்த வயது என்ன?


விடை: தற்போதைய வயது குமாருக்கு 24; அப்பாவுக்கு 48.

முன்பிருந்த வயது — குமாருக்கு 4 அப்பாவுக்கு 28.

— எஸ்., பாலாஜி (5838),
சென்னை — 4.



சில மாவட்டங்கள்



1. வீடு கட்ட உதவும் மாவட்டம்
2. பெண்ணின் சிறப்பைக் குறிக்கும் மாவட்டம்
3. முக்கிய உணவைக் குறிக்கும் மாவட்டம்.
4. போதை தரும் மாவட்டம்.

விடை: 1. செங்கல்பட்டு; 2. கன்னியாகுமரி; 3. திருநெல்வேலி; 4. மதுரை.

— பு. அருள் செல்வன் (9821),
புதுக்கோட்டை.

தானம்

தானத்தில் சிறந்தது அன்னதானம்;
போரை நிறுத்துவது சமாதானம்.
தருமம் செய்வதில் ஒன்று கோதானம்



பெரியோரிடம் பேசும்போது நிதானம்
நிலங்களைக் கொடுப்பதற்கு பூமி தானம்
உயிரைக் காப்பாற்ற இரத்ததானம்
மருத்துவமனைக்கு அளிப்பது கண் தானம்
திருமணத்தில் கொடுப்பது கன்னிகா தானம்
கடவுள் இருக்கும் இடம் சன்னிதானம்

— ஜி. உமா (13197),
திருவண்ணாமலை

குழந்தைகளால் உருவான ஸ்டெதஸ்கோப்!

ரெனே லேனக் என்ற பிரெஞ்சு டாக்டர் தெரு வழியாகச் சென்று கொண்டிருந்தார். மரத் துண்டு ஒன்றின் மேல் இரண்டு குழந்தைகள் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருந்தனர். ஒருபுறம் இருந்த குழந்தை மரத்திலே தட்டியது. அந்த சப்தத்தை மறுபுறம் இருந்த குழந்தை காதை வைத்துக் கேட்டுக் கொண்டிருந்தது. இதைக் கண்ட டாக்டர், மரத்துண்டு வழியாக



சப்தம் கேட்க முடியுமானால், காகிதம் அல்லது ரப்பரால் செய்த குழாயால் இதயத் துடிப்பைக் கேட்கலாமே என்று நினைத்தார். அப்படி அவர் நினைத்ததன் பலன்தான் இன்று டாக்டர்கள் இதயத் துடிப்பைக் கண்டறியப் பயன்படும் ஸ்டெஸ்தஸ் கோப்! 1814ல் இதைக் கண்டுபிடித்தார் அந்த டாக்டர்.

— என். செந்தில்குமார் (131),
கோவை—10.


பாப்



பாப் மியூசிக் என்கிறோம். பாப் என்ற பெயர் எப்படி வந்தது? பாபுலர் (Popular) என்ற வார்த்தையிலிருந்து தான் வந்தது.

— எஸ். ஜெயஸ்ரீ (1254),
திருச்சி—14.

முதல் எழுத்துள்ள ஊர்கள்



நம் பெயருக்கு முன்னால் உள்ள எழுத்து அல்லது எழுத்துக்களைப்

(Initial) போலச் சில ஊர்களுக்கும் உள்ளன.

R.S. மங்கலம் — ராஜசிங்கமங்கலம்
S.V. நகரம் — சத்ய விஜயநகரம்
C.K. மங்கலம் — சின்ன கீரமங்கலம்
K.G. கண்டிகை — காஞ்சி குருவராஜ் கண்டிகை
B.N. கண்டிகை — புச்சி நாயுடு கண்டிகை
K.V. குப்பம் — கீழ்வழித்துணையான் குப்பம்
M.V. குப்பம் — மேல்வழித்துணையான் குப்பம்
R.K. பேட்டை — ராமகிருஷ்ண ராஜு பேட்டை

— பா. கதிர்வேலன் (9154), வேலூர் — 6.

ஒளிந்திருக்கும் ஊர்கள்



1. டிரைவர் வேலு காரைக்குடிசைக்கு முன் நிறுத்தினார்.
2. இராமசுவாமி மலைப்பாம்பைக் கண்டார்.
3. சுந்தர்லால் குடித்துவிட்டுக் குதித்து ஆடினார்.
4. அண்ணாமலை நகர்ந்து நகர்ந்து சென்றான்.

விடை: 1. காரைக்குடி; 2. சுவாமிமலை; 3. லால்குடி; 4. அண்ணாமலை நகர்.

— ஜி. ஸ்வாமிநாதன் (7335), சென்னை — 28.

சொல் விளையாட்டு

1. மரங்களில் ஒருவகை
2. தெருவின் கோடிக்குப் பெயர்




3. வீட்டின் மறு பெயர்
4. மலையிலே நீர் தரும்
5. செயலுக்கு வேறு பெயர்

விடை: 1. பனை; 2. முனை; 3. மனை; 4. சுனை; 5. வினை.

— இரா. மனோகரன் (13145), சென்னை — 4.

திருவையாறு



திருவையாறு என்றாலே ஐந்து ஆறுகள் (திரு + ஐ + ஆறு) கூடுமிடம் என்று பொருள். அந்த ஐந்தாறுகள்: 1.காவிரி; 2.வடவாறு; 3.வெண்ணாறு; 4. வெட்டாறு; 5. குடமுருட்டி

— சே. கணபதி சுப்பு (8542), சோழவந்தான்.

பொன்மொழிகள்

* இன்பங்கள் சேர்ந்து வருவதில்லை. துன்பங்கள் தனித்து வருவதில்லை. நாம் வீணாகக் கழிக்கும் ஒவ்வொரு விநாடியும் நம் வாழ்வில் மீண்டும் பெற முடியாத பெரும் செல்வமாகும்.

— காரல் மார்க்ஸ்



* தாயின் சொல்லுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். ஏனெனில், தாயின் காலடியில்தான் சொர்க்கம் உள்ளது.

— நபிகள் நாயகம்

* நல்லதும் கெட்டதுமான நூல்களைக் கலந்து நெய்ததுதான் வாழ்க்கை.


— ஷேக்ஸ்பியர்

* கடுமையான உழைப்பைத் தவிர வெற்றிக்கு வேறு இரகசியம் எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

— டர்னர்

— சு. செங்குட்டுவன், (6734),
காளாப்பூர்.

ஏன்?



''என்னடா சுப்பு, நான் பேசும் போது 'ஆ'னு வாயைத் திறந்துக் கிட்டுக் கேட்கிறே?''

'''இ'னு வாயைத் திறக்க முடியாதே. அதனால்தான்.

— எஸ். மாதவன் (204),
திருச்சி–14.

'தமிழ்' இல்லை!

திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறளை நாம் தமிழ் மறையாகவும், தமிழ் உலகை ஆட்சி செய்யும் செங்



கோலாகவும் கருதுகின்றோம். அந்நூலில் 'தமிழ்' என்ற சொல் ஒரு குறளில்கூட இடம் பெறவில்லை என்பது வியப்புக்குரியது.

— சுப. சிவா (3450),
திருநெல்வேலி–7.

பம்பாயில் எலித் தொல்லை




பம்பாய் நகரில் எலிகளின் தொல்லை மிக மிக அதிகம். அந்த எலிகள் உணவுப் பொருட்களைத் தின்றும் நாசமாக்கியும் வருகின்றன. அங்குள்ள எல்லா எலிகளையும் ஒழித்து விட்டால் ஒன்பது லட்சம் மக்களுக்கு ஆண்டு முழுவதும் உணவளிக்கலாமாம். இப்படி தூய்மைச் சுற்றுச் சூழல் சங்கத்தின் தலைவராகிய டாக்டர் பி.ஜே. தேவராஜ் ஒரு கருத்தரங்கில் தெரிவித்திருக்கிறார்.

— ஏ. பிரபு (641), பரோடா.

கிரேக்க நாட்டுக் கதை

கார்த்திகையும் விடிவெள்ளியும்



தமிழில்: எச். கிருஷ்ணமூர்த்தி

வெகு காலத்திற்கு முன்னால், கிரேக்கநாட்டில் ஒரு ராஜாவும், ராணியும் இருந்தனர். அவர்களுக்கு ஒரு பெண். பெயர் கார்த்திகை. அவள் ரொம்ப அழகு. அப்பாவுக்குச் செல்லக் குழந்தை. ஆனால், பாவம், அவளுடைய அம்மா இறந்து போய் விட்டாள். ராஜா இரண்டாவது மனைவியை மணந்தார். அவள் ஒரு சூனியக் காரி; மந்திரக் காரி. அந்த விஷயம் ராஜாவுக்குத் தெரியாது.

கார்த்திகையின் சித்தியான இரண்டாவது ராணிக்கு ஒரு பிள்ளை பிறந்தான். பெயர் விடிவெள்ளி. கார்த்திகையும், விடிவெள்ளியும் ஒன்றாக ஆடினர்; பாடினர்; ஓடி விளையாடினர். அவர்கள் ஒருவர் மீது ஒருவர் உயிரையே வைத்திருந்தனர்.

இரண்டாவது ராணி கார்த்திகையின் அழகைக் கண்டு பொறாமைப்பட்டாள். அவளைக் கண்டாலே பிடிக்கவில்லை. எப்படியாவது அவளை வீட்டிலிருந்து துரத்திவிடத் தீர்மானித்தாள். ஆகவே, அவளைப் பற்றி இல்லாததையும், பொல்லாததையும் ராஜாவிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தாள்.

''என் பிள்ளை விடிவெள்ளியைப் பாருங்கள். எவ்வளவு பலசாலி! எந்தக் காரியத்தையும் உடனே முடித்து விடுவான். ஆனால், இந்த அழகி கார்த்திகையும் இருக்கிறாளே! ஒல்லியான உடம்பு. ஒன்றுக்கும் உபயோகமில்லை. எல்லாவற்றிற்கும் என் பிராணனை வாங்குகிறாள். எங்கேயாவது கண் காணாமல் தொலைந்து போகிறது தானே? அடிமைகளை விற்கிறார்களே— அந்தச் சந்தைக்கு அனுப்பி அவளை விற்று விடுங்களேன்!'' என்று இளைய ராணி ராஜாவின் காதில் ஓயாமல் சொல்லிக் கொண்டே இருந்தாள்.

முதலில் ராஜா அவளுடைய பேச்சுக்களை லட்சியம் செய்யவில்லை. கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் அல்லவா? கடைசியில் ராணி ராஜாவினுடைய மனத்தை மாற்றினாள். தன் கண்ணின் மணியைப் போலப் போற்றிய கார்த்திகையைச் சந்தையில் விற்க ராஜா சம்மதித்தார்.

அதுவரையில் ராணி கார்த்திகைக்குச் சரியான ஆகாரம் கொடுக்காததால், அவள் இளைத்துக் கொண்டே போனாள். இளைத்த பெண்ணை விலை கொடுத்து யார் வாங்குவார்கள்? ஆகவே, கார்த்திகையிடம் அன்பாக இருப்பது போல ராணி நடித்தாள். அவளுக்குப் பாலும், பழமுமாக நல்ல ஆகாரங்களைச் சில நாட்களுக்குக் கொடுத்தாள்.

கார்த்திகை ஓர் அப்பாவி. சித்தியின் சூதும், வாதும் அவளுக்குத் தெரியவில்லை. உண்மையாகவே சித்தி

தன்னிடம் அன்பாக இருப்பதாக அவள் எண்ணினாள்.

"கார்த்திகையின் உடம்பு தேறி விட்டது. நாளைக்கே அவளைச் சந்தைக்கு அனுப்பி விற்று விடலாம்!" என்று ஒருநாள் ராணி ராஜாவிடம் சொன்னாள்.

விடிவெள்ளியின் காதுகளில் அந்தச் சொற்கள் விழுந்தன. தன் அன்பு அக்காவுக்கு நேர்ந்த கதியைக் கண்டு அவன் திடுக்கிட்டான்; மனம் வருந்தினான்; எப்படியாவது கார்த்திகையைக்காப்பாற்றத்தீர்மானித்தான்.

ஏற்கெனவே தான் சந்தித்திருந்த ஒரு மூதாட்டியின் நினைவு அவனுக்கு வந்தது. உடனே அரண்மனையை விட்டுப் புறப்பட்டான். காட்டில் ஒரு குகையில் வசித்த அந்த மூதாட்டியிடம் போனான். அவளுக்கு நெற்றியிலும், முகத்திலும் பல சுருக்கங்கள். அன்போடு அவள் விடிவெள்ளியை வரவேற்றாள். கார்த்திகைக்கு வரப் போகும் ஆபத்தை விளக்கி, அவளை எப்படிக் காப்பாற்ற வேண்டும் என்று மூதாட்டியிடம் ஆலோசனை கேட்டான்.

"தலை வாருகிறேன் வா என்று உன் அம்மா நாளைக் காலையில் கார்த்திகையைக் கூப்பிடுவாள். அப்போது நீ ஓடிச் சென்று, அவளுடைய கையில் இருக்கும் சீப்பையும், ரிப்பனையும் பிடுங்கு. கார்த்திகையையும் அழைத்துக் கொள். இருவரும் உன் அம்மாவிடமிருந்து சிட்டாய்ப் பறந்து விட வேண்டும். அவள் துரத்திக் கொண்டு வருவாள். உங்களை அவள் பிடிக்க வரும் சமயத்தில் அந்தச் சீப்பை உங்கள் பின்னால் எறி. இரண்டாம் முறை அவள் உங்களை நெருங்கினால், அந்த ரிப்பனையும் உங்கள் பின்னால் போடு. பிறகு மூன்றாம் முறையும் அவள் உங்களைப் பிடிக்க வந்தால், இந்தச் சிறிய பொட்டலத்தைப் பின் பக்கமாக எறிந்துவிடு." என்று சொல்லி அந்த மூதாட்டி ஒரு சிறிய உப்புப் பொட்டலத்தை விடிவெள்ளியின் கையில் கொடுத்தாள். வாழ்த்தினாள். அவன் நன்றியோடு விடைபெற்றான்.

விடிவெள்ளி அரண்மனைக்குத் திரும்பினான். கார்த்திகையிடம் நடந்த விஷயங்களைக் கூறினான். அவள் 'ஓ'வென்று அழுதாள். விடிவெள்ளி அவளைத் தேற்றித் தான் நிச்சயமாக அவளைக் காப்பாற்றுவதாகச் சொன்னான்.


மறுநாள் காலை. ராணி கார்த்திகையைக் கூப்பிட்டாள். அவளுக்குத் தலையை வாரி, ரிப்பனை வைத்துப் பின்னத் தொடங்கினாள். திடீரென விடிவெள்ளி அங்கே போனான். ராணியின் கையிலிருந்த சீப்பையும், ரிப்பனையும் பிடுங்கினான். கார்த்திகையையும் இறுகப் பற்றினான். இருவரும் அரண்மனையைக் கடந்து, தோட்டத்தைத் தாண்டிக் காட்டை நோக்கி ஓடினர்.

ஆனால், அந்தக் கொடிய ராணி காற்றாய்ப் பறந்து, அவர்களைத் துரத்தினாள். விடிவெள்ளி திரும்பிப் பார்த்தான். ராணியின் உருவம் முதலில் தொலைவில் தெரிந்தது. ஆனால், அடுத்த நிமிஷமே அவள் ஆகாயத்தில் பறந்து வந்து அவர்களைப் பிடிக்கும் அளவுக்கு நெருங்கினாள். மூதாட்டி சொன்னதைப் போலவே விடிவெள்ளி அந்தச் சீப்பை எடுத்துப் பின்புறம் எறிந்தான். சீப்பு தரையைத் தொட்டதுமே, அதில் இருந்த ஒவ்வொரு பல்லும் ஒரு முட்செடியாக மாறிப் பெரிதாக வளர்ந்தது. ராணி அந்த முட்புதர்களில் சிக்கித் தவித்தாள். கார்த்திகையும், விடிவெள்ளி

வெடிக்குப் பயம்!

வெடி வெடிக்கும் ஓசையைக் கேட்டால் துஷ்ட தேவதைகள் பயந்து ஓடி விடுகின்றன என்ற நம்பிக்கை சீன மக்களிடம் காணப்படுகிறது. முதன் முதலாக வெடிமருந்தைக் கண்டுபிடித்தவர்கள் சீனர்களே!

— ஜி. தாமோதரன் (224), கோவை — 2.





யும் தொடர்ந்து ஓடினர்.

அந்த முட்புதர்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட ராணி மீண்டும் அவர்களை நெருங்கினாள். விடிவெள்ளி அந்த ரிப்பனை வீசி எறிந்தான். அவர்களுக்கும் ராணிக்கும் இடையே இருந்த குறுகிய நிலம் வளர்ந்து, வளர்ந்து ஒரு பெரிய சமவெளியாக மாறியது! ஆனால், ராணி அந்தப் பரந்த சமவெளியையும் தன் மந்திர சக்தியினால் ஒரு நொடிப் பொழுதில் கடந்தாள். அவர்கள் இருவரையும் பிடிப்பதற்காகக் கையை நீட்டினாள்.

அப்போது விடிவெள்ளி மூதாட்டி அளித்த உப்புப் பொட்டலத்தை வீசி எறிந்தான். உடனே, அது ஒரு கடலாக மாறி, அந்தச் சமவெளியை வெள்ளத்தில் மூழ்கடித்தது.

ராணி அந்த வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டாள். அவளால் அவர்களைத் தொடர முடியவில்லை. கொஞ்சங் கொஞ்சமாக அவள் நீரில் மூழ்கிப் போனாள்.

கார்த்திகையும், விடிவெள்ளியும் ஒரு தோட்டத்தை அடைந்தனர். ஓடி ஓடிக் களைத்துப் போன அவர்கள் நன்கு இளைப்பாறினர். ராணியின் கொடிய பிடியிலிருந்து தன்னைக் காப்பாற்றியதற்காகக் கார்த்திகை தன் தம்பிக்கு மனமார நன்றி சொன்னாள்.

விடிவெள்ளிக்கு ஒரே தாகம். தண்ணீர் கிடைக்குமா என்று தேடிப் பார்த்தான். ஆறோ, ஓடையோ எதுவும் தென்படவில்லை. ஆனால், ஒரு கன்றுக் குட்டியின் கால் சுவடுகள் தெரிந்தன. அந்தச் சுவடுகளில் மழைநீர் தேங்கி நிற்பதை அவன் கண்டான். அந்த நீரை எடுத்துக் குடிப்பதற்காக அவன் கையை நீட்டினான்.

''தம்பி! தம்பி! அதைக் குடிக்காதே! குடித்தால் நீ ஒரு கன்றுக் குட்டியாக மாறி விடுவாய்!'' அப்படி நடந்த ஒரு கதையை ஏற்கெனவே ஆசிரியர் எனக்குச் சொல்லியிருக்கிறார்,'' என்று கார்த்திகை எச்சரித்தாள்.

விடிவெள்ளி உடனே ''சரி, நான் அதைக் குடிக்கவில்லை'' என்றான். ஆனால், அவனுக்குத் தாகம் அதிகரித்



தது. உயிரே போவது போல ஆகிவிட்டது. வேறு தண்ணீர் தேடினன். இன்னெரு இடத்தில் ஆட்டுக் குட்டியின் அடிச் சுவடுகளில் சிறிது நீர் தேங்கியிருக்கக் கண்டான். அதை எடுத்துக் குடிப்பதற்காக ஆவலோடு கீழே குனிந்தான்.

"அதைக் குடிக்காதே, தம்பி! அப்புறம் நீ ஓர் ஆட்டுக் குட்டியாக மாறி விடுவாய்!" என்று கார்த்திகை மீண்டும் எச்சரித்தாள். ஆனல், தாகம் வருத்தியதால், இந்த முறை அவன் அவளுடைய பேச்சைக் கேட்கவில்லை. அந்தத் தண்ணீரை எடுத்துப் பருகினன். உடனே, சிறுவனக இருந்த அவன் ஒரு சின்ன ஆட்டுக் குட்டியாக மாறிவிட்டான்!

"ஐயோ தம்பி! இப்படி மாறி விட்டாயே!" என்று கார்த்திகை புலம்பினள். "பே! பே!" என்று கத்திக் கொண்டே அந்த ஆட்டுக் குட்டி அவளைச் சுற்றிச் சுற்றி வந்தது.

கார்த்திகை கவலையோடு தன் பயணத்தைத் தொடர்ந்தாள். அவள் பின்னலேயே அந்த ஆட்டுக் குட்டியும் போயிற்று. சைப்ரஸ் மரங்கள் நிறைந்த ஒரு சோலையை அவள் அணுகினள். மரங்களின் இடையே ஒரு குளம் இருந்தது. கார்த்திகை தாகம் தீரத் தண்ணீர் அருந்தினள். ஆட்டுக் குட்டிக்கும் நீர் கொடுத்தாள். பிறகு குளத்தின் கரையிலிருந்த ஒரு மரத்தின் மேல் ஏறி இளைப்பாறினள். ஆட்டுக் குட்டி அமைதியாகப் புல் மேய்ந்து கொண்டிருந்தது.

திடீரெனக் குதிரைகளின் சேணத்தில் உள்ள மணிகள் கணகண வென்று ஒலித்தன. கார்த்திகை கூர்ந்து நோக்கினள். அரண்மனைச் சேவகன் இரண்டு குதிரைகளை அழைத்துக் கொண்டு குளத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவை அந்த நாட்டு இளவரசனுடைய குதிரைகள். அவை குளத்திற்கு வந்ததும், நீரில் பிரதிபலித்த கார்த்திகையின் உருவத்தை முதலில் கண்டன. மிரண்டு போய்த் தண்ணீர் குடிக்க மறுத்தன. சேவகன் நீரை நோக்கினன். அவன் ஓர் அப்பாவி. அங்கு பிரதிபலித்த கார்த்திகையின் உருவத்தை அவனும் கண்டான். ஆனல், அதைத் தவருகப் புரிந்து கொண்டான்.

சேவகன் ஓடிச் சென்று, "இளவரசே! இளவரசே! குளத்தில் ஒரு தேவதை இருக்கிறது!" என்று பரபரப்போடு சொன்னன்.

இளவரசன் குளத்திற்கு வந்ததுமே விஷயம் விளங்கியது. அவன் மரத்தின் மேல் நோக்கினன். கார்த்திகையின் அழகைக் கண்டு பிரமித்துப் போனன். அவள் கீழே இறங்கி வந்தாள்.

"அழகிய பெண்ணே! என்னை மணந்து கொள்ளச் சம்மதமா? என் அரண்மனைக்கு வருகிருயா?" என்று இளவரசன் கேட்டான்.

"சம்மதம். ஆனல் ஒரு நிபந்தனை. இந்த ஆட்டுக் குட்டியும் அரண்மனையிலேயே இருக்க வேண்டும். அங்குள்ள இனிய புற்களை அது மேய வேண்டும்!" என்று அவள் பதிலளித்தாள்.


இளவரசன் ஒப்புக் கொண்டான். அவர்கள் அரண்மனைக்குச் சென்றனர். கல்யாணம் நடந்தது. கார்த்திகை சந்தோஷமாக இருந்தாள். ஆனல், அவளுடைய சந்தோஷம் நீடிக்கவில்லை.

இளவரசனுடைய அம்மாவுக்குக் கார்த்திகையைப் பிடிக்கவில்லை. அவளுக்குப் பல கஷ்டங்களைக் கொடுத்தாள். கார்த்திகையின் அழகைக்

ராஜாஜி படித்த பள்ளி

ராஜாஜி படித்த பள்ளி 'இராம் பிரகாஷ் விஜயலட்சுமி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி'. இப்பள்ளி எங்கள் ஊரில்தான் உள்ளது. இப்பள்ளியின் பழைய பெயர் போர்டு ஹைஸ்கூல் (Board High School) என்பது. ராஜாஜி படித்த வகுப்பறை இன்றும் எங்கள் பள்ளியில் உள்ளது. இங்கு வகுப்புகளும் நடைபெறுகின்றன. இந்த அறையை 'ராஜாஜி ஹால்' என்று அழைக்கிருர்கள்.

— கே. நரசிம்மன் (7378), ஒசூர்.



அடுத்த இதழில்

பழமொழிப் போட்டி ஆரம்பமாகிறது!

கண்டு அவனுடைய சித்தி பொருமைப்பட்டதைப் போலவே, இளவரசனுடைய அம்மாவும் பொருமைப்பட்டாள். எப்படியாவது கார்த்திகையைக் கொன்று விடவும் திட்டமிட்டாள்.

ஒருநாள் இளவரசனுடைய அம்மாவும், கார்த்திகையும் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தனர். ஆட்டுக் குட்டியும் அவர்களைத் தொடர்ந்து போயிற்று. அங்கு பாசி நிறைந்த குளம் ஒன்று இருந்தது. திடீரென அவள் கார்த்திகையைப் பிடித்து அந்தக் குளத்தில் தள்ளிவிட்டாள். கார்த்திகை நீரில் மூழ்கிப் போனாள்.

இளவரசன் கார்த்திகையை அரண்மனை முழுதும் தேடினான். காணவில்லை. தன் அம்மாவிடம் விசாரித்தான். "எனக்கு என்ன தெரியும்?" என்று சொல்லி அவள் தப்பித்துக் கொண்டாள். இளவரசன் தோட்டத்திற்குப் போனான். ஆட்டுக் குட்டி வேகமாகக் கத்திக் கொண்டே, அந்தக் குளத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

"அந்த ஆட்டுக் குட்டியைப் பார்! என்ன கத்துக் கத்துகிறது! அந்தச் சத்தத்தைக் கேட்டுக் கேட்டு எனக்குத் தலைவலி தாங்க முடியவில்லை. ஆட்டுக் குட்டியைக் கொன்றால்தான், அது சத்தம்போடுவதை நிறுத்தும்போல் தோன்றுகிறது. முதலில் அதற்கு ஏற்பாடு செய்!" என்று அம்மா இளவரசனிடம் சொல்லிக் கொண்டே இருந்தாள். ஆட்டுக் குட்டியின் சத்தலைவிட அம்மாவின் தொந்தரவைத் தாங்க முடியாமல் இளவரசன் அதைக் கொல்ல உத்தரவிட்டான்.

கத்தி கழுத்தில் விழுந்ததுமே ஆட்டுக் குட்டி, "பே... பே... பே... அக்கா! கார்த்திகை அக்கா! என்னைக் கொல்லுகிறார்களே! காப்பாற்று! காப்பாற்று!" என்று பெரிதாக அலறியது.

திடீரெனக் கார்த்திகை தண்ணீர் சொட்டச் சொட்டக் குளத்திலிருந்து மேலே வந்தாள். "என் ஆட்டுக் குட்டி எங்கே? அதைக் கொல்லாதீர்கள்! கொல்லாதீர்கள்!" என்று சொல்லிக் கொண்டே வந்தாள்.

இளவரசன் இருகை நீட்டி அவளைச் சந்தோஷத்தோடு வரவேற்றான். அவனுடைய அம்மாவும் சந்தோஷப்படுவது போல நடித்தாள். அதற்குள் கத்தி பாயவே, ஆட்டுக் குட்டி இறந்து விட்டது.

"வருத்தப்படாதே, கார்த்திகை! உனக்கு வேறு ஆட்டுக்குட்டி வாங்கித் தருகிறேன்," என்று இளவரசன் அவளைத் தேற்றினான்.

"எனக்கு என்னுடைய ஆட்டுக் குட்டிதான் வேண்டும். வேறு எதுவும் வேண்டாம். ஐயோ! அதைக் கொன்றுவிட்டீர்களே!" என்று சொல்லி அவள் அழுது கொண்டே இருந்தாள்.

இளவரசனுடைய அம்மா ஒரு விருந்து தயார் செய்தாள். ஆட்டுக் குட்டியைச் சுவையாகச் சமைத்துப் பரிமாறினாள்.

கார்த்திகையைத் தவிர மற்ற எல்லோரும் அதைச் சாப்பிட்டு ஏப்பம் விட்டனர். விருந்து முடிந்ததும், கார்த்திகை மீதமிருந்த எலும்புத் துண்டுகளைப் பொறுக்கித் தோட்டத்தில் புதைத்தாள். கண்ணீரால் அந்த மண்ணை நனைத்தாள்.

அடுத்த நாள் ஓர் அதிசயம் நடந்தது. அந்த இடத்தில் திடீரென ஒரு பெரிய ஆரஞ்சு மரம் முளைத்திருந்தது. அதன் இலைகளின் நறுமணம் தோட்டம் முழுவதும் பரவியது. மரத்தில் ஓர் அழகான ஆரஞ்சுப் பழம் பொன் நிறத்தில் பழுத்திருந்தது.

இளவரசனுடைய அம்மா அதைக் கண்டாள். "மகனே! அந்த ஆரஞ்சுப் பழத்தை எனக்குப் பறித்துக் கொடு!" என்று கேட்டாள். இளவரசன் அதைப் பறிக்க முயன்றான். முடியவில்லை. அவனுடைய கைக

ளுக்கு அகப்படாமல் அந்தக் கிளை மேலே உயர்ந்தது. அவனுடைய அம்மா முயன்றாள். தோற்றாள்.


''நான் அதைப் பறிக்கிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே கார்த்திகை முன் வந்தாள். கிளை அவளை நோக்கி வளைந்தது. பழம் அவளுடைய கைகளுக்குள் வந்தது.


''கார்த்திகை அக்கா! என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்!'' என்று அந்த ஆரஞ்சுப் பழத்தின் உள்ளேயிருந்து ஒரு குரல் பேசியது. அது பழக்கமான ஒரு குரல். தம்பி விடிவெள்ளியின் குரல். கார்த்திகை அவ்வாறே அந்தப் பழத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். கிளை மளமளவென்று ஓங்கி வளர்ந்தது. விண்ணை முட்டும் அளவுக்கு வளர்ந்தது. அந்தப் பழத்தைப் பிடித்திருந்த கார்த்திகையும் மண்ணிலிருந்து விண்ணை நோக்கிப் பயணமானாள்.

இளவரசனும் அவனுடைய அம்மாவும் அந்த அதிசயக் காட்சியைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். வானத்தில் ஒரு பறவை உயர்வதைப் போலக் கார்த்திகை மேலே மேலே உயர்ந்து கொண்டே போனாள். அவளுடைய உருவம் கொஞ்சங் கொஞ்சமாகச் சிறியதாகிக் கொண்டே வந்தது; கடைசியில் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விட்டது. கீழே இருந்தவர்களுக்கு அவர்களுடைய குரல் மட்டும் தெளிவாகக் கேட்டது.

''இளவரசே! என் அருமைக் கணவரே! உங்களைப் பிரியும் நேரம் வந்துவிட்டது. என் சித்தியின் கொடிய கரங்களிலிருந்து தப்பிய நான், உங்கள் அம்மாவின் கொடுமைக்கு ஆளானேன். இனிமேல் இந்த மண்ணுலகத்தில் எனக்கு இடமில்லை. இத்தகைய கொடுமைகள் எல்லாம் இல்லாத ஓர் இனிய உலகிற்கு என் தம்பியும், நானும் போகிறோம். வணக்கம்,'' என்றாள்.

வானுலகிற்குச் சென்ற அவர்கள் இருவரும் கார்த்திகை நட்சத்திரமும், விடி வெள்ளியுமாக மாறி இருளில் ஒளி வீசினர். இன்றைக்கும் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றனர்.





பாபுவும் சிங்கமும்
கதை, சித்திரம் : ரதிலி
பாட்டியுடன் காட்டின் எல்லையில் வசித்து வந்தான் பாபு.
பாட்டி, அம்மாவைப் பார்த்து ரொம்ப நாள் ஆச்சு.
இன்னிக்கே போய்ப் பார்த்து வாயேன்டா.
சரி, பழங்களும் பட்சணமும் கொண்டு போறேன்.
கிழவி பேரனுக்கு அவைகளைக் கட்டிக் கொடுத்தாள்.
வண்டிக்காரனிடம் போனான். அங்கும் சங்கி...
காட்டைக் கடந்தாகணுமே. மன்னிச்சுக்க. நம்மாலே முடியாது.
அங்கே ஒரு சிங்கம் அலையுதாம்.
தனியாகக் காட்டைக் கடக்க நினைத்தான்.
காட்டினுள் நுழைந்து சென்றான்.
சிறிது நேரத்தில்..
சிங்கம் !
பலே! பலே! இதோ என் உணவு வருது
குட்டிப் பயலே! எங்கே போறே?
எ.... என் ஆடு ஒன்று கிணற்றிலே விழுந்து விட்டது.
இவனோடு போய் அந்த ஆட்டை சாப்பிட-லாம்



என்னையும் கூட்டிப் போ.
சரி சரி
இந்தப் பொல்லாத சிங்கத்தை தீர்த்துக் கட்டவேண்டும்..
இன்று எனக்கு நல்ல உணவு தான்..
சற்று தூரத்தில் ஒரு கிணறு தென்பட்டது!
எங்கே ஆடு?
இதோ காட்டுறேன்!
பாபு கிணறு அருகே சென்று..!
இதோ! இந்தக் கிணத்துல..!
கிணற்றை எட்டிப்பார்த்தது..
எங்கே? காணோமே!
நீ வருவதை எப்படியோ தெரிந்து கொண்டு உள்ளே போய் விட்டது!
கோபம் அடைந்த சிங்கம் உள்ளே குதித்தது..!
கிணறு நல்ல ஆழம்! மாட்டிக் கொண்டாயா!
தன் பயணத்தைத் தொடர்ந்தான் பாபு!
முற்றும்.

விளக்கு - ஒரு-விளக்கம்



இளந்தாரகை.

ஒருநாள் ஒருவீட்டில் குழல்விளக்கும் (டியூப் லைட்) குமிழ் விளக்கும் (பல்பு) ஒன்றையொன்று கடுமையாக விமரிசித்துக் கொண்டிருந்தன. குமிழ் விளக்கு குழல் விளக்கைப் பார்த்து, "என்ன, குழல் விளக்காரே! சுவிட்சைப் போட்டவுடன் ஜன்னி வந்த முடவன் போல வெட்டுகிறீர்?" என எக்காளமாய்க் கேட்டது.

அதற்குக் குழல் விளக்கு, "நான் எரிவதற்குச் சற்று நேரம் எடுக்கத்தான் செய்கிறேன்; இருந்தாலும் காமாலைக் கண்ணன் போல மஞ்சள் ஒளியைக் கொடுப்பது இல்லையே! பால் போன்ற வெண் ஒளியை அல்லவா கொடுக்கிறேன். அதனால், எல்லோரும் என் ஒளியில் படிப்பதையே விரும்புகிறார்கள்"—என்று ஜம்பமடித்துக் கொண்டது.

உடனே குமிழ் விளக்கு, "ஐயா, குழல் விளக்காரே, உம்மை யாரும் நம்புவது இல்லை. குறைந்த மின்சாரம் வந்தால் நீர் உமது கோணல் புத்தியைக் காட்டி எரிய மாட்டீர்; நான் அப்படியல்ல; எந்த நேரமும் உதவுவேன்; மக்களின் நம்பிக்கை நட்சத்திரமே நான்தான்!" என்று தற்பெருமை அடித்துக் கொண்டது.

இரவு, சிறிதுநேரத்தில் மின்சாரம் திடீரெனத் தடைப்பட்டுவிட்டது. அறை முழுவதும் இருட்டாகிவிட்டது. வீட்டுச் சொந்தக்காரர் உடனே ஒரு சிம்னி விளக்கைத் தூசி தட்டி எடுத்து எரிய வைத்தார். அறை ஓரளவு வெளிச்சமாக இருந்தது.

சிம்னி விளக்குக்குப் பெருமை தாங்க முடியவில்லை. உடனே அது, "ஐயா குழல் விளக்காரே, குமிழ் விளக்காரே, உங்கள் இருவரின் ஜம்பத்தையும் ஓர் ஓரத்தில் இருந்து, நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். உங்களை விட ஆபத்து, அவசரத்தில் உதவுபவன் நான்தான். எனவே, எனக்குப் பிறகுதான் நீங்கள்" என மார்தட்டிப் பெருமைப்பட்டுக் கொண்டது.

குழல் விளக்கும், குமிழ் விளக்கும் எதுவுமே பேச முடியவில்லை. மனம் இருண்டு போயிருந்தன.

சிறிது நேரத்திற்குள் சிம்னி விளக்கு தன் ஒளியைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டு வந்தது. இதை வீட்டுச் சொந்தக்காரரும் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். எழுந்து அருகில் வந்து, சிம்னி விளக்கைக் கையில் எடுத்துக் குலுக்கிப் பார்த்தார். மண்ணெண்ணெய் இல்லை என்பதை உறுதி செய்து கொண்டார்.

சற்று நேரத்திற்கெல்லாம் சிம்னி விளக்கு அணைந்துவிட்டது. மீண்டும் இருள் சூழ்ந்து கொண்டது. குழல் விளக்கும், குமிழ் விளக்கும் சேர்ந்து, 'கொல்'லெனச் சிரித்து விட்டன. சிம்னி விளக்கு வெட்கித் தலைகுனிந்தது.

வீட்டுச் சொந்தக்காரர் மேஜையி

லிருந்து ஒரு மெழுகுவர்த்தியை எடுத்துப் பற்ற வைத்தார். அறை எங்கும் ஒளி பரவியது. இப்போது மெழுகுவர்த்தி பேசியது, "நண்பர்களே, ஒளியைக் கொடுப்பதற்கு என்றே நாம் பிறந்திருக்கின்றோம். ஆனால், நீங்கள் எல்லோருமே இன்னொருவரைச் சார்ந்துதான் வாழுகிறீர்கள். மின்சாரமோ மண்ணெண்ணெயோ இல்லையேல் உங்களுக்கு வாழ்வு இல்லை. அப்படியிருக்க, நீங்கள் ஏன் வீண் ஜம்பம் அடித்துக் கொள்கிறீர்கள்? வீண் பெருமை வீணயில் போய்தான் முடியும் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றது.

குழல், குமிழ், சிம்னி விளக்குகள் தங்கள் இயலாமையை அறிந்து வெட்கித் தலைகுனிந்தன. அன்று முதல் வீண் பெருமையை விட்டு அமைதியாயின.

விடை தெரியுமா?

1. ஜனவரி முதல் நாளை வருடத்தின் ஆரம்பமாகக் கொள்ளும் பழக்கம் எப்போது ஏற்பட்டது?

2. கங்கை நதியைப் பற்றி நன்கு தெரியும். ஆனால் மகாவலி கங்கை, களகங்கை, கன்னிகங்கை, மாணிக்க கங்கை போன்ற நதிகளைப் பற்றித் தெரியுமா?

3. பெருலா என்பது என்ன?

4. மழைக்காலத்தில் ஏராளமாகத் தென்படும் தவளைகள் கோடைக் காலத்தில் எங்கு மறைந்திருக்கும்?

5. ஒரு மனிதனின் உடலில் எவ்வளவு ரத்தம் இருக்க வேண்டும்?

6. ஒரு தேனீக் கூட்டில் சுமார் எத்தனை தேனீக்கள் வசிக்கும்?

7. 'கிண்டர் கார்டன்' என்னும் நர்சரிப் பள்ளியைக் கண்டுபிடித்தது யார்?

8. கடுதாசி உறை யாரால், எப்பொழுது தயாரிக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது?

9. அறிவாளி என்பதைக் குறிக்கும் பறவைச் சின்னம் எது?

10. கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகும் வாய்ப்பு உள்ளது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்புறம் என்ன ஆகும்?

விடைகள்: 1. 1752 ஆம் ஆண்டு முதல். 2. இலங்கையில் பாயும் நதிகளின் பெயர்கள். 3. உணவில் சேர்க்கும் பெருங்காயத்தைத் திரவப் பொருளாக வெளியிடும் பயிரின் பெயர். 4. சேற்றுக்குள் புதைந்திருந்து, பருவ மழை வரும் வரை வேனிலுறக்கம் கொண்டிருக்கும். 5. அவன் எடையில் 7 சதவிகிதம் இருக்க வேண்டும். 6. குறைந்தபட்சம் ஐம்பதாயிரம். 7. 1848 இல் ஃபிரடிரிக் வில்ஹெம் ஃப்ரோபல் என்ற ஜெர்மானியர். 8. பியர்சென் என்பவரால் 1839 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டது. 9. ஆந்தை. 10. கட்டெறும்பு வளர்ந்து கழுதையாக ஆகும் வாய்ப்பும் ஏற்பட்டு விடும்; அவ்வளவுதான்!

தொகுப்பு: ஆர். எஸ். சுப்பிரமணியன்.

தாத்தாவின் பொடி டப்பி

வேதம்.



எங்கள் தாத்தா இடுப்பிலே
   என்றும் இருக்கும் பொடிடப்பி!
தங்க நிறத்துப் பொடிடப்பி!
   தாத்தர் பரிசாய்ப் பெற்றடப்பி!

மூடி திறந்து, பொடிஎடுத்து,
   மூக்கில் தாத்தா உறிஞ்சுவார்!
ஓடி வந்தே சுமனும்நானும்
   உடனே அவரை நெருங்குவோம்!

“யானை போல உறிஞ்சுறையே!
   எப்படித் தாத்தா?” — என்றிடுவோம்!
ஆனால் தாத்தா ‘போ’என்பார்
   அதற்கு மேலும் கெஞ்சிடுவோம்!

“தூரப் போங்க பசங்களா!
   தும்மல் போடும்பொடி” — என்பார்
கார நெடியோ அதற்குள்வந்து
   கண்ணில் நீராய் வடிந்திடும்!

தாத்தா தூங்கும் நேரத்தில்
   தம்பி சுமனும் பொடிஎடுத்தே
தாத்தா போலே மூக்குறிஞ்ச
   தன்னால் தும்மல் பொங்கியதே!

தாத்தா தூக்கம் கலைந்ததுவே!
   தம்பி குறும்பை அறிந்தாரே!
தாத்தா தடியைத் தூக்கும்முன்
   தம்பி மான்போல் பறந்தானே!

யானை பற்றிய பழமொழிகள்



1. யானைப் பாரத்தை பூனை சுமந்தாற்போல்.
2. யானை மேயும் காட்டிலே ஆடு மேய இடமில்லையே!
3. யானையைப் பார்க்க வெள்ளெழுத்தா?
4. யானை நிழல் பார்க்க தவளை அழுதது போல.
5. யானைப் பசிக்கு சோளப் பொரியா?
6. யானையைத் தண்ணீரில் இழுக்கும் முதலை, பூனையைத் தரையில் இழுக்குமா?
7. யானையை விற்று பூனைக்கு வைத்தியம் பார்க்க வேண்டும்!
8. யானை வாய்க் கரும்பு போல
9. யானையைத் தேட குடத்துள் கைவிட்டாற்போல.
10. யானையைப் பிடிப்பதும் பானையில் அடைப்பதும் செல்லப்பிள்ளைக்கு அடையாளம்.
11. யானையும் யானையும் மோதும்போது அகப்பட்ட கொசு போல
12. யானை கேட்ட வாயால் ஆட்டுக்குட்டி கேட்பதா?
13. யானைக் கூட்டத்தில் சிங்கம் புகுந்தது போல.
14. யானைக்கும் அடி சறுக்கும்.
15. யானைக்குத் தீனியிடும் வீட்டில் ஆட்டுக்குட்டிக்கு வஞ்சமா?
16. யானைக்குச் சிட்டுக் குருவி மத்யஸ்தம் செய்தாற்போல்.
17. யானையும் அருகம் புல்லினால் தடைப்படும்.
18. யானை விழுந்தால் தந்தம்; பூனை விழுந்தால் தோல்
19. யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்.
20. யானைமேல் போகிறவனைச் சுண்ணாம்பு கேட்டால் கிடைக்குமா?

தொகுப்பு: எஸ். ஜெயஸ்ரீ

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல் (தொடர்ச்சி)

3870 டி.ஷி. சகுந்தலா, த/பெ. தவசிமுத்து நாடார், முகிலன் குடியிருப்பு, அகஸ்தீஸ்வரம்—629 701.
3871 **G. Vijaya Lakshmi, 329, Miller Tank Queen's Road, Bangalore - 560 052.**
3872 தா. நரசிம்மன், 3, சிவன் கோவில் வீதி, ஆனைமலை — 560 052.
3873 ஆர்.பி. மனோபாலு, 37—ஏ, ஆலமரத் தெரு, கரூர்—639 001.
3874 ஏ. அப்ஷாத், 86, எம்.எம். யாகூப் தெரு, சேலம்—1.
3875 தே. சரவணன், 73, யாகூப் தெரு, சேலம்—1.
3876 இரா. ராகவேந்திர சுரேஷ், 47 ஏ, கைக்கோளத் தெரு, மேட்டுப்பாளையம்—621210.
3877 செ.க. தட்சிணாமூர்த்தி, செங்காடு, அ. அனுமன் பள்ளி (அஞ்சல்), அரச்சலூர், 638 101.
3878 எஸ். சுப்பிரமணியன், C/o. எஸ். சௌந்தரம், மேலரத வீதி, குன்றக்குடி—623206.
3879 தேவி, எல் 87, திருவள்ளுவர் நகர், இராஜபாளையம்—626 117.
3880 நாராயண்குமார், சோலை நாராயணன் இல்லம், 4வது தெரு, காமராஜ் நகர், எண்ணூர், சென்னை — 57.
3881 இரா. சீனிவாசன், 6, கல்யாண கிணறு தெரு, திருவண்ணாமலை—606 601.
3882 கே. திருமுருகன், 94 ஜி, கிழக்குத் தெரு, பெரமனூர், சேலம்—636 007.
3883 கே. கணேசன், 94 ஜி, கிழக்குத் தெரு, பெரமனூர், சேலம்—636 007.
3884 எல். நடேஷ் பாபு, 89, கே 41), மதுரை ரோடு, மணப்பாறை
3885 கு. சுவாமிநாதன், பி 35, முனிசிபல் காலனி, மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர்—613 001.
3886 க. ராமசுப்பிரமணியன், தா/பெ. லலிதா, ஊட்டச் சத்து மையம், நேமம், பழையூர், குன்றக்குடி (வழி) 623 206
3887 எஸ். ராஜா, 18, வடக்கு மடவிளாகம், லால்குடி
3888 பி. சுவாமிநாதன், 136 சோலையப்பர் தெரு, கும்பகோணம்.
3889 எஸ். கார்த்திக், 4 ஏ/23, கந்தசாமி செட்டியார் தெரு, திருப்பூர் — 638 604.
3890 ஐ. சர்புதீன், த/பெ. ஜி.எஸ். இஸ்மாயில், செல்வியம்மன் நகர், சேலம்—636 111
3891 சீ. விஜய், த/பெ. இரா. சீனிவாசன், 'சோமநாத் இல்லம்', ஏ.எல்.ஏ.ஆர். வீதி, காளையார் கோயில் அஞ்சல்—623 551.
3892 சீ. சித்திரை செல்வி, த/பெ. இரா. சீனிவாசன், 'சோமநாத் இல்லம்' ஏ.எல்.ஏ.ஆர். வீதி, காளையார் கோயில் அஞ்சல்—623 551.
3893 எம். ஸ்ரீராம், 100, வீரப்பபுரம் தெரு, கல்லிடைக்குறிச்சி.
3894 ஜி. குருராஜன், த/பெ. குருசுப்ரமணியம், ஹாஸ்பெட்டல் ரோடு, தாவலகுப்பம், பாண்டி—605 007.
3895 பி. அசோக் குமார், 15/5, ஹவுசிங் யூனிட், காஜாமலை காலனி, திருச்சி—20.
3896 ந. இராசன், 130, கடை வீதி, ஆரூர், தர்மபுரி ஜில்லா—636 908.
3897 சி. வெங்கடேஸ், 174, கடைவீதி, ஆரூர், தர்மபுரி ஜில்லா—636 908.
3898 வி.ஜி. சண்முகப்ரியா, 16/ஏ, ராமசாமி முதலி தெரு, வசந்தபுரம், வேலூர்—3.
3899 வி.ஜி. வீணா 16/ஏ, ராமசாமி முதலி தெரு, வசந்தபுரம், வேலூர்—3.
3900 ஜெ. உமாபதி, மணக்குப்பம் போஸ்ட், பெரியசெவலை (வழி) தெ.ஆ. மாவட்டம்—607 209.
3901 இ. செந்தில் குமார், 6, தனலட்சுமி கார்டன், விழுப்புரம், தென்னாற்காடு மாவட்டம்.
3902 க. மருது பாண்டியன், த/பெ. ஏ. கலிய பெருமாள், உம்டூளாப்பாடி, தஞ்சை மாவட்டம்.
3903 க. சூடாமணி, 81, நந்தவனம் தெரு, ஓம் முருகா இல்லம், திண்டுக்கல்.
3904 கே. கண்ணன், 117, துர்காலயார் ரோடு, திருவாரூர், தஞ்சை ஜில்லா.
3905 சீ. நாராயணன், 34, சுந்தரபுரம் தெரு, மானாமதுரை—623 606.
3906 மு. லக்ஷ்மி, 9 ஏ, புதுப்படி சந்து, வடக்கு ஆண்டார் வீதி, திருச்சி — 620 002.
3907 வி. முருகன், பேரூர் அஞ்சல், பாளையக்கோட்டை (வழி), காட்டுமன்னார்குடி தாலுகா, தெ.ஆ. மாவட்டம்—608 701.
3908 ஏ. சிவகுமார் 2/11, சிவன்கோயில் தெரு, தலைவாசல்—636 112.
3909 கே. கணேஷ்ராம், 30, புதுத் தெரு, இலால்குடி, திருச்சி ஜில்லா—621 601.
3910 கே. ஸ்ரீமதி, 30, புதுத் தெரு, இலால்குடி, திருச்சி ஜில்லா—621 601.

3911 ல. மகேஷ். 10, எல்.ஐ.சி. காலனி, நேருஜி நகர் மேற்கு, திண்டுக்கல்—624 007.
3912 எல். வெங்கடேஷ், 47, தெய்னியூர் சாலியா தெரு, மயிலாடுதுறை—609 002.
3913 ரா. கிள்ளிவளவன், மே/பா. முத்து வைரவன், அம்பாள்புரம் முதல் வீதி, செக்காலை,
காரைக்குடி—623 002.
3914 ரா. சுகிதா, 44/2, கிழக்கு காலனி, ஐ.சி.எப்.—600 038.
3915 ஜி. சுகவள்ளி, 5, கிழக்கு சண்முகபுரம் காலனி, 2ம் தெரு, விழுப்புரம்.
3916 எஸ். கோபிநாத், 29, இரண்டாம் அக்ரஹாரம், கொடுமுடி—638 151.
3917 எம்.எஸ். விமலா, 71, சரஸ்வதி நிலையம், ரயில்வே லைன் வடக்குத் தெரு,
பொன்னம்மாபேட்டை, சேலம்.
3918 எஸ். தேவி பிரசாத், மே/பா. ஒ. எம். சண்முகம், வழக்குரைஞர், கச்சேரி வீதி,
கோபிசெட்டிபாளையம்—638 452.
3919 எம். செந்தில்குமார், 1 ஏ, வேணுகோபால் தெரு, தருமபுரி—636 701.
3920 சி.வி. ரவி, 15, சத்திரம் தெரு, பொள்ளாச்சி
3921 ஜி. கணேசன், 5 ஏ, 2 வது தெரு, கிழக்கு சண்முகபுர காலனி, விழுப்புரம்—605602
3922 என். ஜஸ்டின் ஜானட், 438/1, சி.எப். குவார்ட்டர்ஸ், அருவங்காடு,
நீலகிரி—643 202.
3923 ஐ. இம்தாதுல் பசிர், 19/59, ஈஸ்வரன் கோயில் வீதி, கோவை—641 001.
3924 Gayathri Ranganathan 18, Shashank Apariment, Shastri Nagar, Dombivili (West),
Thana Dist 421 202
3925 எஸ். லக்ஷ்மி, த/பெ. திரு வி. சாரங்கபாணி, சாரதி மெடிக்கல் ஸ்டோர்,
கடைவீதி, குடவாசல், தஞ்சை—612 601.
3926 R. Parvathy, 39-D, Mayur Vihar, Delhi-110 091.
3927 கெ. மணிபூஷணம், 18, கோனூர்பேட்டை சந்து, தெற்குக் கடைவீதி, பாளையங்
கோட்டை—627 002.
3928 பாலசுப்பிரமணியன், 15, தீத்தாரப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5
3929 எஸ். சந்திரசேகரன், 14 ஏ, நாலாயிரம் தெரு, விழுப்புரம்—605 602.
3930 பி.எஸ். பிரின்ஸ் ராஜன், 34—ஜி, வி.கே. ரோடு, திருநெல்வேலி—2.
3931 மு. முத்துமுருகன், 123, 2 ஆம் நிர். செக்கடித் தெரு, கோவில்பட்டி.
3932 வெ. பானுமதி, 15 ஏ, நடராஜபுரம், தூத்துக்குடி—2.
3933 டி. பாரி வளவன், 16, ஆனைக்காரன் தெரு, சிதம்பரம், தெ.ஆ. மாவட்டம்.
3934 டி. சேகர், 3/100, பாரதி தெரு, புத்தனாம்பட்டி—621 007. திருச்சி மாவட்டம்.
3935 எம். சிற்றரசு, புகை ரதவீதி, பூதலூர் அஞ்சல், தஞ்சை மாவட்டம் 613 602.
3936 எல். ராதா, 19 ஏ, சிங்காரத் தோப்பு, திருச்சி—8.
3937 டி.என். ராமகிருஷ்ணன், 260—டி, ரயில்வே காலனி, கல்லுக்குழி, திருச்சி—20.
3938 ந. சுப்ரமணி 84, பெரிய கடை வீதி, பழனி—624 601.
3939 க. கார்த்திகேயன், 206, 5 வது தெரு எக்ஸ்டென்ஷன், காந்திபுரம், கோவை—12.
3940 கே. வெங்கடேஷ், 10, சீனிவாசபுரம், கரூர்—639 001.
3941 S. Banumathi, 1, Ramamurthy Nagar, Dooravani Nagar (Post), Bangalore-560 016.
3942 இரா. சக்திவேல், 22 ஏ, கெங்கைமுத்து நாடார் தெரு, அருப்புக்கோட்டை.
3943 சு. மீனாட்சிசுந்தரம், 132 எப்/ஏ.ஏ.பி. ஹவுஸ், பெருந்துறைரோடு, ஈரோடு—638 009.
3944 ஜி. நடராஜ், 244—ஏ, சிட்டி பஜார், அருப்புக்கோட்டை—626 101.
3945 கே. கண்ணன், த/பெ. டி. கிருஷ்ணன், நத்தம் ரோடு, சாணார்பட்டி, திண்டுக்கல்
தாலுகா
3946 அ. கிருஷ்ணம்மாள், 36/2, வடக்குத் தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி
3947 ஐ. ஞான. காந்தி ராஜதுரை, 2/106, வதுவார்பட்டி அஞ்சல், செட்டிகுறிச்சி
(வழி), ஏ.பி.கே. தாலுகா
3948 கோ. ஐயப்பன், பாரதி தெரு, ஆயிரம்பேரி அஞ்சல், பாட்டப்பத்து, தென்காசி
தாலுகா
3949 எஸ். சக்திவேல், 16, ஞானப்பிரகாசம் தெரு, சிதம்பரம்—608 001.
3950 தி. கந்தசாமி, காளியம்மன் கோவில் தெரு, ஆயிரப்பேரி, தென்காசி தாலுகா.
3951 Vijaya, D/o. Thandavarayan, 14, Rumah Murah, Mahsan, Bahau, Negeri, Sembilan, Malaysia.
3952 பி. அருண் பிரதீப், மே/பா. டி.பி. துரைராஜ், தாலிக்குவேலி தெரு, கீழக்கடையம்,
கடையம், திருநெல்வேலி—627 415
3953 என். ஸ்ரீனிவாசன், 5, 6 வது தெரு, ஜெய்நகர், அரும்பாக்கம்—600 106.
3954 எஸ். சுந்தரம், 9, பங்களா தெரு, சேலம்—636 001.
3955 ரா. ஸ்ரீமதி, எப்—27/2, ரயில்வே காலனி, பொன்மலை, திருச்சி—4.
3956 அ. வெங்கடேசராகவன், 31, வடக்கு சம்மந்தபுரம் தெரு, இராஜபாளையம்—626117
3957 டி.எஸ். ஸ்ரீராம், 4, ராமச்சந்திர நாயுடு லே அவுட், கோவை—641 011.

(இன்னும் வரும்)



கருமாரியின் கருணை

—பூரம்

பஸ் ஸ்டாண்டில் வழக்கமான இடத்திற்குப் பாப்பா வந்தாள். பூக் கூடையை இறக்கி வைத்தாள். இடத்தைச் சுத்தம் செய்தாள். பிறகு கடையை விரித்தாள். மல்லிகை, முல்லை, கதம்பம், கனகாம்பரம்.... 'கம்' மென்று வாசனை மூக்கைத் துளைத்தது. எல்லாவற்றையும் மூங்கில் தட்டில் அழகாகப் பார்வையாக வைத்தாள்.

பகல் மூன்று மணிதான் இருக்கும். இன்னும் கூட்டம் வரவில்லை. நான்கு மணி ஆகிவிட்டால், அந்த முத்துப் பயல் வந்துவிடுவான். அவன் லாட்டரிச் சீட்டு வியாபாரம் செய்கிறான். பாப்பாவுக்குப் போட்டியாக அந்தப் பக்கம் கடை வைப்பான். குரல் கொடுப்பான். அவனுக்கு ஒரு நாளைக்கு ஆறு ரூபாய் கிடைக்கிறதாம்....! பாப்பாவுக்குப் பூ வியாபாரத்தில் அவ்வளவு கிடைக்காது. ஐந்து ரூபாய் கிடைத்தால் அதிகம். மழை காலமாக இருந்தால் அதுவும் இல்லை. பூக்களை வாங்கி வந்து நார் வைத்துத் தொடுப்பாள்; விதவிதமாய்த் தொடுப்பாள். வர்ணங்களை மாற்றிக் கண்ணுக்கு இனிமையாகச் செய்வாள். வாசனையாகவும் இருக்கும்; அழகாகவும் இருக்கும்!

"டேய் முத்து! நான் உழைச்சு சம்பாதிக்கிறேன். உன் மாதிரி இல்லே...!" என்பாள் பாப்பா முத்துவிடம்.

"ஏன்? நானும் கஷ்டப்பட்டுச் சீட்டு வாங்கியாறேன்... குரல் கொடுத்து வியாபாரம் செய்கிறேன்...."

"அங்கிட்டு வாங்கியாந்து இங்கிட்டு விக்கிறே? வேறே என்ன செய்யறே? நான் பூ வாங்கியாந்து நார் வைச்சுத் தொடுத்து விக்கிறேன்."

"நானும்தான் மொத்த வியாபாரி கிட்டே போயி, சீட்டு வாங்கியாந்து, குரல் கொடுத்து, கஷ்டப்பட்டு விக்கிறேன்...." என்று சிரிப்பான் அவன்.

"ஆமாமாம்.... ரொம்பக் கஷ்டந்தான் போ! டேய், இந்த லாட்டரிச் சீட்டு விக்கிறது மகா பாவம்டா...!"

"என்ன பாவம்?"

"எத்தினி பேரு ரூபாயைக் கொடுத்து வாங்கி ஏமாந்து போறாங்க? அவங்களுக்கு என்ன பிரயோசனம்?"

"ஏன்? யாராவது ஒருத்தருக்கு லட்ச ரூபாய் விழாமலா போகுது?"

"அத்தினி பேரை ஏமாத்தி ஒருத்தருக்குத் தூக்கி அந்தத் துட்டைக் குடுக்கறது நியாயமா? நீ இந்த வியாபாரத்தை விட்டுத் தொலைக்க மாட்டே...."

"உன் வியாபாரம் மட்டும் என்னவாம்?"


"என் வியாபாரத்துக்கு என்ன? சாமிக்குப் பூ வாங்கறாங்க... வரவங்க வாசனைப் பூவை வாங்கித் தலையிலே வைச்சுக்குவாங்க.... நான் செய்யறது நல்ல வியாபாரம். நான் யாரையும் ஏமாத்தலை...."

"நானும் யாரையும் ஏமாத்தலையே....."

"நீ ஏமாத்தாட்டி என்ன? இந்த லாட்டரிச் சீட்டு வியாபாரம் நல்ல

பிளாஸ்டிக் நாற்காலி!

பிளாஸ்டிக் தயாரிப்பில் ஏற்றுமதிப் பரிசு வாங்கியது பிரின்ஸ் பிளாஸ்டிக் நிறுவனம். இந்த நிறுவனம் முதல் தடவையாக இந்தியாவில் கனமான, பலமுள்ள பிளாஸ்டிக் நாற்காலிகளைத் தயாரித்தளிக்கிறது. இந்த நாற்காலி ஹோட்டல்கள், சமையலறைகள், மருத்துவமனைகளுக்கு மிகவும் பயன்படும். தரையில் அமர்ந்து கொண்டு இந்த பிளாஸ்டிக் நாற்காலியை மேஜையாகச் சிறுவர்கள் பயன்படுத்தலாம். டெலிபோன் வைத்துக் கொள்ளவும் இது உபயோகப்படும்.



வியாபாரமே இல்லே. அது சூதாட்ட வியாபாரம்டா.... குதிரைப் பந்தயம் மாதிரிதான்.... மகா பாவம்! எத்தனை பேர் ஏமாந்து போறாங்க....! அந்தப் பாவத்திலே உனக்கும் பங்கு இருக்குது!'' அழுத்தந்திருத்தமாகச் சொன்னாள் பாப்பா.

பாப்பாவுக்கு வயது பனிரெண்டு. தாய் தந்தை இருவரும் இல்லை. பாட்டிதான் இருக்கிறாள். பாட்டிக்கு வயதாகிவிட்டது. வீட்டோடு கிடக்கிறாள். அவளுக்கும் சேர்த்து பாப்பாதான் சம்பாதிக்க வேண்டும்.

முத்து பக்கத்திலுள்ள குப்பத்திலிருந்து வருகிறான். அவன் தாய் போன இடம் யாருக்கும் தெரியாது. அப்பன் குடித்தே செத்துப் போனான்.

அந்த இரண்டு பேருக்கும் அந்த பஸ் ஸ்டாண்டில்தான் வியாபாரம். பஸ் ஸ்டாண்டைத் தாண்டியவுடன் கருமாரி அம்மன் கோயில் இருக்கிறது. வெள்ளிக்கிழமை கிருத்திகை தினங்களில் கூட்டம் வரும். பூ வியாபாரம் சுறுசுறுப்பாக இருக்கும். அன்று மட்டும் அவளுக்கு எட்டு ரூபாய் கிடைக்கும். எல்லாம் அந்தக் கருமாரி படி அளக்கிறாள் என்று நினைத்துக் கொள்வாள் அவள்.

பூ வாங்கியவர்கள் அதைத் தலையில் வைத்துக் கொண்டு போகும் போது அவளுக்கே பெருமையாக இருக்கும். எத்தனை பேர் அந்த அம்மனுக்கு வாங்கிச் சாத்துகிறார்கள்! அங்கே அந்தப் பூவைப் பிரசாதமாக வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். இதைவிட நல்ல வியாபாரம் உண்டா?

லாட்டரிச் சீட்டு விற்பது ஒரு பிழைப்பா? அது ஒரு வியாபாரமா? அவளுக்குப் பிடிப்பதில்லை.... என்னவோ ஒரு வெறுப்பு....! ஆயிரக் கணக்கான பேரை ஏமாத்தி ஒருத்தருக்குக் கொடுக்கறது வியாபாரமா, சூதாட்டமா....?

அவள் பாட்டி கூடச் சொன்னாள் ஒருநாள். ''எல்லாரும்தான் வாங்கிப் பாக்கிறாங்க. ஊரு உலகத்துக்கு இல்லாத நியாயம் உனக்கு எதுக்கு?''

''நமக்கு அந்த லாட்டரி வேண்டாம்.''

பாப்பாவுக்கு எல்லாவற்றிலும் நியாயம் பார்க்கிற வழக்கம் உண்டு. பூ வியாபாரத்தில்கூட நேர்மையைக் கவனிப்பாள். காசு கொடுத்து வாங்குகிறவர்கள் சந்தோஷமாகப் போக வேண்டும் என்கிற எண்ணம் உண்டு. பூவின் விலை, நாரின் விலை, கட்டும் கூலி இதற்குமேல் ஆசைப்பட்டது கிடையாது. நியாயம் வேண்டாமா?

ஒவ்வொரு சமயம் சீக்கிரம் வியாபாரம் ஆகிவிடும், சில சமயம் இரவு எட்டு மணிக்குக்கூட நான்கு முழம் மீதி இருக்கும். வியாபாரம் ஆகாத பூவை அந்தக் கருமாரியின் சந்நிதியில் கொடுத்துவிட்டுத்தான் அவள் போவாள்.

முத்துவுக்குப் பாப்பாவின் வார்த்தைகள் காதில் ஏறுவதில்லை. எத்தனையோ தடவை சொல்லியாகி விட்டது.

''அக்கா, நியாயமா நீ வியாபாரம் செஞ்சு ஒரு நாளைக்கு அஞ்சு ரூபா சம்பாதிக்கிறே. நான் உடம்பு நோகாமே எட்டு ரூபா சம்பாதிக்கிறேன்....''

''நீ செய்யறது வியாபாரமா அது? தூ....! மானங்கெட்டது!''

''ஐய, நீ கஷ்டப்படாதே! சீட்டு

வாங்கறவங்க எல்லாரும் மறுநாள் லட்சாதிபதி....எல்லாரும்சந்தோசமா வாங்கிட்டுப் போறாங்க....'' என்று சிரிப்பான் அவன். அவள் எத்தனை திட்டினாலும்சிரிப்புத்தான் அவனுக்கு. எவ்வளவு கேலி பேசினாலும் ரோசம் வராது....

''ஸார்! நாளை கடைசி நாள்... இதை வாங்கிக்கிடுங்க.... அப்படியே அந்தப் பாப்பா கையிலே ஒரு முழம் பூ வாங்கிக் கருமாரி அம்மனுக்குக் குடுங்க.... நிச்சயம் நாளை மறுநாள் நீங்க லட்சாதிபதி....'' என்று வந்தவர்களிடம் சிபாரிசு செய்வான்.

''முத்து, நிறுத்திக்க. சாமிக்கு லஞ்சம் கொடுக்க முடியாது. யாருக்கு வேணாலும் லஞ்சம் கொடுக்கலாம். சாமிக்கு மட்டும் முடியாது....''

''கோவிலுக்கு வரவங்க.... எதுக்கு வராங்க பின்னே?''


''சும்மா வாயடி அடிக்காதே.... சும்மா கிட!'' என்று அவள் அடக்குவாள்.

அன்று என்னவோ தெரியவில்லை. அதுவரை முத்துப் பயல் வரவில்லை. வந்தால் ஒரு நாளைப் போல் ஏதாவது வாயைக் கிளறுவான். அவள் வாயை மூடிக் கொண்டிருந்தாலும் சும்மா இருக்கமாட்டான்.

அன்றும் வழக்கம்போல வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்தது. வாடிக்கையாளர்கள் எல்லோரும் வந்து போய்விட்டார்கள். டீச்சரம்மாவுக்கு ஸ்பெஷல் கதம்பம் ஒரு ரூபாய்க்குக் கட்டி வைத்திருக்கிறாள். காயத்ரி அம்மா மல்லி வாங்கிப் போய்விட்டாள். பங்களாவிலிருந்து பெரிய அம்மா வந்து போயாகிவிட்டது. இன்னும் அந்த கௌரி அம்மாதான் வரவில்லை.

ஆமாம். முத்து ஏன் இன்று வரவில்லை? எங்கே போய்விட்டான்? பாப்பாவுக்குக் காரணம் தெரியாமல் கவலையாக இருந்தது. நாள் தவறாமல் வந்து வியாபாரம்செய்கிறவன் எங்கே தொலைந்திருப்பான்? ஏனோ குழப்பமாக இருந்தது.

அம்மன் கோவில் வாசலில் ஆண்டிப் பண்டாரம் யாரிடமோ சொல்லிக் கொண்டிருந்தார்.



''அந்த முத்துப் பயலே போலீசு பிடிச்சுக்கிட்டுப் போயிருச்சு....''

யார், முத்துவையா? பாப்பாவுக்குத் தூக்கி வாரி போட்டது....! ஐயோ, போலீசா?

''தாத்தா, முத்துவைப் போலீசா பிடிச்சுக்கிட்டுப் போயிடுச்சு?''

''ஆமாம் புள்ளே! லாட்டரிச் சீட்டிலே ஏதோ போலிச் சீட்டு வைச்சிருந்தானும்! போலீசு வந்து இழுத்துக்கிட்டுப் போயிட்டாங்க....''

''அடப்பாவிங்களா.....!'' என்ருள் பாப்பா.

முத்துவாவது, கள்ளச் சீட்டாவது? பாப்பாவுக்கு பயமும், துக்கமும் தொண்டையை இறுக்கிற்று.

யாரிடமோ போய் சீட்டு வாங்கி வந்துதானே முத்து விற்கிருன்? அவன் என்ன செய்வான்? போலீசு பயங்கரம் ஆச்சுதே! கண்மண் தெரியாமல் அடி, உதை... கொன்னுப்பிடுவாங்களே... ஐயோ, அநாதைப் பிள்ளை....

பாப்பா அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

''கருமாரித் தாயே! முத்துப் பயலே எப்படியாச்சும் நீதான் காப்பாத்தணும்' அவளுக்கு வேறு எதுவும் தோன்றவில்லை. தெய்வந்தான் காப்பாற்ற வேண்டும்.

அந்தக் கவலையில் அவள் இடி விழுந்த மாதிரி உட்கார்ந்துவிட்டாள்.

''..... பாப்பா! இரண்டு முழம் கதம்பம் கொடு!'' என்று யாரோ கேட்டார்கள். அவளுக்கு மனது வியாபாரத்தில் செல்லக் கூடியதாக இல்லை.

'தாயே! முத்துவைக் காப்பாத்து தாயே!' என்று மனத்துக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

''என்ன ஒரு மாதிரி இருக்கிறே பாப்பா?''

—கேட்ட குரலுக்கு அவள் திரும்பினுள்.

வழக்கமாய் வரும் கௌரி அம்மாள் தான்!

''வாங்கம்மா, மனசே சரியில்லே....''

''என்ன ஆயிருச்சு உனக்கு?''

''எங்க முத்துப் பயலேப் போலீசு பிடிச்சுக்கிட்டுப் போயிட்டாங்களாம் அம்மா....''

''யாரு?''

''இங்கிட்டு லாட்டரிச் சீட்டு வித்திக்கிட்டுக் கிடப்பானே அவன்....''

''ஏன்?''

''ஏதோ, கள்ளச் சீட்டு, லாட்டரிச் சீட்டு, வைச்சிருக்கான்னு சொல்லிட்டு....''

''எங்கே கூட்டிப் போனுங்க?''

''ஸ்டேஷனுக்குத்தான் போயிருப்பாங்கம்மா.... பாவம்மா! அந்தப் பயல் அறியாத பயல்.... எங்கிட்டோ வாங்கி வந்து விக்குதுங்க.... அதுக்கு என்ன தெரியும்? அது அநாதைப் பிள்ளை. அப்பன் செத்துட்டான். ஆயி இருக்கிற இடமே தெரியலே..... ஒரு பாவமும் தெரியாதுங்க அதுக்கு'' பாப்பாவுக்கு துக்கம் குமுறிக் கொண்டு வந்தது.

''என்ன அப்படி அழுவறே?'' என்று பதறினுள் அந்த அம்மாள்.

''அது என்னைப் போல அநாதைப் பிள்ளை அம்மா....'' பாப்பா விம்மி விம்மிக் குரல் தழுதழுத்தது.

''சரி அழாதே பாப்பா! இதுக்கு இப்படி அழுவாங்களா?''

''போலீசிலே பிடிச்சா அடி, உதை.... அந்தப் பிள்ளை தாங்கமாட்டாம்மா.... அதை அந்தக் கருமாரி தான் காப்பாத்தணும். வேறே ஆள் கிடையாதும்மா.....''

''அழுவாதே....! சரி சரி, அந்தப்



பூவை இப்படிக் கொடு. நேரம் ஆயிடுச்சு....''

பூவை வாங்கிக் கொண்டு அந்த அம்மாள் போனுள்.

பாப்பாவின் மனம் வியாபாரத்தில் செல்லவில்லை. மீதி இருந்த பூவை எடுத்துக் கொண்டாள். கூடையை எடுத்துக்கொண்டு அம்மன் சந்நிதிக்கு வந்தாள். பூவை அப்படியே பூசாரியின் கையில் கொடுத்தாள். மூன்று முறை வலம் வந்தாள்.

''சாமீ! கல்பூரம் காட்டுங்க....''

தீபாராதனை ஆயிற்று.

கண்ணை மூடிக் கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

'முத்துப் பயலைக் காப்பாத்து! தாயே! காப்பாத்து....'' என்று மனதுக்குள் அவள் வேண்டிக் கொண்டாள். ஐம்பது பைசாவைத் தட்டில் போட்டாள்.

பின்னல் யாரோ வந்து நின்ற மாதிரி இருந்தது. 'சட்'டென்று திரும்பினுள். அட, இது நிசமா? முத்துப் பயல்தான் நின்று கொண்டிருந்தான்! என்ன அதிசயம்.....!

''என்னடா முத்து? எப்படிடா வந்தே?''

முத்துவின் முகம் சோர்ந்து கிடந்தது. தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு நின்றுன் அவன்.

''எப்படி உன்னை விட்டாங்க போலீசிலே?''

''விட்டாங்க.... யாரோ ஒரு அம்மா அந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்துப் பேசினுங்க....''

''யாரு அம்மாவா? இந்தக் கருமாரித் தாய்தான் முத்து...''

''அவங்க இன்ஸ்பெக்டரைப் பார்த்து சொன்ன உடனே விட்டுட்டாங்க.... இங்கிட்டு உங் கையிலே வாடிக்கையா பூ வாங்கற அம்மாதான் அவங்க....''

''யாரது?''

''தினம் வருவாங்க....''

பாப்பாவுக்குப் புரிகிற மாதிரி இருந்தது. அந்த கௌரி அம்மாவாகத் தான் இருக்குமோ?

யாராக இருந்தால் என்ன....? அந்தக் கருமாரிதான் அந்த அம்மா மனசிலே புகுந்து இந்தக் காரியத்தை செய்திருக்கணும்!

நிசமாவா முத்து?''

''ஆமாம் பாப்பா! அந்த அம்மா அந்த இன்ஸ்பெக்டர் ஐயா வீட்டு அம்மாதான் போலிருக்குது. அந்த அய்யாவோட இங்கிட்டு வந்து பூ வாங்குவாங்க. நான் பார்த்திருக்கேன்.... அவங்கதான் காப்பாத்திணுங்க.... அவங்களுக்கு எப்படியோ யாரோ சொல்லியிருக்காங்க....!''

''எல்லாம் இந்தக் கருமாரித் தாயின் கருணைதாண்டா. விழுந்து கும்பிடுடா, அந்தத் தாயைத் தவிர நமக்கு வேறே யாரு....?''

முத்துப் பயல் அப்படியே நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான்.

மறுநாள் முத்து அம்மன் கோயில் வாசலில் கடை வைத்திருந்தான். ஆனல், அது வேறு கடை! தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, கல்பூரம்....

வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது.

பாப்பாவுக்கு ஆச்சரியம் அடங்கவில்லை!



வாடா மலர்



கமலவேலன்

(காலை ஏழு மணி. சபேசன் ஆட்டோவில் வந்து தம் வீட்டில் இறங்குகிறார். சூட்கேஸ், மற்றும் சிறியதும் பெரியதுமாய் ஐந்தாறு பார்சல்கள். ஆட்டோ சத்தம் கேட்டு வீட்டில் உள்ளவர்கள் ஆவலோடு வாசலுக்கு விரைந்து வருகின்றார்கள்.)

சம்பத்: ஹைய்யா..... அப்பா வந்தாச்சு....! அப்பா வந்தாச்சு!

லலிதா: வாங்க அப்பா....!

காமாக்ஷிப் பாட்டி: ஏண்டாப்பா.. சபேசா... டெல்லியில ரொம்பக் குளிராமே....? பக்கத்து வீட்டு தண்டபாணி சொன்னான். உனக்கு குளிரு ஒத்துக்கிட்டுதா.... ஒரேயடியா மெலிஞ்சுட்டியே....

சபேசன்: அம்மா.... நானா மெலிஞ்சுட்டேன். சப்பாத்தியும் சப்ஜியுமா... சாப்பிட்டு ஒரு சுத்துப் பெருத்துப் போயிருக்கேன்.

மங்களம்: ஐய்ய.... பெருத்துப் போன ஆளைப் பார்த்தாத் தெரியலே! சர்.... ஒரு பெட்டியை இப்படிக் கொடுங்க... டேய் சம்பத்.... லல்லி... ஆளுக்கு ஒரு பார்சலை எடுத்து உள்ளே வையுங்க....

சபேசன்: மங்களம்.... முதலிலே எனக்குக் குளிக்கறதுக்கு வெந்நீர் வை. அலுப்புத் தீரக் குளிக்கணும்.

மங்களம்: சரிங்க....

(சபேசன், குளித்து முடித்து, உடை மாற்றி நடுக்கூடத்தில் ஈஸி சேரில் ஓய்வாகச் சாய்கிறார். லல்லி, சம்பத், பாட்டி எல்லாரும் அவரைச் சுற்றி அமர்கிறார்கள்.)

சபேசன்: லல்லி.... அந்தப் பார்சலைப் பிரித்துப் பாரேன்.

லல்லி: (ஆவலோடு பிரித்துப் பார்க்கிறாள்) நான் ரொம்ப நாளாக் கேட்ட 'டூ இன் ஒன்'! எவ்வளவு விலை ஆச்சு அப்பா?

பாட்டி: ஏண்டாப்பா.... காலேஜிலே படிக்கிறவளுக்கு இந்த ரேடியோ பெட்டியெல்லாம் என்னத்துக்கு? படிக்கிறது கெட்டுப் போயிடும்.

லல்லி: பாட்டி... நான் உங்களுக்கு பாட் (Pot) நிறைய டீ (Tea) போட்டுத் தர்றேன். நீங்க பாட்டுக்கு அப்பாகிட்டே எதையாவது சொல்லி....நான் பாட்டுக் கேக்கறதைக் கெடுத்துடாதீங்க!

சபேசன்: பார்த்தியா மங்களம், உன் பொண்ணு பாட்டிக்கு Pot Tea தரப்போறாளாம்! நல்லாப் பேசறா... உம். இந்தா..... இந்தப் பார்சல் உனக்கு.

மங்களம் (பிரித்துப் பார்க்கிறாள்): அடடே.... கேக் ஓவன்.

காமுப் பாட்டி: கேக் ஓவன்னா என்னடா? பெரிய அலுமினிய

பேஸின் மாதிரியிருக்கு!

சம்பத்: பாட்டி, இது கேக் தயாரிக்க... உதவுற பாத்திரம்.

பாட்டி: கேக்கும் ஷேக்கும் நமக்கு எதுக்குடா!

லல்லி: பார்ட்டி எதுவும் கொடுத்தா... நிறைய கேக் இதிலே தயாரிச்சுடலாம் பாட்டி.

பாட்டி (கோபத்துடன்): ஆமா, பாக்கு இடிக்கறதுக்கு நானும் ரொம்ப நாளா.... பாக்கு உரல் கேட்டு அலுத்துப் போயிட்டேன். கேக்கு தயாரிக்க மட்டும் டில்லியிலேயிருந்து பெரிசா வாங்கிட்டு வந்துட்டே. உம். வீட்டுக்காரி கேட்டுட்டா.... உடனே வந்துட்டுது!

மங்களம்: அத்தை.... இதை....நான் கல்யாணம் ஆன புதுசிலே கேட்டது. இப்பத்தான் பதினெட்டு வருஷம் கழிச்சு வந்து சேர்ந்திருக்கு!

பாட்டி: இப்போ, நான் என்னடி அம்மா சொல்லிட்டேன். எண்ணெயிலே போட்ட அப்பளமா, பொரியறே!

சம்பத்: மறந்தே போயிட்டேன். அம்மா, நீ ரொம்ப நாளா, தஞ்சாவூரிலே யிருக்கிற உன் சித்தி பெண்ணுக்கு ஒரு சப்பாத்திக் கல் கேட்டியே... வாங்கிட்டு வந்திருக்கிறேன்.

பாட்டி: வழுவழுன்னு எவ்வளவு 'பாலீஷா'யிருக்கு. ஏண்டா அப்பளம் போட்றதுக்குக் குழவியும் வாங்கியிருக்கியா?

லல்லி: கிழவி இல்லாமலா.... சே! சே! குழவி இல்லாமலா.... கல்லு மட்டும் வாங்குவாங்க. அதோ.... அங்கே பாருங்க குழவியிருக்கு!

சபேசன்: மங்களம் ஒரு ஸ்டூல் கட்டிலும் வாங்கியிருக்கிறேன். அதை வர்ற வழியில.... ராமகிரி வீட்டுல போட்டுட்டு வந்திருக்கிறேன்.... அப்புறமாப் போய் எடுத்துக்கிட்டு வரணும்.

லல்லி: அப்பா.... உங்களுக்கு ஏதாவது பணத்தைக்கொடுத்துக்கட்டிலே அவரே எடுத்துக்கப் போறாரு.

சபேசன்: ஒருநாள் பூரா...'பஞ்ச் குயின்' ரோடு முழுக்க அலேஞ்சு வாங்கியிருக்கேன். அந்தக் கட்டிலேக் கொடுக்க எனக்கு என்ன பைத்திய மா பிடிச்சிருக்கு?

(பக்கத்து வீட்டில் குடியிருக்கும் தண்டபாணி வருகிறார்.)

தண்டபாணி: சபேசா! உன் குரல் கேட்டுத்தான் வந்தேன். எப்போ வந்தே? உன் 'டிரெயினிங்'கெல்லாம் முடிஞ்சுதா?

சபேசன்: வாடா, தண்டபாணி, டெல்லியிலே நான் உன்னே நினேக்காத நாளே இல்லே....!

தண்டபாணி: ஆளேப் பார்த்த உடனே,'ஐஸ்' வைக்கறதிலே நீ பெரிய ஆள் ஆச்சே!

சபேசன்: 'ஐஸ் வாட்டரை'த்தான் இந்தியிலே 'தண்டா பாணி' ன்னு சொல்றுங்க. ஒரு டம்ளர் விலே அஞ்சு பைசா. அந்தத் 'தண்டா பாணி' குடிக்கும்போதெல்லாம் நான் இந்தத் தண்டபாணியை நினேச்சுப்பேன்!

தண்டபாணி (குபீர்ச் சிரிப்புடன்): ஓஹோ! அப்படியா! நல்லதமாஷ்தான். சரி... நான் கேட்ட 'லெதர் சூட்கேஸ்' வாங்கிக்கிட்டு வந்தியா?

சபேசன்: வாங்கிக்கிட்டு வராவிட்டால் நீ சும்மா விடுவியா! இதுக்காகவே 'கரோல்பாக்கிலே'யிருந்து 'பாலிகா பஜார்' போயி... 'செலக்ட்' பண்ணி வாங்கிட்டு வந்தேன். இதோ பாரு! (சூட்கேஸைக் காட்டுகிறார்)





தண்டபாணி: சபேசன், நீ சபாஷ் சன்! வேறே எங்கெல்லாம் சுத்திப் பார்த்தே?

சபேசன்: பதேபூர் சிக்ரி, ஆக்ரா, ஹரித்வார், ரிஷிகேஷ்.... எல்லா இடமும் போயிட்டு வந்தேன். இதோ பார் தாஜ்மஹால்முன்னாலேஎடுத்தபுகைப் படம்.

சம்பத்: அப்பா.... தாஜ் மஹால் முன்னாலே ரொம்ப 'ஸ்டைலா' நிக்கறீங்களே!

மங்களம்: ஷாஜஹான் மனைவிக்காக மாளிகையே கட்டினான். நான் கட்டிக்கிறதுக்கு ஒரு நல்ல புடைவையாவது எடுத்துட்டு வரலாமில்லே.

சபேசன்: நிறுத்து..... நிறுத்து! இந்தா நீ கேட்ட காஷ்மீர் சில்க்!

மங்களம்: கண்ணைப் பறிக்குதே... என்ன அழகு!

பாட்டி: புதுச் சேலையைப் பார்த்ததும் ஆலை சங்கு மாதிரி உங்க அம்மா, 'ஆ'ன்னு வாயைப் பிளக்குறா பாரு லல்லி.

சபேசன்: டேய் சம்பத்..... உனக்கு டெல்லி ஸ்வீட்ஸ் ரெண்டு கிலோ வாங்கிட்டு வந்திருக்கிறேன்.

(சம்பத் அதை எடுக்காமல் மௌனமாய் உட்கார்ந்திருக்கிறான்.)

சபேசன்: ஏண்டா, உம்முன்னு உறைஞ்சு போயி இருக்கிறே?

சம்பத்: நான் கேட்டதை நீங்க வாங்கிட்டு வரலையே....

மங்களம்: அப்படி என்ன அதிசயமானதைக் கேட்டுட்டே?

சம்பத்: படிக்கிறதுக்குச் சில புதிய புத்தகங்களைக் கேட்டிருந்தேன்.

மங்களம்: பெரிய புத்தகம்! இங்கே மெட்ராஸிலே கிடைக்காத புத்தகமா?

லல்லி: புத்தகத்தை வாங்கினா.... வைக்கறதுக்கு இடம் தேடணுமே.

பாட்டி: அதைச் சொல்லு.... கட்டிலு, நாற்காலி எல்லாமே இங்கே சர்க்கஸ் கூடாரத்துலே இருக்கிற மாதிரி கன்னாபின்னான்னு கிடக்கு.

சம்பத்: அம்மா.... டெல்லியிலே குழந்தைகளுக்காகவே புத்தகங்களை வெளியிடறகம்பெனி நிறைய இருக்கு. அவங்க பல அபூர்வப் புத்தகங்களை வெளியிடறாங்க.... அதெல்லாம் நம்ப ஊர்ல கிடைக்காது அம்மா!

சபேசன்: நான் அடியோட மறந்தே போயிட்டேன். எனக்குப் புத்தகக் கடைக்கெல்லாம்போறதுக்குநேரமும் கிடைக்கலே; பணமும் செலவாயிடுச்சு!

லல்லி: அப்பாதான் இவ்வளவு பொருள் வாங்கியிருக்காரே.... அப்புறமும் என்னடா புத்தகம் வேண்டிக்

கிடக்கு!

மங்களம்: இதுவே ஏகப்பட்ட சுமை. போதாததற்கு புத்தகப் பொதியையும் சுமக்கச் சொல்றியா?

சம்பத்: அம்மா, இப்ப..... அப்பா வாங்கிட்டு வந்திருக்கிற எல்லாமே கொஞ்ச காலத்திலே அழியப் போற பொருள். அதுக்காக அலைஞ்சு திரிஞ்சு வாங்கியிருக்காரு.

மங்களம்: புத்தகம் மட்டும் அழியாமலிருக்குமா?

சம்பத்: புத்தகத்தைப் படிச்சப்புறம் அந்த விஷயங்கள் நம்ம மனசுலே தங்கிடுமே!

தண்டபாணி: சம்பத் சொல்றது சரிதான்....

சம்பத்: மாமா, அறிவை வளர்க்கிற புத்தகங்களை வாங்கறதிலே மட்டும் நாம எப்பவுமே அக்கறை காட்டுறது கிடையாது. எங்க அப்பா மட்டுமல்ல; ரொம்பப் பேரோட அப்பாக்கள் அப்படித்தான். பல நூறு ரூபாய்களை கடைத் தெருவிலே வீணாச் செலவழிப்பாங்க.... ஆறு அஞ்சு ரூபா.... கொடுத்து ஒரு நல்ல புத்தகம் வாங்க யோசிப்பாங்க. இதை எங்க ஆசிரியர் அடிக்கடி சொல்லுவாரு. அது சரியாத்தான் இருக்கு!

தண்டபாணி: சபேசா.... உன் பையன் சம்பத் சொல்றது ரொம்ப சரி. நீ செய்தது தப்புத்தான்.

சபேசன்: தவறுதான் தண்டபாணி. புத்தகம் வாங்கணும்னு அது என்னவோ தண்டச் செலவுங்குற மனப்பான்மை என்னை மாதிரி ஆளுங்க கிட்டே இன்னும் இருந்துக்கிட்டுத்தான் இருக்கு.

தண்டபாணி: நானும் அப்படிப்பட்ட ஆள்தான். சம்பத்துதான் இப்ப நம்ப அறிவுக் கண்ணைத் திறந்துவிட்டவன். புத்தகங்கள் வாடா மலர். அவை வீட்டிலே இருந்தால், அறிவு மணம் எப்பொழுதும் வீசிக்கிட்டு இருக்குமே.

சபேசன்: சரி. இப்பவே டெல்லியிலுள்ள புத்தகக் கம்பெனிக்கு நல்ல குழந்தைகள் புத்தகமா, ஒரு செட் வி.பி.பி. யிலே அனுப்பச் சொல்லி ஆர்டர் பண்ணிடறேன். (சம்பத்தைப் பார்த்து) திருப்திதானே சம்பத்?

பாட்டி: சம்பத்து.... உனக்கு அறிவு சம்பத்து நிறையவேயிருக்கு.

மங்களம்: அவன் அறிவிலே என்னை மாதிரி.

தண்டபாணி: நல்லாச் சொன்னீங்க.....


சபேசன்: டேய்.... லெதர் சூட்கேஸ் வேணுமா, வேண்டாமா....!

தண்டபாணி: பிரதர், நான் என்ன தப்பா சொல்லிட்டேன். ரொம்பக் கோபிச்சுக்கறியே.... சரி, நாழியாகுது.... ஆபீஸ் புறப்படத் தயாராவோம்....

சபேசன்: சட்ட சபை இத்துடன் கலைகிறது. மீண்டும் ஏழு மணிக்குக் கூடுவோம்.

(அனைவரும் சிரித்தல்.)

(திரை)



மாமல்லன் விருதுகள்!

—குண்டுமணி



"விளையாட்டுக் கலையில் ஈடுபாடுள்ள சிறுவர்களுக்கு விளையாட்டுப் பள்ளிகள் ஆரம்பிக்கப் போகிறோம். இந்த விளையாட்டுப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு கல்வியுடன் இலவச உணவு, இலவச தங்கும் விடுதி, இலவச உடைகள் அனைத்தும் உண்டு. சிறுவர்களை அடிவேரிலிருந்து விளையாட்டுக் கலைகளில் ஊக்குவிப்பதற்காகவே இந்த விளையாட்டுப் பள்ளிகள்!" என்று மத்திய அரசின் விளையாட்டுத் துறை ராஜ்ய மந்திரி ஸ்ரீமதி மார்கரெட் ஆல்வா, மாமல்லன், விருது விழாவில் பலத்த கரகோஷத்துக்கிடையே அறிவித்தார்!

பல்லவ மாமன்னன் மாமல்லன் கலைகளில் வித்தகன். வருங்காலச் சந்ததிகளும் விளையாட்டுத் துறையில் வல்லுநராக விளங்க இந்த மாமல்லன் விருது அர்ஜுன விருதுவைப் போல ஓர் ஊக்கப் பரிசாகும். தமிழ்நாடு ஒலிம்பிக் கழகம் இந்த மாமல்லன் விருதுகளை இந்த வருஷம் மூன்று பளு தூக்கும் கலைஞர்களுக்கு வழங்கியது.

மகேந்திரன் லாஸ்ஏன்சேல்ஜ்ஒலிம்பிக்கில் பங்கு பெற்றவர். பளு தூக்கும் கலையில் 1984, 85ம் வருஷ தேசிய சாம்பியன். இன்று மகேந்திரன் ஐ.என்.எஸ். வல்ஸூராவில் பணியாற்றுகிறார்!

தென்னிந்திய ரயில்வேயில் பணியாற்றும் ஜி. தேவன் மூன்று வருஷங்கள் தொடர்ந்து தேசிய சாம்பியன் விருது பெற்றவர். உலக ரயில்வே போட்டியில் இவருக்கு வெண்கலப் பதக்கம் கிட்டியது.

டி. அகிலன் ரயில் பெட்டி கட்டும் தொழிற்சாலையில் வேலை பார்க்கிறார். டாக்காவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் சூடியவர்!

மூன்று மாமல்ல விருதுகளைத் தவிர, திறமைச் சான்று பத்திரம் பெற்றவர்கள் வரிசை இதோ: ஸ்டெல்லா மேரி கல்லூரி மாணவி மீனா கோபால், மதுரை பட்டதாரி ஜெயசந்திர பாண்டி, நீச்சல் போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்ற ரமா நரசிம்மன், நீச்சல் சாம்பியன் பி. சுனில் குமார், துப்பாக்கிச் சுடும் போட்டியில் தங்கம் கண்ட சண்முகம், சுமீத் சாங்கவி, கால்பந்தாட்டக்காரர் முகம்மது அம்ஜத், சையத் அஷ்ராப் ஹஸன், குத்துச் சண்டை சாம்பியன் எஸ். நித்தியானந்தன், சைக்கிள் வீரர் டி. பழனி, ஓட்ட வீராங்கனை யாஸ்மின்.

தேசியப் போட்டிகளிலும் சர்வதேசப் போட்டிகளிலும் வெற்றி சூடுவதற்கு இந்தப் பரிசுகள் டானிக்காக அமைகின்றன. தமிழகத்தில் விளையாட்டுக் கலைகளில் பூரணமாக ஈடுபடுத்திக் கொள்ளச் சிறுவர்களான உங்களுக்குப் பல வாய்ப்புக்கள் உள்ளன. கிராமப்புறங்களிலும் ஒளிந்து கிடக்கும் விளையாட்டுச் சிறுவர்களின் திறமையை வெளிக்கொணர விளையாட்டுப் பள்ளிகள் பாடுபடும் என்று எதிர்பார்ப்போம்! ரஷ்யா, கிழக்கு ஜெர்மனி போன்று சின்னஞ் சிறு வயதிலிருந்தே விளையாட்டுக் கலைகளில் ஈடுபட்டால்தான் சர்வதேச அளவில் பல சாம்பியன்களை உருவாக்க முடியும். அதற்கு முன்னோடியாக இளம் திறமைசாலிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் பல பரிசுகளை வழங்கும் தமிழக ஒலிம்பிக் கழகம் பாராட்டுக்குரியது.

புகழ் வீசும் புகழொளி

ஒரே ஆண்டிற்குள் 9 வது படிக்கும் ஒரு மாணவன் மத்திய, மாநில அளவில் 20 பரிசுகள் பெற்றிருக்கிறான் என்றால் இதுவரை வரலாற்றிலேயே கண்டறியாத ஒரு சாதனை என்றுதான் சொல்ல வேண்டும். இதுவரை செல்வன் வெ. புகழொளி பெற்றுள்ள மொத்தப் பரிசுகள் 88.


இவன் இந்த வயதில் தமிழிலும் ஆங்கிலத்திலும் மிக அருமையாகச் சொற்பொழிவாற்றுவதோடு இந்தியிலும் விசாரத் பட்டம் பெற்றிருக்கிறான். தமிழக முதல்வருக்கு அனுப்பிய வேண்டுகோளில் 1001 மாணவர்களிடம் கையெழுத்து வாங்கி அனுப்பிய பெருமையும் இவனுக்கு உண்டு. படிப்பிலும் ஆண்டுதோறும் முதல் நிலைப் பரிசு பெறும் இவன், சென்னை, திருச்சி வானொலி நிலையங்களில் பேட்டி அளித்திருக்கிறான்! இவன் இவ்வளவு தூரம் சிறந்து விளங்குவதற்கு முக்கிய காரணம் இவனுடைய தந்தை திரு. ஆ. வெற்றிவேலன் அவர்களும் இவன் பயிலும் மயிலாடுதுறை தேசிய மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் அளித்த ஊக்கமும் உற்சாகமுமேயாகும்.

கோகுலத்தில் 'விளையும் பயிர்' பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட புகழொளி, மேன்மேலும் புகழ் ஒளி பரப்புவான் என்று நம்புகிறோம்.

சென்னை வானொலி அண்ணா திரு கூத்தபிரான் பேட்டி காண்கிறார்



கண்டெடுத்த நோட்டு



ஆர். பரிமளா ராஜேந்திரன்

பள்ளி முடிந்து ரகுவும், அவனது சிநேகிதர்களும் வீட்டை—நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

காலால் மண்ணை இடறியபடியே நண்பர்களுடன் பேசிக் கொண்டு வந்த ரகு, நான்காக மடிக்கப்பட்ட ரூபாய்த் தாளொன்று கீழே கிடப்பதைக் கண்டு ஆவலாகக் குனிந்து எடுத்தான்.

கையில் எடுத்துப் பிரித்துப் பார்த்தவன் அது ஐம்பது ரூபாய்த் தாளாக இருப்பதைக் கண்டு சந்தோஷ மிகுதியில் "அய்... அம்பது ரூபாய்!" என்று கூறினான்.

அவன் நண்பர்களும், ரகுவைச் சூழ்ந்து கொண்டு, "ஆமாண்டா, ஐம்பது ரூபாய் நோட்டுடா!" என்று சொல்ல, "டேய் ரகு... இதை என்னடா செய்யப் போறே?" என்று ஒருவன் கேட்டான். மற்றொருவன், "டேய், வாங்கடா நாம எல்லோரும் அதோ அந்த கௌரிசங்கர் ஓட்டலுக்குப் போய், ஸ்வீட், ஸ்பெஷல் தோசை எல்லாம் சாப்பிடலாம்" என்று சொன்னான். எல்லோரும், "ஆமாண்டா, வாடா ரகு. போகலாம்" என்றனர்.

ரகுவும் தன் கையில் ஐம்பது ரூபாய் இருப்பது குறித்து மிகவும் பெருமையாக, "வாங்க, எல்லோருக்கும் ஸ்வீட், காரம், காப்பி வாங்கித் தர்றேன்" என்றான். சொல்லியபடி நண்பர்களுடன் ஓட்டலில் நுழைந்தான்.

எல்லோரும் திருப்தியாகப் பிடித்த உணவு வகைகளைச் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தனர். "டேய் ரகு, மிச்சமிருக்கிற காசிலே சாக்லேட் வாங்குடா" என்று ஒருவன் சொல்ல, ரகுவும் எல்லோருக்கும் சாக்லேட் வாங்கிக் கொடுத்தான். பிறகு மிகவும் உற்சாகமாக நண்பர்களுடன் நடந்தான்.

தெருக்கோடியில் ஏதோ கூட்டமாக இருப்பதைக் கண்ட ஒருவன், "டேய், வாங்கடா. அங்கு ஏதோ வித்தை காட்டறாங்க போலிருக்கு" என்றான். உடனே எல்லோரும் அங்கே ஓடினர்.

அங்கு ஒரு பெரியவர் பிளாட்பாரத்தில் உட்கார்ந்து அழுது கொண்

டிருக்க, அவரைச் சுற்றி ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது.

''என்ன பெரியவரே, எந்த இடத்தில தொலைஞ்சுது? எத்தனை ரூபா?'' என்று ஒருவர் கேட்க,

கிழவர் அழுதபடியே பதில் கூறினார்: ''ஐம்பது ரூபா, முழு நோட்டு சாமி, நாலா மடிச்சு இடுப்பு வேட்டியிலசொருகியிருந்தேன். எங்கேவிழுந்துச்சின்னு தெரியவில்லை. இந்தத் தெருவிலே நாலு தடவை நடந்து தேடிப்பார்த்துவிட்டேன். இந்தவாரக் கூலி சாமி. இன்னைக்குத்தான் வாங்கினேன். இதைக் கொண்டு போய் வீட்டிலே கொடுத்துத்தான், அரிசி, பருப்பு, எல்லாம் வாங்கணும், இதை வச்சுத்தான் இந்த வாரம் முழுக்க புள்ளை குட்டிங்க கஞ்சி குடிக்கணும். தொலைஞ்சு போச்சே. நான் என்ன செய்வேன்? எப்படி வீட்டுக்குப் போய் இதைச் சொல்லுவேன்...?'' பெரியவர் குரலெடுத்துப் பெரிதாக அழத் தொடங்கினார்.

''சரி... சரி... அழுதாத் தொலைஞ்சது திரும்பக் கிடைக்குமா? வீட்டுக்குப் போப்பா... யாருக்கிட்டேயாவது கைமாத்து வாங்கி இந்த வாரத்தை ஓட்டு, எழுந்திரப்பா.''

அங்கிருந்த ஒருவர் இப்படிச் சொல்ல, கூட்டம் மெதுவாகக் கலையத் தொடங்கியது.

திக்பிரமை பிடித்தபடி நின்றான் ரகு... பெரியவர் அழுதபடி சொன்னதைக் கேட்டவுடன் துயரம் அவன் மனத்தை வருத்தியது... 'கடவுளே, நாம் செலவு செய்தது, இந்தப் பெரியவர் கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்த பணமா, அவர் ஒரு வாரம் குழந்தைகளுக்குக் கஞ்சி ஊத்தலாம் என்று வைத்திருந்ததை, நாம் ஒரே வேளையில் சாப்பிட்டுத் தீர்த்து விட்டோமே...!' சாப்பிட்ட ஸ்வீட், காரம், காப்பி எல்லாம் வயிற்றை என்னவோ செய்தன.

நண்பன் ஒருவன் அவனை உலுக்கினான். ''டேய், ரகு, வாடா போகலாம். ஏதோ வித்தை காட்டறாங்கன்னு வந்து பார்த்தா... இந்தக் கிழவர் அழுதுக்கிட்டு உட்கார்ந்திருக்காரு...'' அவனை அழைத்துக் கொண்டு நண்பர்கள் நடந்தனர்.

ரகு மனது கேட்காமல், நண்பர்களிடம், ''நாம் சாப்பிட்டது இந்தப் பெரியவரோட பணத்தில்தான் இருக்கும். பாவம்டா அந்தப் பெரியவர். இப்ப என்னடா செய்யுறது?'' துயரத்துடன் வினவினான்.

''அடேயப்பா. இவன் ஒருத்தன். இதுக்கெல்லாம் போய் பெரிசா வருத்தப்பட்டுக்கிட்டு. நமக்கு இன்னிக்குக் கிடைக்க வேண்டிய நேரம் பணம் கிடைச்சுது, செலவு பண்ணினோம். நாம் என்ன அந்தக் கிழவர் கிட்டேயிருந்தா பணத்தைத் திருடினோம்? பின் எதற்கு வருத்தப்படணும்? இதைப் போய் பெரிசா நினைக்காதே...'' நண்பர்கள் சமாதானம் சொல்ல எல்லோரும் அவரவர் வீடு நோக்கிச் சென்றனர்.

வீட்டில் நுழைந்த ரகு, ஊரிலிருந்து சின்ன மாமா வந்திருப்பதைக் கண்டு, ''வாங்க மாமா'' என்றபடி புத்தகப் பையுடன் உள்ளே சென்றான்.

''என்ன ராஜம், ரகு என்னவோ போல் இருக்கிறான்! என்னைப் பார்த்தாலே சந்தோஷமாகக் குதிப்பானே! 'கதை சொல்ற மாமா வந்தாச்சு. இனிமேல் ஜாலிதான்' அப்படின்னு சொல்லி சந்தோஷப்படுவானே. அவனுக்கு என்ன ஆச்சு?'' என்று தங்கையிடம் வினவினார் வடிவேலு.

''என்னவோ தெரியலை அண்ணா. காலையிலே ஸ்கூலுக்குப் போகும் போது நல்லாத்தான் இருந்தான். இப்பத்தான் இப்படி இருக்கிறான், என்னன்னு விசாரிக்கணும்'' ராஜம் பதில் கூறினாள்.

''ரகு ஏன்ன செய்யறே? வா.. பீச்சுக்குப் போய் வரலாம்...''

மாமா அழைக்க,

''இல்லை மாமா... நான் வரலை. எனக்குத் தலையை வலிக்குது.''

''தலைவலியா? அப்படின்னா கடற்காற்றுப் பட்டால் எல்லாம் சரியாகி விடும்.'' வற்புறுத்தி ரகுவை அழைத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்தார் வடிவேலு.

அழகான மடிப்புகளாக வந்துசெல்லும் அலைகளையே பார்த்த வண்ணம் மௌனமாக உட்கார்ந்திருந்த ரகுவை அருகில் அழைத்து,

''என்ன ரகு... மாமாக்கிட்டே

சொல்லு. என்ன பிரச்னையாக இருந்தாலும் தீர்த்து வைக்கிறேன். தயங்காமல் சொல்லப்பா.''

தன் மனத்திலுள்ள எண்ணங்களை மாமாவிடம்சொல்லிஆறுதல்அடைய வேண்டும் என்ற ஆதங்கத்துடன் பேச்சை ஆரம்பித்தான் ரகு.

''மாமா, கீழே கிடந்து ரூபாய் கண்டெடுத்தால் என்ன மாமா செய்யணும்?'' மாமாவைப் பார்த்துக் கேட்டான், ரகு.

''கீழே கிடக்கிற பணம் நிச்சயம் யாரோ தவற விட்டதாத்தான் இருக்கணும். பணத்தைத் தவற விட்டவங்க. நிச்சயம் அதைத் தேடிக்கிட்டு வருவாங்க. அதனாலே நாம் சிரமம் பார்க்காமே, கொஞ்ச நேரம் அங்கேயே இருந்து, யாரும் தேடிக்கிட்டு வர்றாங்களான்னு பார்க்கணும். அப்படி யாரும் வந்தா, அவங்களை விசாரிச்சு, எவ்வளவு ரூபா தொலைஞ்சுதுன்னு கேட்டு, அவங்க பதில்சொல்றதன் மூலம், அவங்க பணம்தான் அதுங்கிறது தெரியும்போது, பணத்தை அவங்க்கிட்டே சேர்ப்பிக்கணும். அப்படி யாரும் வரல்லேன்னா நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், பணத்தைக்கொடுத்து, விவரத்தைச் சொல்லணும். போலீஸ் ஸ்டேஷன் இல்லாத ஊராயிருந்தால், கோயில் உண்டியலிலே போட்டு, 'கடவுளே, இதை எந்த வழியிலாவது உரியவங்ககிட்டே சேர்த்திடு'ன்னு பொறுப்பை ஆண்டவன்கிட்டே ஒப்படைக்க வேண்டியதுதான்., எந்தக் காரணத்தைக் கொண்டும் அந்தப் பணத்திற்கு நாம் சொந்தம் கொண்டாடக் கூடாது.''

மாமா சொன்னதைக் கேட்டதும், ''என்னை மன்னிச்சிடுங்க மாமா'' என்றபடி மாமாவின் தோளில்சாய்ந்து அழுதான் ரகு.

''என்ன ரகு... ஏன் நீ அழறே...? விவரமாச் சொல்லு...'' மாமா அவனைத் தட்டிக் கொடுத்து விவரம் கேட்க,

ரகு நடந்தவற்றை ஒன்று விடாமல் மாமாவிடம் கூறினான்.

''அந்தப் பெரியவரைப் பார்த்தால் பாவமாக இருக்கு மாமா... அவர் பணத்தைச் செலவழிச்சுட்டோமேன்னு எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு மாமா...''

''கவலைப்படாதே ரகு... நீ தெரிஞ்சு எந்தத் தவறும் செய்யல்லே... இனிமே அப்படிச் செய்யாதே...! வா... போய் அந்தப் பெரியவர் இன்னமும் அங்கே இருக்காரான்னு பார்ப்போம்.'' ரகுவுடன் நடந்தார் மாமா வடிவேலு.

விளக்குக் கம்பத்தில் சாய்ந்தவாறு, அழுத கண்களுடன், அந்தப் பெரியவர் அங்கேயே அமர்ந்திருந்தார்.

''பெரியவரே... ஐயா பெரியவரே..''



வடிவேலு அழைக்க, அவர் மூடிய கண்களைத்திறந்து, பரிதாபமாக அவர் களைப் பார்த்தார்.

''இந்தப் பணம் உங்களோட பணமா பாருங்க...?'' ஒரு ஐம்பது ரூபாய் நோட்டை அவர் முன் காண்பித்தார்.

பெரியவர் கண்கள் பிரகாசமாக, ''ஆமாங்க... என்னுடைய பணம்தானுங்க! ஐம்பது ரூபாய். தொலேஞ்சது.. ஆமாங்க...'' என்று பரவசத்துடன் இரு கைகளாலும் வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

''ஐயா... ரொம்பவும் நன்றிங்க... இந்தப் பணம் என்னுடைய பணம்னு... உங்களுக்கு எப்படிங்க தெரிஞ்சது?'' நன்றி பொங்கும் கண்களுடன் வினவினார்.

''அங்கு ஒரு கடையிலே பேசிக்கிட்டாங்க. அதனுலே கீழே கிடந்த இந்த ரூபா... உங்களுடையதாகத்தான் இருக்கும்னு எடுத்து வந்தோம்.''

''ஐயா. நீங்க நல்லா இருக்கணும். எங்க குடும்பத்தைப் பட்டினியி லிருந்து காப்பாத்திட்டீங்க. கீழே கிடந்து எடுத்தாலும், அதைச் சொந்தம் கொண்டாடாமே, கொண்டு வந்து கொடுத்தீங்க... இந்தப் பெரிய மனசுக்கு நீங்க நல்லா இருக்கணும் சாமி. உங்களே நினேச்சு நாங்க இந்த வாரம் முழுக்க கஞ்சி குடிப்போம்... வர்றேங்க ஐயா... வீட்டுக்குப் போகணும், புள்ளே குட்டிங்க தேடும்...'' என்று புதுத் தெம்புடன் எழுந்து நடந்தார்.

''இந்தாங்க பெரியவரே, இதிலே அஞ்சு ரூபா இருக்கு. பிள்ளேகளுக்கு ஏதாவது பலகாரம் வாங்கிட்டுப் போங்க,'' என்று மேலும் ஓர் ஐந்து ரூபாயை அவரிடம் அன்புடன் கொடுத்தார் வடிவேலு.

''ரொம்ப நன்றிங்க'' என வாழ்த்தியபடி பெரியவர் சென்ருர்.


ரகு மாமாவைப் பார்த்தான். ''மாமா, இப்போ மனதுக்கு எவ்வளவு நிம்மதியும், சந்தோஷமும் கிடைச்சிருக்கு, தெரியுமா...? அந்தப் பணத்தைச் செலவழிச்சப்போ, கிடைக்காத திருப்தி, இப்போது எனக்குக் கிடைச்சிடுச்சு, மாமா. இனிமேல் எந்தப் பொருளேக் கண்டெடுத்தாலும் உரியவங்ககிட்டே சேர்ப்பேன் மாமா. இது சத்தியம். எனக்காக நீங்க அந்தப் பெரியவருக்குப் பணம் கொடுத்து உதவினதுக்கு ரொம்பவும் நன்றி மாமா!''

''என்ன ரகு இது... உன் நிம்மதி தான் என் சந்தோஷம்... வா, வீட்டுக்குப் போகலாம்... இன்னேக்கு ராத்திரி உனக்கு அரிச்சந்திர மகாராஜா கதையைச் சொல்லப் போறேன்.''

ரகு அளவிட முடியாத சந்தோஷத்துடன், மாமாவின் கைகளைப் பிடித்தபடி வீடு நோக்கி நடந்தான்.

'கார்க்' பொம்மைகள்

பல அளவுகளில் (பாட்டில்) கார்குகளேயும், குண்டூசிகளேயும் உபயோகித்து படத்தில் காட்டியது போல் பல தமாஷான படிவங்களில் விளேயாட்டுப் பொம்மைகளேத்தயாரிக்கலாம். பொம்மைக்கு ஏற்றபடி வர்ணத்தையும் பூசிவிட்டால் பார்க்க மிக அழகாக இருக்கும்.




டாக்டர்... டாக்டர்...

எங்கள் குடும்ப வைத்தியர் மிகச் சிறப்பாக ஆலோசனைகள் சொல்வார். இதோ, அவர் நோயாளிகளுக்கு வழங்கிய ஆலோசனைகளுள் சில....




நோயாளி: டாக்டர்! அதிகமா முடி உதிருது! என்ன பண்ணலாம்?

டாக்டர்: உதிர்ந்த முடியை எல்லாம் சேர்த்து வச்சு சவுரி கட்டுங்க!



நோயாளி: டாக்டர்! ராத்திரி தூக்கமே வரமாட்டேங்குது. என்ன பண்றது?

டாக்டர்: எங்கேயாவது நைட் வாட்ச்மேன் வேலைக்குச் சேருங்க!



நோயாளி: டாக்டர்! காலில் பலமாக அடிபட்டுவிட்டது; ஊன்றவே முடியவில்லை. என்ன பண்றது?

டாக்டர்: நொண்டி நொண்டி நடங்க!



பருமனானவர்: டாக்டர்! நான் குதிரை சவாரி பண்ணினால் உடல் இளைக்குமா?

டாக்டர்: இளைக்கும், குதிரையின் உடல்!




நோயாளி: டாக்டர்! மூச்சுவிட ரொம்ப சிரமமாக இருக்கு! என்ன பண்றது?

டாக்டர்: கவலைப்படாதீங்க! நிறுத்திடறேன்.

— தேனி கோ. இரமேஷ்

Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras—600 032. (Phone: 431543) Editor: K. Rajendran.



பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார்

தோற்றம்: 16-10-1881 மறைவு: 24-10-1953

"Hey Sweeties, look what's new from NP"



Jelly Belly and Yogo

A SOFTY AT HEART — CHEWY ALL THE WAY

In fruity flavours you've never tasted before



Pop in a Yogo. Chew a creamy dream. Just one toffee. But what a juicy mouthful.

Pop in a Jelly Belly. Rock'n roll around the hard coating. Bite it..... Crunch. The soft centre wins your heart - tang!

Get ready for more. Because you'll never lose your taste... long after they mmmelt.

NP CONFECTIONERY LTD.

135, Kaval Byrasandra, Bangalore 560 032.

Dattaram/NP/3A-86